பருவவெளியீட்டு...
யாழ்ப்பாண பொதுநூலகம்

இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 40

சுடர் 32 | கதிர் 224 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆனி 24 சனிக்கிழமை 08.07.2017

## கொக்குவில் இந்துவில் கற்றல் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 8
கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு முறையற்ற வகையில் அதிபர் நியமனம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்து வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளைமறுதினம் திங்கட்கிழமை கற்றல் புறக்கணிப்புக்கு பழைய மாணவர் சங்கத்தால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

>> 37



வரலாற்றுச் சிறப்பு மிக்க நயினை நாகபூசணி அம்மன் ஆலய சப்பைரதத் திருவிழா பெருந்திரளான பக்தர்கள் மத்தியில் நேற்று நடைபெற்றது. (ற)

## நயினை நாகபூசணி இன்று தேரில் பவனி

யாழ்.ஜூலை 8
வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்தத் தேர்த் திருவிழா இன்று காலை 10 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. வழமை போன்று

>> 37

## இந்தியா குறித்து தவறான தகவல்

*தூதுவர் தரன்ஜித் சிங் கவலை*



கொழும்பு, ஜூலை 8
இந்திய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்துத் தவறான, பிழையான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளதாக இலங்கைக்

>> 04

## அனுமதியின்றி இந்தியா செல்ல முயன்ற தமிழ்ப் பொலிஸ் அதிகாரி கட்டுநாயக்கவில் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஜூலை 8
பொலிஸ் தலைமையகத்திடம் உரிய அனுமதியைப் பெற்றுக் கொள்ளாமல், இந்தியாவுக்குச் செல்ல முயன்ற யாழ்ப்பாணத்தில் பணியாற்றும் தமிழ்ப் பொலிஸ் அதிகாரி, கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் வைத்து குற்றப்புலனாய்

>> 37

## டக்ளஸின் பிரேரணை விவாதத்துக்கு வரவில்லை

கொழும்பு, ஜூலை 8
போரின்போது உயிரிழந்த மக்களை நினைவுகூருவதற்காக நினைவுத் தூபியொன்றை அமைத்தல் மற்றும் நினைவுகூரலுக்

>> 37

## இடைக்கால அறிக்கை செவ்வாய் இறுதியாகும்

*வழிநடத்தல் குழுவின் சிறப்பு அமர்வில்*

யாழ்ப்பாணம், ஜூலை 8
வழிநடத்தல் குழுவின் சிறப்பு அமர்வு எதிர்வரும் செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது. இதன்போது இடைக்கால அறிக்கையை இறுதி செய்யும் நடவ

>> 34

## புதிய அரசமைப்புத் தொடர்பில் உறுதியும் இறுதியுமான முடிவை எடுப்பதற்காக கூடுகிறது ஆளும் தரப்பு

*மைத்திரி-ரணில் தலைமையில் சிறப்புக் கூட்டம்*

கொழும்பு, ஜூலை 8
புதிய அரசமைப்புக்கு எதிர்ப்புகள் வலுத்துவரும் நிலையில், அரசமைப்பு தயாரிப்புப் பணி குறித்துப் பேச்சு நடத்தி உறுதியான இறுதியான முடிவொன்றை எடுப்பதற்காக அரச தலைவர், தலைமை அமைச்சர் ஆகியோர் தலைமையில் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு இடையிலான சிறப்புக் கூட்டமொன்று விரைவில் நடைபெறவுள்ளது.
இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்றும், கூட்டத்தின் பின்னர் அரச தலைவர், தலைமை அமைச்சர் ஆகியோர் கூட்டு அறிவிப்பொன்றை விடுக்கவுள்ளனர் என்றும் அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

>> 37

## 10 ஆண்டுகளாகத் தடுப்பிலிருந்த அரசியல் கைதி நேற்று விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 8
10 வருடங்களுக்கு மேலாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதி கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்றால் நேற்று விடுவிக்கப்பட்டார்.
கிளிநொச்சியைச் சேர்ந்த

>> 37

## குடும்பத் தலைவர் டெங்கால் சாவு

வவுனியா, ஜூலை 8
டெங்குத் தொற்றுக்குள்ளான ஒருவர் நேற்று வவுனியாவில் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
கற்பகபுரத்தைச் சேர்ந்த 33 வயதுடைய குடும்பத் தலைவரே இவ்வாறு உயிரிழந்தார். இவர் கடந்த 4ஆம் திகதி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச்

>> 37

## யாழ்.மாநகர சபை நிதி மோசடி: பணியை மீள வழங்கினால் நிலுவையைச் செலுத்துவதாக பெண் அலுவலர் கோரல்

யாழ்ப்பாணம், ஜூலை 8
யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆவணங்கள் ரீதியான வருமானத்தில் 23 லட்சம் ரூபாவை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட பெண் அலுவலர், தன்னை சேவையில் மீள இணைத்தால் மாதச் சம்பளத்தில் சபைக்குச் செலுத்த வேண்டிய நிலுவையை தவணையடிப்படையில் வழங்குவதாக மாநகர ஆணையாளரிடம் எழுத்துமூலம் கேட்டுள்ளார்.

>> 37

## 300 பொருத்து வீடுகளுக்கு பயனாளிகளை தாருங்கள்

*யாழ்ப்பாண மாவட்டச் செயலருக்கு மீள்குடியேற்ற அமைச்சு கடிதம்*

யாழ்ப்பாணம், ஜூலை 8
300 பொருத்து வீடுகளுக்குப் பயனாளிகள் பட்டியலைத் தேர்வு செய்து அனுப்பி வைக்குமாறு, மீள்குடியேற்ற அமைச்சின் செயலா

>> 37

## மயிலிட்டித்துறை விடுவிப்புக்கு என்னை ஏன் அழைக்கவில்லை?

*மாவட்டச் செயலரிடம் விளக்கம் கேட்கிறார் விக்கி*

யாழ்ப்பாணம், ஜூலை 8
27 வருடங்களின் பின்னர் மயிலிட்டித் துறைமுகம் மக்களிடம் கடந்த 3 ஆம் திகதி ஒப்படைக்கப்பட்டது. இந்த நிகழ்வுக்குத் தன்னை ஏன் அழைக்கவில்லை என்று,

>> 37

## எத்தகைய எதிர்ப்புக்கள் வந்தாலும் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும்

*தலைமை அமைச்சர் ரணில் மன்னாரில் உரை*

மன்னார், ஜூலை 8
நாட்டில் எத்தகைய எதிர்ப்புக்கள் வந்தாலும் புதிய அரசமைப்பை உருவாக்கும் பணிகள் தொடரும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
மன்னாரில் நேற்று உலர் வலய நீர் வழங்கல் திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்

>> 37

## வடக்கு விவகாரத்தை ஊதிப் பெருப்பிக்காது தீர்வு காணவேண்டும்

*எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் கருத்து*

யாழ்ப்பாணம், ஜூலை 8
வடக்கு மாகாண சபை விவகாரம் ஊதிப் பெருப்பிக்கப்படக்கூடாது. விரைவில் இந்த விடயத்துக்கு முடிவு கட்டப்பட வேண்டும். வடக்கு மாகாண முதலமைச்சரை எப்போது சந்தித்துப் பேசுவது என்று இது வரை தீர்மானிக்கப் படவில்லை. ஆனால் விரைவில் சந்திப்பு நடக்கும்.

>> 37

## கோத்தாவை கைது செய்ய வலியுறுத்திப் போராட்டம்!



கொழும்பு, ஜூலை 8
முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்சவை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி சிறைக் கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழு நேற்று கொழும்பு, புதுக்கடை நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாக

>> 37

## ஐ.எஸ். அமைப்பில் இருந்த இலங்கையர்

கொழும்பு, ஜூலை 8
பிலிப்பைன்ஸில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலில் ஐ.எஸ். பயங்கரவாதியாகச் செயற்பட்ட இலங்கையர் உயிரிழந்துள்ளதாக பிலிப்பைன்ஸ் அரச தலைவர் ரொட்றிக்கோ டுடேர்தே உறுதி

>> 04

## எவ்.சி.ஐ.டியை மைத்திரியிடம் ஒப்படைக்குக

*வலியுறுத்துகிறார் அமைச்சர் மனோ*

கொழும்பு, ஜூலை 8
"அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கோரியது போன்று, சட்டம், ஒழுங்கு

>> 04

newuthayan.com புதுப் பொலிவுடன் உதயன் இணையத்தளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## 129 நாள்கள் கடந்து கேப்பாபிலவு மக்களின் மண் மீட்புப் போரட்டம் தொடர்கின்றது

முல்லைத்தீவு, ஜூலை 8
"தெருவீதியில் உள்ள தூசுகள், அழுக்குகள்என்பவற்றைசுவாசித்துக் கொண்டு வருத்தம், துன்பத்துடன் தொடர்ந்தும் வீதியில் காத்து இருக்கின்றோம். எங்கள் நிலம் எங்களுக்கு வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன்தான் இங்கே இருக்கின்றோம்."
இவ்வாறு கேப்பாப்பிலவு மண்ணை மீட்டெடுக்கும் போராட்டத்தில்கலந்துகொண்ட ஒருபெண்மணி தெரிவித்தார்.
படையினர் ஆக்கிரமித்துள்ள கேப்பாப்பிலவு மண்ணை மீட்டெடுக்கும் போராட்டத்தில் அந்தப்பகுதி மக்கள் ஈடுபட்டுள்ளார்கள். அவர்களின் போராட்டம் நேற்றுடன் 129 நாளைக் கடந்தது. இதுவரை எத்தனையோ அரசியல்வாதிகள் அவர்களின் போராட்ட இடத்துக்குச் சென்று பார்த்தும் இதுவரை எந்தவிதமான பயனும் ஏற்படவில்லை என்று மக்கள் தெரிவித்தனர்.
"எங்கட காணிகளுக்குள் செல்வதற்காக இந்த இடத்தில் 129 நாள்களாக இருக்கின்றோம். என்றாவது ஒரு நாள் விடுவார்கள்என்றஏக்கத்துடன் இருக்கின்றோம். ஆனால் எங்கள் ஏக்கம் இன்னமும் நிறைவேறவில்லை.
உங்கள் காணிகளுக்குள் நீங்கள் செல்லலாம். விரைவில் உங்கள் காணிகளுக்குள் நீங்கள்குடியேறலாம்எனவருபவர்கள்எல்லோரும்சொல்லிச்செல்கின்றார்கள்.
ஆனால் இதுவரை இந்த தெருவீதியிலேயேஇருக்கின்றோம். எங்களுடைய காணிக்குள் இருக்கும் வருமானம் எங்களுக்குப் போதுமானது. இன்று வெளியில் பட்டினியுடன் நாம் உள்ளோம்.
எங்களுடைய வாழ்வாதாரத்தை சிங்கள இராணுவம் ஆளுகின்றது. விரைவில் எங்கள் காணியை எங்களுக்கு மீட்டுத்தாருங்கள்" என்என்று போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர். (10)



## காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் போராட்டம் தீர்வின்றி தொடர் கின்றது

யாழ்ப்பாணம், ஜூலை 8
காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தவும் விடுவிக்கவும் வலியுறுத்தி அவர்களின் உறவினர்கள் நடத்தும் போராட்டங்கள் தீர்வின்றித் தொடர்கின்றன.
"இலங்கையில் கடந்த காலத்தில் நிலவிய போர்ச் சூழ்நிலையின் போது கடத்தப்பட்டும், கைதுசெய்யப்பட்டும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் ஒருபுறம் இருக்க, போரின் இறுதி நாள்களில் இலங்கை இராணுவத்தின் உத்தரவுக்கு அமைய சரணடைந்த மற்றும்இராணுவத்திடம்உயிருடன் உறவினர்களால் ஒப்படைக்கப்பட்ட முன்னாள் போராளிகள் வலிந்து காணாமல்போகச்செய்யப்பட்டனர். போராளிகள் மாத்திரமன்றி குற்றுடலும்குறையுயிருமாகஅரசகட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இடம்பெயர்ந்த போது இராணுவ சோதனைச் சாவடிகளில் வைத்தும், முகாம்களில் வைத்தும், இலங்கை இராணுவத்தினராலும் புலனாய்வாளர்களாலும் கைதுசெய்யப்பட்ட நிலையில் பல நூற்றுக் கணக்கானோர் காணாமல் போகச் செய்யப்பட்டுள்ளனர்.
அவர்கள்தொடர்பில்அரசுபதிலளிக்க வேண்டும்" என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய இடங்களில் தொடர் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன.
கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில்காணாமற்போனோரது உறவுகள் நடத்தும் போராட்டம் இன்றுடன் 138 ஆவது நாளைக் கடந்துள்ளது.
முல்லைத்தீவு உறவுகள் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் முன்பாக வீதியோரத்தில் கூடாரம் அமைத்து போராட்டத்தில் ஈடுப்பட்டு வருகின்றனர். இவர்களின் போராட்டம் நேற்றுடன் 122 நாளைக் கடந்து தீர்வின்றி செல்கின்றது.
யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் மேற்கொண்டுவரும்போராட்டம்நேற்றுடன்115நாளாகத் தொடர்கின்றது.
திருகோணமலை யில் நடத்தப்படும் போராட்டம் நேற்றுடன் 126 ஆவது நாளை எட்டியுள்ளது.
இவ்வாறு தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி பல்வேறு வழிகளில், பல்வேறு வடிவிலான போராட்டங்களை முன்னெடுத்த போதிலும் அவை கவனிப்பாரற்ற நிலையிலேயே தொடர்கின்றன.
"இலங்கை அரசின் அற்ப சொற்ப சலுகைகளுக்குசோரம்போகமாட்டோம். எமக்குரியபதில்வழங்கப்படும்வரை எமது போராட்டம் முன்னெடுக்கப்படும். எமது துன்பம் இந்த அரசுக்கு புரியவில்லையாஎதற்காகஇன்னும் எம்மை வீதியில் துன்பப்பட வைத்து வேடிக்கை பார்க்கின்றனர்" என போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் ஆதங்கத்துடன் தெரிவித்தனர். (10)

## ஏறாவூர் இரட்டைக் கொலை; விளக்கமறியல் நீடிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 8
மட்டக்களப்பு ஏறாவூர் இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பான சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள ஆறுபேரதும் விளக்கமறியல் எதிர்வரும் 21ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.
சந்தேக நபர்கள் நேற்று ஏறாவூர் சுற்றுலாநீதிவான்நீதிமன்றில்மட்டக்களப்பு மேலதிக நீதிபதி எம்.ஐ.எம்.றிஸ்வி முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.
ஏறாவூர் முகாந்திரம் வீதி முதலாம் ஒழுங்கையிலுள்ளவீட்டில்படுத்துறங்கிய 56 வயதான என்.எம். சித்தி உசைரா மற்றும் அவரது திருமணமானமகளான32வயதுடைய ஜெனீரா பாணு மாஹிர் ஆகியோர்கடந்தவருடம்செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி அதிகாலை பொல்லால் அடித்து கொடூரமாகக் கொலை செய்யப்பட்டிருந்தனர்.
இந்தச்சம்பவம்தொடர்பாகசந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள 24 வயதுடைய முஹம்மது பாஹிர், வசம்பு என்றழைக்கப்படும் 28 வயதுடைய உசனார் முஹம்மது தில்ஷான், 23 வயதுடையகலீலுர்ரகுமான்முஹம்மது றாசிம், 23 வயதுடைய புஹாரி முஹம்மது அஸ்ஹர், 30 வயதுடைய இஸ்மாயில் சப்ரின் மற்றும் 50 வயதுடைய அபூபக்கர் முகம்மது பிலால் ஆகியோருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. (10)

## நாவற்குழி விகாரை வழக்கு ஒத்திவைப்பு

தென்மராட்சி, ஜூலை 8
சாவகச்சேரிபிரதேசசபைஎல்லைக்குட்பட்ட நாவற்குழி தேசிய வீடமைப்புஅபிவிருத்திஅதிகாரசபைக்குச்சொந்தமானகாணியில்பிரதேச சபையின்அனுமதியின்றிவிகாரை அமைப்பது தொடர்பாக பிரதேச சபையால் தொடுக்கப்பட்ட வழக்கு நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.
பிரதேச சபையின் நியதிச் சட்டங்களுக்குஅமைவாககட்டடம்அமைக்கப்பட முன்னர் பிரதேச சபையில் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுஉரியஅதிகாரிகளால்பார்வையிடப்பட்டு விதிமுறைகளுக்கு ஏற்ப அமையவுள்ளதுஎன்பதைஉறுதிப்படுத்த வேண்டும். பிரதேச சபையால் கோரப்படும் ஆவணங்களைபிரதேசசபையில்சமர்ப்பிக்க வேண்டும்.
அந்த நடை முறை பின்பற்றப்படாததால் விகாரை தொடர்பில் குற்றச்சாட்டுப்பத்திரம்சமர்ப்பிக்கப்பட்டது.
இந்த வழக்கு இன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அதன் போது குற்றச்சாட்டுப்பத்திரம் நீதிமன்றில் வாசிப்பது இடைநிறுத்தப்பட்டு இருபகுதியினரும் சுமுகமாக முடிவு ஏற்படுத்தப்பட்ட பின்னர் வரும் தவணையில் அது தொடர்பில்முடிவுஎடுக்கப்படும்எனத்தெரிவிக்கப்பட்டுஎதிர்வரும்செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.
வழக்கு விசாரணைக்கு வந்த நாவற்குழிசமுத்திசுமணவிகாரையின் விகாராதிபதி ரத்னசிறி தேரர் வழக்குக்குஅழைத்தவேளையில் அவர் எதிராளிகளுக்கான கூட்டினுள் ஏற முற்பட்டார். நீதிவான் அதற்குள்ஏறவேண்டாமெனக்கூறி ஆசனம் கொடுத்து கூண்டுக்கு முன்பாக அமரச்செய்தார்.
நீதிமன்றில் 3 பௌத்தமதகுருமார், யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் திணைக்கள பொலிஸ் அத்தியட்சகர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் உட்பட பொலிஸ் அதிகாரிகள் முன்னிலையாகினர்.
பிரதேச சபை சார்பில் சட்டத்தரணிகள் ப.குகனேஸ்வரன் மற்றும் திருமதிசாமந்திதிவாகரன்ஆகியோரும் எதிர் மனுதார் சார்பில் சட்டத்தரணி ஏ.பீ.என்.ரஞ்சித்குமாரும் முற்பட்டனர். (10, 9)

## கஷ்டப்படும் முன்னாள் போராளிகள் தொடர்பாக தெரியப்படுத்துங்கள்

### அமைச்சர் டெனீஸ்வரன் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜூலை 8
எமது இனத்தின் விடிவுக்காக பாடுபட்ட முன்னாள் போராளிகளில் பலர் மிகவும் கஷ்டப்படுகின்றனர் என அறியக் கிடக்கின்றது. அவர்களின் தகவல்களை என்க்கோ அல்லது எனது திணைக்களத்துக்கோ தெரியப்படுத்துவீர்களாயின் அவர்களுக்கான உதவிகளை வழங்கமுடியும் என வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.
அமைச்சர் பா.டெனீஸ்வரனின் வழிகாட்டலில் கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் முன்னெடுக்கப்படும் மறுவாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள், மாவீரர் குடும்பங்களுக்கான 2017 ஆம் ஆண்டுக்கான வாழ்வாதார உதவித்திட்டங்கள் பெறும், தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான சிறப்பு கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது.
இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது;
2014 ஆம் ஆண்டு இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 60 பயனாளிகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மூலமாக வாழ்வாதார செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பாக அறிவுறுத்தப்பட்டு சரியான திட்டத்தைத் தெரிவு செய்வது சம்மந்தமாக நேர்முகத்தேர்வுகளும் நடத்தப்பட்டதுடன் அவர்களினால் தெரிவுசெய்யப்பட திட்டங்கள் பதிவுசெய்யப்பட்டு நிதி ஆணைக்குழுவின் ஒப்புதலை பெறுவதற்காக [illegible] தப்பட்டுள்ளன. தமக்கு ஏற்புடைய உதவித் திட்டங்களை பெற்றுக்கொண்டு அதன்மூலம் நம்பிக்கையோடு முயற்சி செய்தால் அதிக வருவாயைப் பெற்று வினைத்திறன் உடையதாக மாற்றிக்கொள்ள முடியும்.
முன்னாள் போராளிகளில் பலர் ஒருவேளை உணவுக்குகூட கஷ்டப்பட்டு வருவதாகவும், சிலர் பிச்சை எடுக்கும் நிலைக்குகூட தள்ளப்பட்டுள்ளதாக சமூக வலைத்தளங்கள் மூலம் அறியக்கிடைக்கின்றன. போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட உறவுகள் குறிப்பாக முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டவர்கள் தமது அன்றாட வாழ்கையை சுயமாக நடத்த முடியாதவர்களாகவும் பலர் உள்ளனர்.
இவ்வாறான நிலையில் இருப்பவர்களைக் கண்டால் அவர்கள் பற்றிய விபரங்களை எனக்கு அல்லது எனது கிராம அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள் மூலமாக [illegible] தெரியப்படுத்துங்கள் என்றார். (10)

## மாவீரர்களின் பெற்றோர் முல்லையில் கௌரவிப்பு



முல்லைத்தீவு, ஜூலை 8
தமிழீழவிடுதலைப்புலிகளின் மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வுநேற்றுமுல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் நடைபெற்றது.
ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது. கௌரவிப்பு நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர்உணர்ச்சிவசப்பட்டு கண்ணீர் வடித்தனர்.
மாவீரர்களின் பெற்றோரைக்கௌரவிக்கும்நிகழ்வுகள் பொதுவாக விடுதலைப் புலிகள் அமைப்பின் காலத்திலேயே பல்வேறு அமைப்புக்களால் முன்னெடுக்கப்பட்டன.
தற்போது ஜனநாயகப் போராளிகள் கட்சியால் இந்தநிகழ்வுமுன்னெடுக்கப்பட்டது. இதுபோன்ற கௌரவிப்பு நிகழ்வுகள் இனிவரும் காலத்திலும் படிப்படியாக முன்னெடுக்கப்படும் என அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளரான துளசி தெரிவித்தார். (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண பொதுநூலகம்



## உள்நாட்டு இறைவரி திணைக்கள ஊழியர்கள் நேற்று அடையாள பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஜூலை 8

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஊழியர்கள் நேற்று அடையாள பணிப்புறக்கணிப்பும் ஈடுபட்டனர். உள்நாட்டு இறைவரி சட்ட வரைவுகள் நகல் வரைவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உள்நாட்டு இறைவரி தொழிற்சங்க கூட்டமைப்பு உறுப்பினர்கள் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் உள்நாட்டு இறைவரி சட்ட வரைவு தொடர்பில் விளக்கமளித்திருந்தனர்.

பன்னாட்டு நாணய நிதியத்தின் ஊடாகவரையப்பட்டுள்ள இந்த சட்ட வரைவு ஊடாக மதத்தலங்கள், பொதுநல சங்கங்கள் மற்றும் இறப்பு சேவைசங்கங்கள் ஊடாகவும் வருமானம் பெற்றுக் கொள்வதற்கு யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது என்று உள்நாட்டு இறைவரி சேவை சங்கத்தின் உதவி செயலாளர் எச்.ஏ.எல். உதயசிறி அதில் சுட்டிக்காட்டினார்.

இந்த சட்டவரைவு சம்பந்தமாக அரசு, தொழிற்சங்க சம்மேளனங்களுடன் பேச்சுக்கள் நடத்தவில்லை என்று உள்நாட்டு வருமான பொது சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் அஜித் புஷ்பகுமார தெரிவித்தார்.

புதிய வருமான வரி திருத்த சட்ட வரைவினால் மக்களின் அத்தியாவசிய பொருள்களின் விலையானது மேலும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. இது தொடர்பில் அரசு எம்முடன் பேச்சுக்களை நடத்தாவிடின் தொழிற்சங்கப் போராட்டம் தீவிரமடையும் எனவும் தேசிய வருமான வரி திணைக்களம் எச்சரித்துள்ளது.

இதேவேளை, கனிய எண்ணெய் தொழிற்சங்கத்தினரும் மீண்டும் போராட்டத்தில் குதிக்கவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. திருகோணமலை - சீனன்குடா எண்ணெய் களஞ்சிய தொகுதியை இந்தியாவுக்கு கையளிக்க அரசு தீர்மானித்துள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஏற்கனவே கனிய எண்ணெய் தொழிற்சங்கத்தினர் போராட்டம் நடத்தியிருந்தனர்.

இந்த நிலையில் விவகாரம் தொடர்பில் பேச்சு நடத்த அரச தலைவரும், தலைமை அமைச்சரும் சந்தர்ப்பம் வழங்காமை காரணமாக மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவோம் என அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (10)

## எழுத்தூர் நீர் உள்வாங்கும் நிலையம் நேற்றுத் திறப்பு



மன்னார், ஜூலை 8

எழுத்தூர் நீர் உள்வாங்கும் நிலையத்தை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேறறு மாலை வைபவ ரீதியாக திறந்து வைத்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசின் நிதி ஒதுக்கீட்டில் நகர திட்ட மிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையுடன் இணைந்து செயற்படுத்தும் உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதார திட்டத்தீன் கீழ் இந்த நிலையம் அமைக்கப்பட்டது.

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோ புள்ளே ஆகியோரின் அழைப்பில் அமைச்சர் ரிசாட் பதியுதீன், ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் சிறிவிடோவதி, பாராளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், எம்.மன்சூர், சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டு திட்டத்தை ஆரம்பித்தனர்.

நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஜோசப் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை மற்றும் சர்வமத தலைவர்கள்., திணைக்கள தலைவர்கள், வடமாகாண சபை உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

சுமார் 2 ஆயிரத்து 200 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படும் இந்தக் கருத்திட்டம் நிறைவடையும் போது 55 ஆயிரம் மக்கள் பயனடைவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-56)

## விபத்தை ஏற்படுத்திய சாரதிக்கு 18 மாத சிறை

கொழும்பு, ஜூலை 8

வாகன விபத்தில் நபரொருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்ட பாரவூர்தியின் சாரதிக்கு 18 மாத கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

கம்பஹா மேல் நீதிமன்ற நீதிவான் பிரியந்த பிரனாந்து நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

நிட்டம்புவ உடுகஹவல்பொல பிரதேசத்தில் 2007ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 27ஆம் திகதி இந்த வாகன விபத்து இடம்பெற்றது.

வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட போது., விபத்துச் சம்பவம் தொடர்பில் பாரவூர்தியின் சாரதி குற்றத்தை ஒப்புக்கொண்டதன் காரணமாக இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

42 வயதுடைய சாரதிக்கே இவ்வாறு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. குடிபோதையில் வாகனத்தைச் செலுத்தி நபரொருவரைக் கொலை செய்ததாக அவருக்கு எதிராக கம்பஹா மேல் நீதிமன் றில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டிருந்தது . (10)

## இரணைதீவு நில மீட்பு போராட்டம் தொடர்கிறது

கிளிநொச்சி, ஜூலை 8

"எமது நிலத்தை மீட்கும் வரை போராட்ட வடிவம் மாறுமே ஒழிய போராட்டத்தை கைவிடமாட்டோம். எங்கள் நிலம் எங்கள் கைவசம் கிடைக்கும் வரை எங்கள் போராட்டம் தொடரும்"

இரணைதீவு நிலத்தை மீட்டெடுக் கும் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

படையினர் வசமுள்ள இரணைதீவை மீட்டெடுக்கும் போராட்டம் தீர்வின்றி நேற்றுடன் 68நாள்களைக் கடந்தும் தொடர்கின்றது.

" எமது பிரச்சினை தொடர்பாக இந்த அரசு முன்னெடுக் கும் ஒவ்வொரு செயற்றிட்டமும் பயனின்றியே முடிந்துள்ளது.

அரசு எங்களுடைய கோரிக்கைக்கு ஒரு உரிய தீர்வைத் தரும் என்ற நம்பிக்கையில் உள்ளோம். எங்கள் சொத்து எங்களுடை பசி பட்டினிக்கு உதவாமல் அன்னியருக்கு உதவுவதை பார்த்துத் தவித்துக் கொண்டிருக்கின்றோம். இந்த அரசு எமது காணியை எம்மிடம் தந்து எமது பசி பட்டினியைப் போக்க வேண்டும். நீங்கள் புதிதாக எமக்கு சொத்துத் தர வேண்டாம் எங்களுடைய சொத்தைத்தான் கேட்கின்றோம். நாம் காலம் காலமாக வாழ்ந்த சொத்தைத்தான் கேட்கின்றோம். அதனைத் தாருங்கள்.

புலம்பெயர்ந்து இருக்கும் மக்கள் எங்களுடைய போராட்டத்துக்கு ஆதரவு தருவது மகிழ்ச்சியாக உள்ளது. அவர்களது ஆதரவு தொடர்ந்த வண்ணம் இருக்கவேண்டும். பன்னாட்டு நாடுகளுக்கு அவர்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும். பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் கண்ணீர் கம்பலையுடன் இரவு பகல் என்று பாராமல் இருக்கின்றோம் எங்கள் ஏக்கம் நீங்க வேண்டும். எங்கள் நிலம் எங்கள் கையில் கிடைக்கும் வரை போராடுவோம்" என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (10)





பதுளைமாவட்டநாடாளுமன்றஉறுப்பினரும், மலையக மக்கள் முன்னணியின் அரசியற்றுறைத் தலைவரும், மலையகதொழிலாளர்முன்னணியின் இணைத்தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் உபதலைவருமாகிய. அரவிந்தகுமாரின் ஏற்பாட்டில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான பல்லூடக உயிரோட்டத்துடன் கூடிய இலவச செயலமர்வுகள் நேற்று பண்டாரவளை தமிழ்மகாவித்தியாலயத்திலும், அப்புத்தளை இந்துகலாசார மண்டபத்திலும் நடைபெற்றன. (10)

## விபத்துக்களில் 5 பேர் காயம்

தென்மராட்சி, ஜூலை 8

தென்மராட்சி பிரதேசத்தில் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற சாலை விபத்துக்களில் சிக்கி ஒரு பெண் உட்பட ஐந்து பேர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் நேற்று இடம்பெற்றன.

மோட்டார் சைக்கிள்கள் விபத்தில் கொக்குவில் தாவடி தெற்கைச் சேர்ந்த சிவராஜா அஜந்தன் ( வயது 23 ) கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த சிவானந்தம் டெனிஸ்ரஸ் ( வயது 20 ) நுணாவில் மேற்கைச் சேர்ந்த விக்னேஸ்வரராஜா கம்சன் ( வயது 26 ) ஆகியோர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துமனையில் சேர்க்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (10, 9)

## சட்டவிரோத மணல் கடத்தல்; கைப்பற்றப்பட்டன உழவியந்திரங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ்ப்பாணம் தனங்களப்பில் இருந்து சாவகச்சேரிப் பகுதிக்கு மணல் கடத்தலில் ஈடுபட்ட இரண்டு உழவியந்திரங்கள் சிறப்பு அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நடந்துள்ளது. நீண்ட காலமாக தனங்களப்பில் இருந்து வயல்வெளி ஊடாக வேலாயுதம் வீதி வழியாக சாவகச்சேரிக்கு மணல் கடத்தப்பட்டுகிறது எனக் கூறப்படுகின்றது. கடத்தலை முறியடிக்கும் நோக்கில் நேற்று அதிகாலை சிறப்பு அதிரடிப் படையினர் ரோந்தில் ஈடுபட்டிருந்தனர்.

அதிகாலை 1.30 மணியளவில் மணல் ஏற்றிய நிலையில் மூன்று உழவியந்திரங்கள் வேலாயுதம் வீதியில் வைத்து சிறப்பு அதிரடிப் படையினரால் வழிமறிக்கப்பட்டன.

எனினும் அந்தஇடத்திலிருந்து தப்பிக்க சாரதிகள் முயன்றனர். அதிரடிப்படையினர் விரட்டிச் சென்றனர்.

உழவு இயந்திரங்களின் சக்கரங்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

ஒரு உழவு இயந்திரம் தப்பிச் சென்ற நிலையில் இரண்டு உழவியந்திரங்களை கைவிட்டு விட்டு சாரதிகள் தப்பி ஓடியுள்ளனர்.

கை விட்டுச் சென்ற இரு உழவு இயந்திரங்களையும் கைப்பற்றிய சிறப்பு அதிரடிப்படையினர் அவற்றைசாவகச்சேரிபொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். (10, 9, 101)

## கைது செய்ய முயல்கின்றது கூட்டரசு

### கோத்தபாய ராஜபக்ச குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 8

30 ஆண்டுகளாக நாட்டில் போர் நிலவிவந்தது. அந்தக் காலகட்டங்களில் நாட்டை ஆட்சி செய்த அனைத்து அரச தலைவர்களும் போரை நடத்தியிருந்தனர். இறுதிப் போரை முன்னெடுத்தவர்கள் மாத்திரம் எப்படி குற்றவாளி களாக்கப்படுவார்கள்.

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ச. கொழும்பில் நேற்று மகாநாயக்க தேரர்களை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத்தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

எனக்கு இழைக்கப்படும் அநீதிகள் குறித்து மகாநாயக்கர்களுக்கு தெரிவிக்க வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக தோற்கடிக்க போரை வழிநடத்திய ஒரே காரணத்துக்காக என்னைக் கைது செய்ய கூட்டரசு முயன்று வருகின்றது. அந்தக் காலங்களில் நாட்டை ஆண்ட முன்னாள் அரச தலைவர்கள் அனைவரும் போர்க் குற்றங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும். 30 வருடங்களாக இந்த நாட்டின் அரசியல் செய்தவர்கள் ராஜபக்ச குடும்பத்தினர். அரசியலில் சம்பாதித்தவர்கள் நாங்கள் அல்லர். மோசடியாளர்கள் என்ற முத்திரையைக் குத்தி எம்மை பழிவாங்குகிறார்கள். ராஜபக்சக்கள் இந்த நாட்டின் திருடர்கள் அல்லர். கூட்டரசா குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டுள்ள ராஜபக்சக்கள், உயிரைப் பணயம் வைத்து நாட்டைக் காப்பாற்றியவர்கள் என்பதை நினைவுப டுத்த விரும்புகின்றேன்.

நாங்கள் அரசமைப்பு உருவாக்கத்தை எதிர்க்கின்றோம். அது தேவையற்ற ஒன்றாகும் என்றார். (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு முதல்வராக தமிழர் வரவேண்டும்

## முஸ்லிம் காங்கிரஸ் அதற்கு வழிவிட வேண்டும் என்கிறார் சிறிநேசன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஜூலை 8

கிழக்கு மாகாண சபையின் அடுத்த முதலமைச்சராகத் தமிழர் ஒருவரே வரவேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையில் தற்போது தமிழ்பேசும் இனத்தவர்கள் என்ற அடிப்படையில் முஸ்லிம் இனத்துக்கு முதலமைச்சர் பதவியை கிழக்குத் தமிழ் மக்கள் விட்டுக்கொடுத்திருந்தனர். விரைவில் நடைபெறவுள்ள கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் முதலமைச்சர் ஒருவருக்கு வழிவிடவேண்டிய தேவை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் சகோதர முஸ்லிம் மக்களுக்கும் இருக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாண சபையின் ஆயுள்காலம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நிறைவுடையவுள்ளது. மாகாண சபைக்குரிய தேர்தல் விரைவில் நடைபெறுவதற்குரிய சாத்தியங்கள் காணப்படுகின்றன. கிழக்கு மாகாணத்தின் அடுத்த முதலமைச்சர் யார் என்ற கேள்வியும் தற்போது எழுந்து கொண்டிருக்கின்றது.

மூவின மக்களையும் கொண்டுள்ள கிழக்கு மாகாணத்தில் 40 வீதத்துக்கு அதிகமாகத் தமிழ் மக்கள் செறிந்து வாழ்கின்றனர். இருந்தும்கூட மாகாண சபையில் நல்லிணக்கமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் 11 ஆசனங்களைப் பெற்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது 7 ஆசனங்களை மாத்திரம் பெற்றிருந்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு விட்டுக்கொடுப்பை மேற்கொண்டு முதலமைச்சர் பதவியைச் சகோதர முஸ்லிம் இனத்தைச் சேர்ந்தவருக்குக் கொடுத்திருந்தது.

இனி நடைபெறவுள்ள கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் முதலமைச்சர் ஒருவருக்கு வழிவிடவேண்டிய தேவை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் சகோதர முஸ்லிம் மக்களுக்கும் இருக்கின்றது.

நடப்பு மாகாண சபையில் எந்தவொரு நிபந்தனையும் இல்லாமல் முஸ்லிம் முதலமைச்சரை நியமிக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், கிழக்குத் தமிழ் மக்களும் முழுமையான ஆதரவை வழங்கியமையை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும், சகோதர முஸ்லிம் மக்களும் கவனத்தில் கொள்ளவேண்டும். அடுத்த மாகாண சபையில் இந்த விட்டுக்கொடுப்பை முஸ்லிம்கள் செய்யவேண்டும் என்ற தார்மீகப் பொறுப்பை இவர்களுக்குக் கிழக்குத் தமிழ் மக்கள் ஒப்படைத்திருக்கின்றார்கள். எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழர் ஒருவர் முதலமைச்சராக வரவேண்டும் என நாம் எதிர்பார்ப்பதில் தவறில்லை. இதில் மாற்றுக் கருத்துக்கள் இருக்கக் கூடாது என்றார். (த-5)

# நோர்வே - யாழ். பல்கலைகள் இடையேஒப்பந்தம்கைச்சாத்து

கொழும்பு, ஜூலை 8

மேற்குநோர்வேபிரயோகவிஞ்ஞானப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்துடன் தூயசக்தி தொழில்நுட்ப உதவி சம்பந்தமான உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது.



உடன்படிக்கையின்அடிப்படையில், தூயசக்தி தொழில்நுட்பம் குறித்து மாணவர்கள், ஆய்வாளர்கள்மத்தியில்அறிவைமேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதே இதன் நோக்கம்

இந்தத்தூயசக்திதொழில்நுட்பஉதவி குறித்த உடன்படிக்கையானது, இலங்கையின் தூயசக்தி பற்றிய நிலைத்து நிற்கக்கூடிய தீர்வுகளை உருவாக்குவதற்கானபுதியதிட்டங்களையும் முன்னெடுப்புகளையும் கொண்டுவருமென நோர்வே தூதுவர் கௌஸ்டாட் சாதர் தெரிவித்துள்ளார்.

உதவித்தொகையின் ஒரு பகுதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் பொறியியல் துறை ஆய்வுகூடங்களை மேம்படுத்தவும் உதவுமென அவர் குறிப்பிட்டார்.

இலங்கைப் பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் துறையினர் இணைந்த ஒரு ஆய்வுக்குழுவை உருவாக்குவது இந்தச் செயற்திட்டத்தின் ஒரு முக்கிய கூறு எனவும் அவர் கூறினார்.

தூயசக்திதொழில்நுட்பமானதுநோர்வேயில் மிகவும் முன்னுரிமை கொடுக்கப்பட்ட நிலையில், இந்தத் தொழில்நுட்பத்தில்மேலதிககவனம் செலுத்தப்பட்டு, பல்கலைக்கழகங்களுக்கும் தனியார்துறைக்குமிடையில்தொடர்புகள்ஏற்படுத்தப்படுவதன் மூலம் புதிய தொழில்நுட்பங்களுக்கும், முதலீடுகளுக்கும் வாய்ப்பு ஏற்படுமென நோர்வே அரசு அறிவித்துள்ளது.

மாணவர்கள்,ஆளணியினர்மத்தியிலான இணைஆய்வு, அறிவு மேம்பாடு பற்றிய நடவடிக்கைகளுக்கு உறுதி சேர்க்கும் வகையில் இந்த உடன்படிக்கைகைச்சாத்திடப்பட்டுள்ளது. (த)

# யாழ். மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு புதிய கடிகாரங்கள் இணைப்பு

## எழுப்பும் ஓசையிலும் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

"யாழ்ப்பாண நகரில் மணிக்கூட்டுக் கோபுரத்தின்கடிகாரங்கள்மாற்றப்பட்டு புதிய கடிகாரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. எனினும்அவைஇயங்குவதற்கு சில நாள்கள் செல்லும்" என்று யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

"யாழ்ப்பாண நகரின் சின்னமாக விளங்கும் இந்த மணிக்கூடுக் கோபுரத்தின் கடிகாரத்தின் ஓசை மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மணித்தியாலயத்துக்கும் இந்தக் கடிகாரம் 'யாழ்'என்ற ஓசை எழுப்பும்.

கடந்த வியாழக்கிழமை மணிக்கூட்டுக்கோபுரத்தின்நான்குதிசைகளிலும் உள்ள கடிகாரங்கள் மாற்றப்பட்டுள்ளன. கடிகாரம்பொருத்தப்பட்டுஅதன் மணி ஓசை மற்றும் செயற்பாடுகள் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட பின்னர் நிரந்தரமாக அடுத்தவாரம் முதல் இயக்கி வைக்கப்படும்.

மேலும் மணிக்கூட்டுக் கோபுரமும் மெருகூட்டிஅழகுபடுத்தப்படவும்உள்ளது" என்று. மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் மேலும் தெரிவித்தார். (வ-17)

# உள்ளூர் உற்பத்திகளின் கண்காட்சி நாளை

யாழ்ப்பாணமாவட்டசிக்கனகடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடத்தும் உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும், விற்பனையும் நாளை ஞாயிற்றுக்கிழமை சமாச மண்டபத்தில்முற்பகல்10மணிக்குஆரம்பமாகிநடைபெறும்என்றுஅறிவிக்கப்பட்டது.

சமாசத்தலைவர்செ.இலகுநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் மூத்த கூட்டுறவாளர் ச. ஆறுமுகநாதன் முதன்மைவிருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்துவைப்பார். (வ-17)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

## இந்தியா...

கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து கவலை தெரிவித்துள்ளார்.

இந்திய இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் ஒன்பதாம் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாவால் இலங்கையில் முன்னெடுக் கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் பாதகமானவை எனச் சில தரப்பினர் பிரசாரம் செய்து வருகின்றனர். இந்தப் பிரசாரங்களில் எவ்வித உண்மையும் கிடையாது.

இந்திய அபிவிருத்தித் திட்டங்களின் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் பல வேலைவாய்ப்புக்கள் உருவாகும். இது இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்தும்.

இந்திய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் சரியான தகவல்கள், விளக்கங்கள் முன்வைக்கப்பட வேண்டியது அவசியமானது.எட்கா உடன்படிக்கையானது பரஸ்பர நன்மையை இரு நாடுகளுக்கும் ஏற்படுத்தக் கூடியது - என்றார். (த)




## எவ்.சி.ஐ...

அமைச்சின் கீழ்வரும் நிதி மோசடி விசாரணைப் பிரிவு (எவ்.சி.ஐ.டி.), நீதி அமைச்சின் கீழ்வரும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவை அவரிடமே உடன் ஒப்படைக்கப்படவேண்டும். அவரும் அவற்றைப் பயன்படுத்தி, கடந்த ஆட்சியின் (மகிந்த ஆட்சியின்) குற்றவாளிகளை மூன்று மாத காலத்துக்குள் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்."

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணி, தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகியவற்றின் தலைவரும் தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சரு மான மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

"நிதி மோசடி விசாரணை பிரிவு, சட்டமாதிபர் திணைக்களம் ஆகியவற்றை என்னிடம் ஒப்படையுங்கள். நான் மூன்று மாத காலத்துக்குள் கடந்த ஆட்சியின் குற்றவாளிகளைக் கூண்டில் நிறுத்துகிறேன்" என கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்த கருத்து தொடர்பில் ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியில் அமைச்சர் மனோ கணேசன் கூறியுள்ளதாவது:

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியைப் பிளவுபடுத்தவே கடந்த ஆட்சியின் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதில் இருந்து காப்பாற்றப் படுகின்றார்கள் என்ற அர்த்தத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்தக் கருத்தைக் கூறியுள் ளதை எவரும் மறுக்க முடியாது. அது இன்று ஒன்றும் சிதம்பர இரகசியம் அல்ல.

எனவே, அந்தக் குற்றச்சாட்டில் இருந்து தப்ப ஐக்கிய தேசியக் கட்சி தலைமைக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அதேபோல் முன்னாள் ஆட்சியாளர்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி, தண்டனை பெற்றுக்கொடுக்க அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. ஊழலுக்கு எதிராக வாக்களித்த மக்களுக்கும், தாம் அளித்த வாக்கு பயன்படுகின்றதா என அவதானிப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இது அனைத்தும் நடைபெற,அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கோரியது போன்று, சட்டம், ஒழுங்கு அமைச்சின் கீழ்வரும் நிதி மோசடி விசாரணைப் பிரிவு, நீதி அமைச்சின் கீழ்வரும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவை அவரிடமே ஒப்படைக்கப்பட வேண்டும். அவரும் அவற்றைப் பயன்படுத்தி, கடந்த ஆட்சியின் குற்றவாளிகளை மூன்று மாத காலத்துக்குள் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். இந்தக் கால அவகாசம் கொஞ்சம் முன்னே, பின்னே போனாலும் சரி. காரியம் நடக்க வேண்டும்- என்றார். (த)

## ஐ.எஸ்...

செய்துள்ளார். மாராவி நகரத்துக்குள் செயற்பட்ட பயங்கரவாதிகளை இலக்கு வைத்து பிலிப்பைன்ஸ் இராணுவத்தால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது ஐ.எஸ் பயங்கரவாதியாகச் செயற்பட்ட இலங்கையர் உயிரிழந்துள்ளார் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் மாராவி நகரத்தில் ஐ.எஸ் பயங்கரவாதிகளை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலில் 329 பேர் உயிரிழந்துள்ளனர். அதில் 225 பேர் ஐ.எஸ் பயங்கரவாதிகள் என பிலிப்பைன்ஸ் அரச தலைவர் உறுதிப்படுத்தியதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விமான தாக்குதலில் உயிரிழந்தவர்களில் இலங்கை, சிரியா, இந்தோனேஷியா, மலேசியா மற்றும் அரேபியா ஆகிய நாடுகளில் இருந்து வந்து ஐ.எஸ் அமைப்பில் இணைந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீந்திக் கடந்த நெருப்பாறு யாழில் இன்று வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜூலை 8
நா.யோகேந்திரநாதனின் பூநகரியில் இருந்து புதுமாத்தளன் வரை நீந்திக்கடந்த நெருப்பாறு (பாகம் 2) எனும் நூல்வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை மாலை 3மணிக்கு யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப்பாடசாலை மண்டபத்தில் எழு கலை இலக்கியப் பேரவையின் போசகர் இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன்தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் வரவேற்புரையை சி.நிஷாகரனும், அறிமுகவுரையை ந.மயூரரூபனும், கருத்துரையை த.அஜந்தகுமாரும், யாழ்ப்பாணப்பல் கலைக்கழக அரசறிவியல்துறை மூத்த விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கமும், ஏற்புரையை நூலாசிரியரும், நன்றியுரையை சி.பீஸ்மனும் வழங்கவுள்ளனர். (4)

## மயிலிட்டியில் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 8
மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறை சிறி கண்ணகாதேவி ஆலய முருகனின் வருடாந்த திருவிழா இன்று சனிக்கிழமை இடம்பெறும். அதில் ஆலய பூசகர் கலாபூசணம் வ.குமாரசாமிக்குப் பாராட்டு விழாவும் நடைபெறவுள்ளது.
பக்தர்களின் வசதி கருதி இன்று சனிக்கிழமை திருவிழா அன்று வழமைபோல் போக்குவரத்துச் சேவைகள் பருத்தித்துறையிலிருந்து இலவசமாக நடைபெறவுள்ளன. (4)

# தென்மராட்சியிலுள்ள 25 பாடசாலைகளுக்கு குடிதண்ணீர் வழங்கல்

### *பிரதேச செயலகம் நடவடிக்கை*

தென்மராட்சி, ஜூலை 8
தென்மராட்சி கல்வி வலயத்தில் குடிதண்ணீருக்குப் பற்றாக் குறை காணப்படும் 25 பாடசாலைகளுக்கு குடிதண்ணீர்த் தாங்கிகள் வழங்கப்பட்டு தினமும் பவுசர் மூலமாகக் குடிதண்ணீர் வழங்க தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
தென்மராட்சி பிரதேச பாடசாலைகளில் உள்ள குடிதண்ணீர்க் கிணறுகளில் தண்ணீர் பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டுத் தற்போதைய வறட்சி காரணமாக கிணற்று நீரைப் பாவனைக்கு உட்படுத்த வேண்டாமென அறிவிக்கப் பட்ட பாடசாலைகளில் முதற் கட்டமாக25 பாடசாலைகளுக்கு இடர் முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்ட குடி தண்ணீர்த் தாங்கிகள் வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.
மட்டுவில் சந்திரமௌளீச வித்தியாலயம், மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பாடசாலை, மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம், கரம்பைக்குறிச்சி அ.த.க.பாடசாலை, வரணி மத்திய கல்லூரி, வரணிவடக்கு அ.த.க.பாடசாலை, இடைக்குறிச்சி சிறிசுப்பிர மணிய வித்தியாலயம், கல்வயல் சிறிசண்முகானந்தா வித்தியாலயம், வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம், மந்துவில் னானானானாது மட்டுவாழ் வடக்கு அ.த.க.பாடசாலை, எழுதுமட்டுவாழ் சிறிகணேசா வித்தியாலயம், தனன்களப்பு அ.த.க.பாடசாலை, மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயம், கைதடி நாவற்குளி அ.த.க.பாடசாலை, நாவற்குளி ம.வி., கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை, கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம், சாவகச்சேரி மகளிர் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி ஆகிய 25 பாடசாலைகளுக்கு குடிதண்ணீர்த் தாங்கிகள் வழங்கப்படவுள்ளதென பிரதேச இடர் முகாமைத்துவப் பிரிவினர் தெரிவித்தனர்.
இதேவேளை பிரதேச இடர் முகாமைத்துவப் பிரிவினரால் பிரதேசத்தில் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை காணப்படும் கிராம அலுவலர் பிரிவுகளுக்கு தினமும் பவுசர் மூலமாகக் குடிதண்ணீர் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (4,9)

## குருபூரணை நிகழ்வு இன்று

இராமகிருஷ்ணமிசன் நலன்புரி நிலையம் நடத்தும் குரு பூரணை சிறப்பு நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை4.30மணிக்கு நிலைய பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (4)

## இன்று தீர்த்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 8
சாவகச்சேரி வடக்கு மண்டுவில் இலஞ்சரணியம் அம்பாள் (சோலையம்மன்) ஆலய தீர்த்தத் திருவிழா இன்று சனிக்கிழமை இடம்பெறும். ஆலய பெருந் திருவிழா கடந்த 20ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. நேற்றுத் தேர்த்திருவிழா இடம்பெற்றது. (4-9)

## "எலிப்பத்தாயம்" திரைப்படம் நாளை காண்பிக்கப்படும்

எலிப்பத்தாயம் (எலிப் பொறி) எனும் 121 நிமிடங்கள் கொண்ட 1981 ஆம் ஆண்டு வெளியாகிய திரைப்படம் நாளை ஞாயிற்றுக்கிழமை காண்பிக்கப்படவுள்ளது.
அடூர் கோபாலகிருஷ்ணன் நெறியாற்கையில் உருவான இந்தத் திரைப்படம் யாழ்ப்பாணப் பொது நூலக கேட்போர் கூடத்தில் நாளை பிற்பகல் 3 மணிக்குக் காண்பிக்கப்படம். அனுமதி இலவசம் என்று தெரிவிக்கப்பட்டது. (4)

## தென் தீபம் சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜூலை 8
"தீவுகள் தெற்கு வேலணைப் பிரதேச கலாசார பேரவையால் வெளியிடப்படும் தென்தீபம் சஞ்சிகை இதழ் 4 இற்கான ஆக்கங்கள் வேலணை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த கலைஞர்களிடமிருந்து கோரப்படுகின்றன.
இந்த வருடம் தென்தீபம் சஞ்சிகையானது ஆவணப்படுத்தலை மையமாகக் கொண்டும் கவிதை, கட்டுரை, பிரதேசத்தில் காணப்படும் கிராமங்களின் வரலாறுகள் என்பனவற்றை உள்ளடக்கியதாக வெளியிடப்படவுள்ளது. எனவே கலைஞர்கள் தமது ஆக்கங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் செயலக கலாசார பிரிவில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்வதுடன் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் செயலாளர் கலாசார பேரவை கலாசாரப் பிரிவு பிரதேச செயலகம் வேலணை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
தகுதியான ஆக்கங்கள் கலாசார பேரவையின் மலர்க்குழுவின் தீர்மானத்துக்கமைவாக தென்தீபம் சஞ்சிகை இதழ் 4இல் உள்ளடக்கப்படும். அனுப்பி வைக்கப்படும் ஆக்கங்களின் மூலத் தன்மையை உறுதிப்படுத்துவதுடன் அந்த ஆக்கங்களின் பொறுப்புக்கள் அனைத்தும் கட்டுரை ஆசிரியரையே சாரும் என்பதையும் உறுதிப்படத்தப்படவேண்டும்" என தீவுகள் தெற்கு வேலணை பிரதேச செயலரும் கலாசாரபேரவையின் தலைவருமான அ.சோதிநாதன் கேட்டுக் கொண்டுள்ளார். (4)

## உடுத்துறையில் நேற்று 4 கிலோ கஞ்சா சிக்கியது

யாழ்ப்பாணம், ஜூலை 8
உடுத்துறைப் பகுதியில் 4 கிலோ கஞ்சா நேற்று மீட்கப்பட்டது. சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.
காங்கேசன்துறைப் போதைப் பொருள் தடுப்புப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே அவர் கைது செய்யப்பட்டார்.
கைது செய்யப்பட்டவர் 35 வயதுடையவர் என்றும், உடுத்துறையைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
சந்தேநபர் மேலதிக நடவடிக்கைகளுக்காக பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-26-173)

## ஹரி பொட்டரின் 20ஆவது ஆண்டையொட்டி பிரிட்டிஷ் கவுன்சில் விழா

யாழ்ப்பாணம், ஜூலை 8
ஹரிபொட்டர் புத்தக வரிசையின் முதற் பதிப்பான ' ஹரி பாட்டர் மற்றும் த ஃபயோசாபர்ஸ் ஸ்டோன்" எனும் புத்தகம் வெளியிட்டு தற்போது 20 வருடங்கள் நிறைவுற்றமையை பிரிட்டிஷ் கவுன்சில் விழாவாகக் கொண்டாடத் தீர்மானித்துள்ளது.
இந்தவிழாவானதுயாழ்ப்பாணம், கொழும்பு,ஓரியன் சிற்றி, கண்டி, ஆகிய நூலகங்களில் நடைபெறும். யாழ்ப்பணத்தில் இல. 70, றக்கா வீதியில் அமைந்துள்ள பிரிட்டிஷ் கவுன்சில் நூலகத்தில் எதிர்வரும் , 09ஆம் , 23ஆம் , 30ஆம் , ஆகிய தினங்களிலும் மற்றும் ஆகஸ்ட் மாதம் 6 ஆம் மற்றும் 13 ஆம் திகதிகளான வார இறுதி நாள்களான ஞாயிற்றுக்கி ழமைகளில் மாலை 4 மணி முதல் 5 மணி வரை நடைபெறவுள்ளது. இதில், சிறுவர்கள், வயது வந்தவரக்ளுக்கான புதையல் தேடல்கள், சிறுவர்களுக்கும் வயது வந்தவர்களுக்குமான புத்தக வாசிப்பு தொப்பிகளை வகைப்படுத்தும் நிகழ்வு.
சிறுவர்கள் மற்றும் வயது வந்தவர்களுக்கான கைவினைப் பொருள்கள் தயாரிக்கும் நிகழ்வு. வினாவிடை போட்டி போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.
மேலதிக விபரங்களுக்கு www.britishcouncil.lk/event எனும் இணையத்தள முகவரியைப் பாரவையிடவும் என்று தெரிவிக்கப்பட்டது. (4)

## டீ.எம்.ஐ. நிறுவனத்தின் விருது வழங்கல் நாளை

டீ.எம்.ஐ. கல்வி நிறுவ னத்தின் வருடாந்த விருது விழங்கல் நிகழ்வு இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளன.
இந்த நிகழ்வின் முதல் அமர்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சித்தார்த்தனும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப்பல்கலைக்கழக ஓய்வு பெற்ற பேராசிரியரான எம். சின்னத்தம்பியும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.
இரண்டாம் அமர்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பிராந்திய கொமர்ஷல் வங்கியின் முன்னாள் முகாமையாளரும் கார்கில்ஸ் பிராந்திய முகாமையாளருமான சிறிறஜிவனும் கலந்துகொள்ளவுள்ளனர்.
இந்த நிகழ்வில் நிறுவ னத்தின் யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரி, சுன்னாகம், கிளிநொச்சி பயிற்சி மையங்கள் ஊடாக கணினி மற்றும் ஆங்கில கற்கை நெறிகளை முழுமைசெய்த ஆயிரத்து 100 மாணவர்களுக்கு சான்றிழ்கள் வழங்கப்படவுள்ளன என்று நிறுவன நிர்வாக இயக்குநர் ஆர்.நிறோஜன் தெரிவித்துள்ளார். (4)

## இலவச கற்கை நெறி

யாழ்ப்பாணம்.ஜூலை 8
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் பண்டத்தரிப்பு மற்றும் சுன்னாகம் தொழிற்பயிற்சி நிலையங்களில் பின்வரும் கற்கைநெறிகள் முற்றிலும் இலவசமாக எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளன.
இந்தக் கற்கைநெறிகளாவன மின்னிணைப்பாளர், அலுமினியம்பொருத்துனர் ஆகும். இந்தக்கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை சான்றிதழுக்கான பயிற்சிகளாகும்.
இந்தக் கற்கைநெறிகளை கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம் 4 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் அல்லது பிரான்பற்றில் உள்ள பண்டத்தரிப்பு தொழிற்பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு யாழ். இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை உதவிப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் தெரிவித்துள்ளார். (4)

## கருத்தமர்வு

யாழ்ப்பாணம்,ஜூன் 8
கருகம்பனை தமிழ் மன்ற சனசமூக நிலையமும் இந்து இளைஞர் கழகமும் இணைந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்ற உள்ள மாணவர்களுக்காக கருத்தரங்கை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளனர்.
கருத்தமர்வு பிரபல ஆசிரியரால் நடத்தப்படவுள்ளது. முதற் கட்டமாக இன்று சனிக்கிழமை புனித ஹென்றியரசர் கல்லூரியிலும் நா ளை 9 ஆம் திகதி தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியிலும் காலை 8 மணி முதல் 2 மணிவரை நடத்தப்பட உள்ளது என்று கழகத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (4)

## ஆய்வரங்குத் தொடர்

யாழ்ப்பாணம், ஜூலை 8
ஒக்ரோபர் சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டை முன்னெடுக்கும் நோக்கில் , புதிய ஜனநாயக மாக்சிசலெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் நடத்தப்படும் ஆய்வரங்குத் தொடரின் 7 ஆவது ஆய்வரங்கு இன்று சனிக்கிழமை இடம்பெறும்.
'ஒக்ரோபர் புரட்சியும் பெண் விடுதலையும்' என்ற தலைப்பில் பிற்பகல் 4 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.
தோழர் க. வாஹினி அவர்களின் தலைமையில் இடம்பெறவுள்ள இவ் ஆய்வரங்கில் ஆய்வுரையினைத் தோழர் எஸ். மோகனதர்ஷினி வழங்கவுள்ளார். பெண்கள் பற்றிய மாக்சியப் பார்வை, பெண்களின் அமைப்பாக்கம், அடையாள அரசியலும் பெண் விடுதலையும் ஆகிய விடயங்கள் தொடர்பாக ஆராய்கின்றதான இவ் ஆய்வுரையைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும்எனமேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

## கரவெட்டியில் கணினிப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 8
கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி இலவச கணினி வன்பொருள் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட உள்ளது.
அதில் பங்கு பெறவிரும்பும் பயனாளிகள் எதிர்வரும் புதன்கிழமைக்கு முன்னர் கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் தமது பெயர்களை பதிவுசெய்து கொள்ளுமாறு பிரதேச செயலாளர் அறியத்தந்துள்ளார். (4)

## சிறுவர் விளையாட்டு விழா

யாழ்ப்பாண மாவட்ட சர்வோதய நிறுவனத்தின் ஆதரவில் ஆறுகால் மடம் அறிவொளி சனசமூக நிலைய நிர்வாகத்துடன் இயங்கும் அறிவொளி முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை மதியம் ஒரு மணிக்கு யாழ்ப்பாணம் வண்ணை சிறி வைத்திலிங்கம் வித்தியாலய மைதானத்தில் இடம்பெறும்.
அறிவொளி சனசமூக நிலையத் தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு முதன்மைவிருந்தினராக மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொள்ளவுள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுப்பாட்டு விலையில் அரிசியை விற்க முடியாத நிலை

## வவுனியா மொத்த வியாபாரிகள் மீது சிறு வியாபாரிகள் குற்றச்சாட்டு

வவுனியா, ஜூலை 8
வவுனியாவில் கிராமப்புறங்களிலுள்ள கடைகளில் அரிசியைக் கட்டுப்பாட்டு விலைக்கு விற்க முடியாதுள்ளதாக சிறு வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.
மொத்த வியாபாரிகள் அரிசியை அதிகரித்த விலையில் விற்பனை செய்வதே இதற்குக் காரணம் என்று சங்கங்கள் கூறுகின்றன.
"அரசு அறிவித்துள்ள கட்டுப்பாட்டு விலைக்கு அரிசியை கொள்வனவு செய்ய முடியவில்லை. விலையை அதிகரித்து விற்பனை செய்தால் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை சிறுவியாபாரிகள் மீது வழக்குப் பதிவு செய்கிறார்கள்.
ஆட்டக்காரி, சிவப்பு நாடு, கோரா, வெள்ளை நாடு ஆகிய அரிசி வகைகள் 72 ரூபாவுக்குக் கட்டுப்பாட்டு விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகிறது. மொத்த வியாபாரிகள் அரிசியைக் கட்டுப்பாட்டு விலையை மீறி 90 ரூபாவுக்குச் சிறு வியாபாரிகளுக்கு விற்பனை செய்கின்றனர்.
அரிசியின் பெயர்களை மாற்றி மொத்த வியாபாரிகள் ரசீது வழங்குவதிலும் முறைகேட்டில் ஈடுபடுகின்றனர். இதனால் கிராமத்துச் சிறு வியாபாரிகள் அரிசியை அதிக விலையில் கொள்வனவு செய்து அதிகவிலைக்கு விற்பனை செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.
அவ்வாறு விற்பனை செய்யும்போது விலை அதிகரித்து விற்பனை செய்ததாகச் சட்டநடவடிக்கையை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. இந்த விடயம் சம்பந்தமாக அதிகாரிகளுக்கு எடுத்துக்கூறியும் அதிகாரிகள் மொத்த வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்காது சிறு வியா பாரிகளான எமக்கு எதிராக நடவடிக்கை எடுக்கின்றனர்.
மட்டக்களப்பு பச்சையரிசியை மாத்திரம் விலைக் கட்டுப்பாட்டுக்கு விற்பனை செய்யமுடியும். அதனால் மக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருள்களை வழங்க முடியாத நிலமை காணப்படுகிறது.
வவுனியா மாவட்டச் செயலர் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை ஆகியவற்றுக்கு இவை குறித்துப் பல முறைப்பாடுகள் செய்தபோதும் சிறு வியாபாரிகளின் பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வுகள் எட்டப்படவில்லை" என்று சிறு வியாபாரிகள் குற்றஞ்சாட்டிக் கவலை தெரிவிக்கின்றனர்.
இந்த விடயத்தில் மாவட்டச் செயலரும் பாவனையாளர் அதிகார சபையினரும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோருகின்றனர். (4)

## நள்ளிரவில் வீடு புகுந்து பெண்கள் மீது வாள்வெட்டு

தென்மராட்சி, ஜூலை 8
நள்ளிரவில் வீட்டுக்குள் திருடர்கள் சென்ற போது அங்கிருந்த பெண்கள் கூக்குரலிட்டதனால் திருடர் இரண்டு பெண்களையும் வாளால் வெட்டிவிட்டுத் தப்பிச் சென்றனர்.
இந்தச் சம்பவம் மிருசுவில் வடக்கில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. வாள்வெட்டுக்கு இலக்காகிய பெண்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.
பெண்கள் தனித்திருந்த வீட்டினுள் திருடர்கள் உள்நுழைவதைக் கண்டு அங்கிருந்த தாயும் மகளும் உதவி கோரி அபயக் குரல் எழுப்பினர்.
திருடர்கள் இரு பெண்களின் தலையில் வாளால் வெட்டிக் காயப்படுத்திவிட்டுத் தப்பியோடியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. காயமடைந்த இரு பெண்களும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.
அதே இடத்தைச் சேர்ந்த சிவயோகநாதன் இராசமணி (வயது - 60) சூரியகாந்தன் சிவராஜினி (வயது - 35) ஆகியோரே காயமடைந்தனர்.
சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டுள்ளதாகக் கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர். (4-9)

## யானை வெடி வெடித்ததால் 3 விரல்கள் சிதைந்தன

யாழ்ப்பாணம், ஜூலை 8
மன்னார் சின்னப்பட்டி விரிச்சானில் யானை வெடி வெடித்ததில் முதியவர் தனது வலது கையின் மூன்று விரல்களை இழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.
குருதிப் பெருக்கெடுத்த அவர் தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.
அதே இடத்தைச் சேர்ந்த செபமாலை (வயது - 64) என்பவரே மூன்று விரல்களையும் இழந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:
மன்னார் சின்னப்பட்டி விரிச்சானில் நேற்று முன்தினம் இரவு யானை வெடியைக் கொழுத்தியுள்ளார். அதனை வீச முற்பட்டபோது எதிரில் மாடுகள் பல காணப்பட்டுள்ளன.
அதனால் குறித்த வெடியை எறிவதில் தாமதம் ஏற்பட்டதனால் கையில் இருக்கும் போதே யானை வெடி வெடித்தது. அதனால் மூன்று விரல்கள் சிதைந்தன. குருதிப் பெருக்கெடுத்த அவர் மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (4-101)

## கொழும்பு - மன்னார் சாலையில் இ.போ.ச. மேலதிகக் கட்டணம்

### பயணிகள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 8
கொழும்பு - மன்னார் இடையே போக்குவரத்தில் ஈடுபடும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தில் அனுமதிக்கப்பட்ட கட்டணத்தை விடவும் மேலதிக கட்டணம் அறவிடப்படுவதாக பயணிகள் குற்றம் சுமத்துகின்றனர்.
"நேற்று இரவு 8 மணிக்கு கொழும்பில் இருந்து மன்னாருக்குப் புறப்படும் பேருந்தில் புறப்பட்டோம். அதற்காக ஒவ்வொரு பயணிகளிடமும் ரூபா 490 அறவிடப்பட்டது. இவ்வாறு அறவிடப்பட்ட பணத்துக்குச் சிட்டையும் வழங்கப்பட்டது.
இதன் பின்னர் சிறிது நேரம் பேருந்து பயணித்த நிலையில் ஓர் இடத்தில் பேருந்து நிறுத்தப்பட்டது.
இருவர் பேருந்தில் ஏறி பயணிகள் ஒவ்வொருவரும் 20 ரூபா வீதம் வழங்க வேண்டும் என்று கண்டிப்பாகக் கோரினர். அவ்வாறு கோரிய இருவருமே சாரதியோ நடத்துநரோ கிடையாது. அதனால் நாம் நடத்துநரிடம் இது தொடர்பில் கேள்வியெழுப்பினோம்.
இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குரிய பேருந்தில் எவ்வாறு ஏனையவர்கள் பணம் அறவிடமுடியும்? அதற்கு அனுமதியுண்டா? இதற்கு யார் அனுமதித்தது என்று கோரினோம்.
இவ்வாறு அறவிடப்படும் பணம் பேருந்துக் கட்டணமல்ல. இது சாலைக்கான கட்டணம் மட்டுமே. என்று அவர் பதிலளித்தார். அவ்வாறானால் குறித்த பணத்தைப் பெற்றுக்கொண்டால் எமக்கு சிட்டை வழங்க வேண்டும் எனக் கோரியபோது இ.போ.ச சிட்டை கிடையாது. அதிவேகச் சாலைக்கான கட்டணச் சிட்டையே வழங்குவார்கள். அதுவும் மொத்த தொகைக்கான ஒரு சிட்டையாகவே காணப்படும். அதற்கான பெறுமதி 600 ரூபா எனப் பதிலளித்தனர். அனால் குறித்த பேருந்தில் 50 இற்கும் மேற்பட்டோர் காணப்பட்டனர்.
இவ்வாறு மேலதிக நிதி அறவிடுவதே தவறு. இதற்கும் அப்பால் 600 ரூபா செலுத்தும் விடயத்துக்கு 50 பேரிடம் 20 ரூபா வீதம் ஆயிரம் ரூபா அறவிடுவது மோசடியே. இவ்வாறு இடம்பெறும் மோசடி தொடர்பில் இ.போ.சபையின் சாலை முகாமையாளர்கள், பிராந்திய முகாமையாளர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றனர்.
"எந்தக் காரணத்துக்காகவும் எந்த மார்க்கப் பேருந்தும் மேலதிக கட்டணம் அறவிட முடியாது. இவ்வாறு இடம்பெற்றிருப்பின் அது தொடர்பில் ஆராயப்பட்டு கண்டிப்பாக நடவடிக்கை இடம்பெறும்" என்று இ.போ.சபையின் பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார். (4-101)

## பொது நோக்கு மண்டபத்துக்கு கூமாங்குளத்தில் அடிக்கல்





வவுனியா, ஜூலை 8
வவுனியா கூமாங்குளம் கிராமத்துக்குப் பொது நோக்கு மண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கூமாங்குளம் கிராம அபிவிருத்தி சங்கக் காணியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
வடக்கு மாகாண சபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராஜாவின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிகழ்வு இடம்பெற்றது.
இந்த அடிக்கல் நடும் நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராஜா, கூமாங்குளம் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் மற்றும் உறுப்பினர்கள், சித்தி விநாயகர் ஆலயம், முத்துமாரி அம்மன் ஆலய தலைவர்கள், பொது அமைப்புக்களின் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (4)

## 2 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது

வவுனியா, ஜூலை 8
வவுனியா மைய பேருந்து தரிப்பிடத்தில் 2 கிலோகிராம் கஞ்சா போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கிளிநொச்சியிலிருந்து அக்கரைப்பற்று நோக்கிப் பயணித்த பேருந்தில் பயணித்தவரிடம் பொலிஸார் சோதனை நடத்தியபோது அவரிடம் கஞ்சா கைப்பற்றப்பட்டது. நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் கைது இடம்பெற்றது. கைது செய்யப்பட்டவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4)

## நள்ளிரவில் ரோந்து சென்ற பொலிஸார் மீது தாக்குதல்

### சிசிரி கமரா உதவியுடன் விசாரணை

வவுனியா, ஜூலை 8
வவுனியா உக்கிளாம்குளம்பகுதியில் ரோந்து சென்ற பொலிஸார் மீது மதுபோதையில் வந்த இளைஞர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் உக்கிளாம்குளம் பிள்ளையார் கோயிலை அண்மித்து இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
பொலிஸார் துவிச்சக்கரவண்டியில் வழமைபோல் ரோந்து சென்றுள்ளனர். மதுபோதையில் நின்ற இளைஞர்கள் சிலர் பொலிஸாரை தள்ளி விழுத்தித் தாக்கியுள்ளனர். சம்பவத்தில் மூன்று பொலிஸார் சிறுகாயமடைந்தனர்.
அவ்வாறு தாக்கிய இளைஞர்கள் தப்பியோடியுள்ளனர். நேற்றுக் காலை இது சம்பந்தமான விசாரணைகளை பொதுமக்கள் மத்தியில் பொலிஸார் மேற்கொண்டனர். உக்கிளாம்குளம் பகுதியில் உள்ள பிள்ளையார் ஆலயத்தில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி. கமராவை பார்வையிட்டு குறித்த இளைஞர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (4-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்டச் செயலர் பதவிக்காக 8 பேர் போட்டி

## 4 தென்பகுதியினரும் உள்ளடக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 8
மன்னார் மாவட்டச் செயலர் பதவிக்கு 8 பேர் போட்டிபோடுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.
மன்னார் மாவட்ட தற்போதைய செயலர் வை.எம்.எஸ். தேசப்பிரிய எதிர்வரும் 17 ஆம் திகதியுடன் இடமாற்றம் பெற்றுச் செல்கிறார். அந்தப்பதவிக்கு 8 நிர்வாக சேவை அதிகாரிகள் போட்டி போடுகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. அதனால் அடுத்த மாவட்டச் செயலர் தேர்வு காலதாமதமாவதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.
வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட மன்னார் மாவட்டச் செயலர் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கு இடமாற்றம் பெற்றுச் செல்கிறார். மன்னார் முழுமையாக தமிழ்பேசும் மக்களைக் கொண்ட மாவட்டமாகவுள்ளது.
இந்த நிலையில், மாவட்டச் செயலர் பதவிக்காக 4 தமிழ் அதிகாரிகளும் முஸ்லிம் அதிகாரி ஒருவரும், இரண்டு சிங்கள அதிகாரிகளும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 4 தமிழ் அதிகாரிகளும் தற்போது வடக்கு மாகாண சபைக்கு உட்பட்ட அலுவலகங்களில் பணியாற்றுகின்றனர்.
முஸ்லிம் அதிகாரி புத்தளத்தைச் சேர்ந்தவராகவும் சிங்கள அதிகாரிகள் தென்னிலங்கையை சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
நீண்ட கால இடைவெளியின் பின்னர் வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட ஓர் மாவட்டச் செயலர் பதவிக்கு அதிகமானோர் போட்டி போடுகின்றமை இதுவே முதல் தடவையாகும். (4-101)

# கிராம மட்டக் குழுக்களை அமைக்க வடக்கு மாகாணத்தில் நடவடிக்கை

## சமூக மட்டத்தில் ஒற்றுமையை ஏற்படுத்தும் வகையில்

யாழ்ப்பாணம் , ஜூலை 8
வடக்கு மாகாணத்தில் கிராம அபிவிருத்திக் குழுக்கள், சிறுவர் கழகங்கள் ஆகியவற்றை அமைத்தல் மற்றும் அவற்றைவலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
அது பற்றிய முன்மொழிவும் மாகாண அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சுத் தகவல்கள் தெரிவித்துள்ளன. ஏனைய மாகாணங்களில் இவ்வாறான குழுக்கள் மிகச் சிறப்பாகச் செயற்படுகின்றன என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.
சிறுவர் குழுக்களின் ஊடாக சமூக மட்டத்தில் சிறந்த ஒற்றுமை மற்றும் குழந்தை களின் ஆளுமைகள் வளர்க்கப்படுகின்றன. இவற்றைக் கருத்தில் கொண்டு அண்மையில் நடைபெற்ற மாகாண அமைச்சரவைக் கூட்டத்தில் 20 ஆவது பிரேரணையாக இந்த விடயம் முன்வைக்கப் பட்டது. அந்தப் பிரேரணையில் , "நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தால் கொள்கை ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது.
இதன்படி வடக்கு மாகாணத்தல் கிராம அபிவிருத்திக் குழு அமைப்பதற்கான கொள்கை ஆவணத்துக்கான அனுமதி கிடைக்கப்பெற வேண்டும். இதன் மூலமாகச் சிறுவர் பராமரிப்பையும் பாதுகாப்பான சூழலையும் உருவாக்க முடியும்" என்றுள்ளது.
இந்தப் பிரேரணைக்கு ஏற்ப தற்போது ஆரம்ப கட்ட நடவடிக்கைகளாக உரிய திணைக்க ளங்கள் மூலம் சிறுவர் கழகங்களைப் பதிவு செய்தல் மற்றும் ஒவ்வொரு மாவட்டத்திலும் நான்கு பேர் கொண்ட கண்காணிப்புக் குழுக்கள், சிறுவர் அபிவிருத்தி திணைக்க ளங்கள் மூலமாக அமைக்கப்பட்டு வருகின்றன.
இந்த நடவடிக்கைகள் நிறைவுபெற்ற பின்னர் திணைக்களங்க ளால் கொள்ளைகள் அடங்கிய அறிக்கை சம்பந்தப்பட்ட திணைக்க ளங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(4-ரி)

> “தற்போது ஆரம்ப கட்ட நடவடிக்கைகளாக உரிய திணைக்களங்கள் மூலம் சிறுவர் கழகங்களைப் பதிவு செய்தல் மற்றும் ஒவ்வொரு மாவட்டத்திலும் நான்கு பேர் கொண்ட கண்காணிப்புக் குழுக்கள், சிறுவர் அபிவிருத்தித் திணைக்களங்கள் மூலமாக அமைக்கப்பட்டு வருகின்றன.

# வட மாகாண ஆசிரியர்களுக்கு டிசெ. 5இல் இடமாற்றக் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 7
வடக்கு மாகாணப் பாடசாலைகளில் 2018 ஆம் ஆண்டு வருடாந்த இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்களுக்கான இடமாற்றக்கடிதங்கள் இந்தவருட இறுதியில் அனுப்பிவைக்கப்படும் என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் குறிப்பிட்ட காலத்துக்கு ஒருதடவை இடமாற்றம் செய்யப்படுகின்றனர். வருடாந்த இடமாற்றம்செய்யப்படவேண்டிய ஆசிரியர்களுக்கான இடமாற்றக் கடிதங்கள் இந்த வருட இறுதியில் உரியவர்களுக்கு வழங்கப்படும். அதற்கான பணிகள் இடம்பெறுகின்றன. முதற் கட்டமாக வலய ரீதியாக உள்வாங்கப்பட்ட ஆசிரியர்களின் விவரங்கள் ஜூலை மாதம் 25 ஆம் திகதி மாகாணப் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கப்படும்.தொடர்ந்து இடமாற்றம் தொடர்பான ஒன்று கூடல் வலய மட்டத்தில் நடைபெறும். அதன் பின்னர் இடம்மாற்றம் தொடர்பான கடிதம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும் - என்றார்.
முன்னைய வருடங்களில் ஆசிரியர்கள் இடமாற்றம் உரிய காலப்பகுதியில் முன்னெடுக்கப்படவில்லை என்றும் உரியமுறையில் இடம்பெறவில்லை என்றும் ஆசிரிய சங்கங்கள் குற்றஞ்சாட்டி வந்தன. ‘இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் உரிய காலப்பகுதியில் முன்னெடுக்காததனால் - விடுமுறை காலத்தில்கூட ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. பாடசாலைகள் ஆரம்பித்த பின்னர் இடமாற்றம் செய்யப்பட்டதனால் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டது. பல பாடசாலை களில் சில பாடங்களுக்கான ஆசிரியர்கள் இல்லாத நிலையும் அவர்களை ஒழுங்கு படுத்து வதிலும் நெருக்கடி ஏற்பட்டிருந்தது’ என்றும் ஆசிரியர் சங்கங்கள் தெரிவித்தன. (4-ரி)

சிறுப்பிட்டி இளைஞர்கள் கொலை:

# நீதிமன்ற விசாரணை ஒக்டோபரில் ஆரம்பம்

யாழ்ப்பாணம். ஜூலை. 8
சிறுப்பிட்டியில் இளைஞர்கள் கொல்லப்பட்ட வழக்கின் சுருக்க முறையற்ற விசாரணைகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி நடைபெறவுள்ளன.
யாழ்ப்பாணம், சிறுப்பிட்டியில் 1997ஆம் ஆண்டு ஒக்டோபர் 28ஆம் திகதி இரு இளைஞர்கள் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டனர்.
இதனுடன் தொடர்புபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட 16 இராணுவத்தினரை அச்சுவேலி பொலிஸார் கைதுசெய்தனர். 1998 ஆம் ஆண்டு அவர்களுக்கு நீதிமன்று பிணை வழங்கியது.
வழக்கு கிடப்பில் போடப்பட்டது. இந்த நிலையில் இந்த வழக்கு கடந்த வருடம் சட்டமா அதிபரால் விசாரணைக்கு கொண்டுவரப்பட்டது. குற்றம்சாட்டப்பட்ட 16 இராணுவத்தினரில் இரண்டுபேர் போரில் உயிரிழந்தனர் என்று மன்றில் கூறப்பட்டது.
மிகுதி 14 இராணுவத்தினரினதும் பிணைநிராகரிக்கப்பட்டு மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.
குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் 9 இராணுவத்தினரை சட்டமா அதிபர் வழக்கிலிருந்து விடுவித்தார். ஏனைய 5 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் நீதிவான் சி. சதீஸ்தரன் முன்னிலையில் சுருக்கமுறையற்ற விசாரணைகளுக்காக ஏற்கனவே திகதியிட்டபடி நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது. எனினும் குறித்த வழக்கின் 1ஆம் 2ஆம் சாட்சிகள் மன்றில் முன்னிலையாகியிருக்கவில்லை.
அதனால் முதலாம் 2ஆம் சாட்சிகளை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் மன்றில் முன்னிலையாகுமாறும் சுருக்கமுறையற்ற விசாரணைகள் அன்றைய தினம் நடைபெறும் என்றும் கூறி சந்தேகநபர்களை இந்த மாதம் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிடப்பட்டார்.
இராணுவத்தினர் சார்பில் மன்றில் சட்டத்தரணி நளின் இந்ததிஸ்ஸ முற்பட்டார். (4-12)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் 6 மாதங்களில் 142,000 பேர் சிகிச்சை

யாழ்ப்பாணம். ஜூலை 6
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடந்த அரை ஆண்டில் மட்டும் ஒரு இலட்சத்து 42 ஆயிரத்து 350 பேர் வரையில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
இதில் வைத்தியசாலை விடுதிகளில் தங்கி 69 ஆயிரத்து ஐந்நூறுபேர் வரையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.
அதனைவிட வைத்தியசாலையில் வெளிநோயாளர் சிகிச்சை பிரிவில் 72 ஆயிரத்து 850 பேர் வரையில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று வைத்தியசாலை புள்ளி விவரத்தகவல்கள் தெரிவித்தன.
காய்ச்சல், சளி, தலையிடி, தடிமல், தலைவலி, வயிற்றோட்டம், போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் கூடுதலாக வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றும் சென்றுள்ளனர். இதேவேளை வைத்தியசாலையில் எக்ஸ்ரே படம் எடுக்கும் பிரிவில் மட்டும் 85 ஆயிரம் வரையிலான எக்ரே கதிர்வீச்சு படங்கள் எடுக்கப்பட்டன என்று வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (4-17)

# மருந்து உற்பத்திகளை வடக்கில் சந்தைப்படுத்த நடவடிக்கை வேண்டும்

## வைத்திய சேவைக் கூட்டுறவு சங்கத் தலைவர் கோரியுள்ளார்

யாழ்ப்பாணம், ஜூலை 8
வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கத்தில் தயாரிக்கப்படும் சித்தவைத்திய மருந்துகளை உடனுக்குடன் சந்தைப்படுத்த முடியாத நிலை நீடிக்கிறது. அதனால் பல இலட்சம் ரூபா பெருமதியான மருந்து வகைகள் சங்கத்தில் தேங்கிக் கிடக்கின்றன. அவற்றை வடக்கிலுள்ள பிரதேச சபைகளின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளுக்கு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இவ்வாறு அந்தச் சங்கத்தின் தலைவர் கே. சிறிகணநாதன் கோரியுள்ளார். ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டியுள்ள சங்கத்தின் தலைவர் மேற்படி சங்கத்தில் உற்பத்திசெய்யப்படும் மருந்துவகைகளை வடக்கு மாகாணத்தில் உள்ள பிரதேச சபைகளின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளுக்கு விற்பனைசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியும்.
வலி. தென்மேற்கு பிரதேசத்தில் விளான் பகுதியில் 1992 ஆம் ஆண்டு எமது சங்கம் உதயமானது.
சங்கத்தின் கட்டடத்துக்கு 20 மில்லியன் ரூபாவை [illegible] இயந்திர சாதனங்களுக்காக மேலும் 5 மில்லியன் ரூபாவை வழங்கியது. சுமார் இரண்டரைக் கோடி ரூபா முதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள எமது சங்கத்தில் உள்ளூர் மூலிகைகளைப் பயன்படுத்தித் தரமான மருந்து வகைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.
இங்கு 13 பெண்கள் நிரந்தமாகப் பணிபுரிகின்றார்கள். இங்கு உற்பத்தி செய்யும் மருந்து வகைகளை உடனுக்குடன் சந்தைப்பத்த முடியாமையால் பல இலட்சம் ரூபா பெறுமதியான மருந்து வகைகள் சங்கத்தில் தேங்கிக் கிடக்கின்றன. அதனால் வடக்கின் உற்பத்திகள் வீணடிக்கப்படுகின்றன. இதனால் சங்கத்தின் வளர்ச்சியிலும் பல தடங்கல்கள் ஏற்படுகின்றன.
எனவே சங்கத்தில் உற்பத்தி செய்யப்படும் மருந்து வகைகளை உடனுக்குடன் சந்தைப்படுத்தக் கூடிய வகையில் வடக்கில் பிரதேசசபைகளின் கீழ் இயங்கும் சித்தவைத்திய நிலையங்களுக்கு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்துள்ளார். அது தொடர்பில் கவனம் செலுத்துவதாகக் கூட்டத்தில் இணைத்தலைவர்களால் கூறப்பட்டது.
(4-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதய நோயாளர்களுக்கான உணவு முறை

★நார்ப்பொருள்கள் அதிகளவுள்ள உணவுகளை உள்ளெடுத்தல்.
★அதிகளவு மரக்கறிவகை, கீரைவகை, பழவர்க்கங்களைச் உள்ளெடுத்தல்.
★இரவுநேர உணவை குறைவானளவில் உட்கொள்ளல். நித்திரைக்குச் செல்வதற்கு இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்பாக உணவெடுத்தல்
★கடலுணவுகளில் சிறிய மீன்வகைகள் நன்மை தரும். அவற்றை முடிந்தவரை பொரித்துண்பதை தவிர்த்தல்.
★ஆடை நீக்கிய பால்மா வகைகளை பாவிக்கலாம்.
★வெண்ணெய் நீக்கிய பின் தயாரிக்கப்படும் தயிர், மோர், பாவிக்கலாம்.

*தகவல்*
*சு.ம.அ.பணிமனை,*
*யாழ்.மாநகரசபை*

# சாவகச்சேரி தும்புத் தொழிற்சாலை எப்போதுதான் இயங்க ஆரம்பிக்கும்?

## திறந்த நாள் முதல் மூடியே கிடக்கும் புதிய கட்டடம்



சாவகச்சேரி, ஜூலை 8
வடக்கு மாகாண கைத்தொழிற்றுறைத் திணைக்களத்தால் சாவகச்சேரி கோயிற்குடியிருப்புப் பகுதியில் அமைக்கப்பட்ட தும்புத் தொழிற்சாலை திறக்கப்பட்ட தினத்திலிருந்து கைவிடப்பட்ட நிலையில் உள்ளது. அதனைவீணடிக்காமல் தொழிற்பணிகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தும்புத் தொழிற்சாலைக் கட்டடத்தை கடந்த மார்ச் 29 ஆம் திகதி வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் திறந்து வைத்தார்.

தும்பு மூலப்பொருளாகக் கொண்டு பல முடிவுப் பொருள்களை உற்பத்தி செய்வதனை நோக்காகக் கொண்டு இந்தக் கட்டடம் கட்டப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது. தொழில் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான இயந்திரம் ஒன்றும் அங்கு பொருத்தப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டு மூன்று மாதங்கள் கடந்தபோதும் இன்னமும் அது இயங்கத் தொடங்கவில்லை என்று பொதுமக்கள் கவலை தெரிவித்தனர். அதனை இயங்க வைக்க உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோருகின்றனர்.

"தும்புத் தொழிற்சாலை அமைந்துள்ள காணியில் தண்ணீர் வசதி இன்னமும் ஏற்படுத்தப்படவில்லை. வளாகத்தில் ஆழ்துணைக் கிணறு அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குழாய்க் கிணறு அமைத்ததும் தும்புத் தொழில் உற்பத்திகள் ஆரம்பிக்கப்படலாம்" என்று தும்புத் தொழிற்சாலை அமைந்துள்ள சாவகச்சேரிப் பிரதேச சபையினர் தெரிவித்தனர்.

"தும்புத் தொழிற்சாலைக் கட்டடத்தில் தும்பு திரிக்கும் இயந்திரம் மாத்திரமே பொறுத்தப்பட்டது. ஆனால் வெளியில் இருந்து தும்பைக் கொள்வனவு செய்து அதனை திரித்து உற்பத்தியை மேற்கொள்வதால் எமக்கு அதிக செலவையும் சிரமத்தையும் ஏற்படுத்தும். ஆகவே இந்தத் தொழிற்சாலையில் தும்பு அடிக்கும் இயந்திரம் மற்றும் தும்பை ஊற வைக்கும் தொட்டிகள் என்பன தேவையாக இருந்தன. இதற்கான நிதியைத் தருமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் நாம் கோரியிருந்தோம்.

அதற்கான நிதி தற்பொழுது எமக்கு கிடைத்துள்ளது. தும்பு அடிக்கும் இயந்திரம் மற்றும் தும்பை ஊற வைக்கும் தொட்டிகள் என்பனவற்றின் தேவைகள் நிறைவு செய்யப்பட்டு இன்னமும் மூன்று மாத காலப் பகுதிக்குள் தொழிற்சாலையை இயங்க வைக்க முடியும். அதற்கு முன்னர் தும்பின் மூலமாகத் தாயாரிக்கப்படும் தூரிகை போன்ற உற்பத்திகளுக்கான ஆரம்பபயிற்சிகளை நாம் வழங்குவதற்கான ஏற்பாடுகளையம் மேற்கொள்ளவுள்ளோம்'' - என்று தொழிற்துறைத் திணைக்கள பணிப்பாளர் திருமதி உஷா சுபலிங்கம் தெரிவித்தார். (4-ரி)

# கிளியில் 13,226 குடும்பங்களுக்கு வீடுகள் நிர்மாணிக்க வேண்டும்

## 378வீடுகள்சீரமைக்கவேண்டியுள்ளன

கிளிநொச்சி மாவட்டத்தில் இன்னும் 13 ஆயிரத்து 226 குடும்பங்களுக்கு வீடுகள் தேவையாகவுள்ளன என்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு '35 ஆயிரத்து 661 புதிய வீடுகள் முன்னர் தேவையாக இருந்தன. 6 ஆயிரத்து 179 வீடுகள் சீரமைக்க வேண்டியிருந்தன. அவற்றில் இதுவரை 22 ஆயிரத்து 435 குடும்பங்களுக்குப் புதிய வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. 4ஆயிரத்து 801 வீடுகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன.

இன்னமும் 13 ஆயிரத்து 226 குடும்பங்களுக்குப் புதிய வீடுகள் தேவைப்படுகின்றன. ஆயிரத்து 378 குடும்பங்களின் வீடுகளைச் சீரமைக்கவேண்டியுள்ளன. கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் 19 ஆயிரத்து 547 புதிய வீடுகள் தேவைப்படுகின்றன. 3ஆயிரத்து 305 வீடுகள் சீரமைக்க வேண்டியுள்ளன. இந்தநிலையில் 11 ஆயிரத்து 512 புதியவீடுகள்கிடைத்துள்ளன. 2 ஆயிரத்து 843 வீடுகள் சீரமைக்கவேண்டியுள்ளன. இன்னமும் 8 ஆயிரத்து 35 புதிய வீடுகள் தேவைப்படுகின்றன. 462 வீடுகள் சீரமைக்கவேண்டியுள்ளன.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 6 ஆயிரத்து 487 புதிய வீடுகள் தேவைப்படுகின்றன. ஆயிரத்து 697 வீடுகள் சீரமைக்க வேண்டியுள்ளன. இந்தநிலையில் 3 ஆயிரத்து 807 புதிய வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. 1 ஆயிரத்து 335 வீடுகள் சீரமைக்கப்பட்டுள்ளன. 2ஆயிரத்து 680 புதிய வீடுகள் தேவையாகவுள்ளன. 362 வீடுகள் சீரமைக்கப்பட வேண்டியுள்ளன. பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் 6 ஆயிரத்து 593 புதிய வீடுகள் நிர்மாணிக்க வேண்டியிருந்தன. 592 வீடுகள் சீரமைக்கவேண்டி யிருந்தன. இந்தநிலையில் 4 ஆயிரத்து 953 புதிய வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன. 291வீடுகள் சீரமைக்கப்பட்டன. ஆயிரத்து 640 வீடுகள் நிர்மாணிக்கப்படவேண்டியுள்ளன. 301 வீடுகள் சீரமைக்கப்படவேண்டியுள்ளன. பச்சிலைப்பள்ளிபிரதேசசெயலாளர் பிரிவில் 3 ஆயிரத்து 34 வீடுகள் நிர்மாணிக்க வேண்டியிருந்ததோடு 585 வீடுகள் சீரமைக்கவேண்டி யிருந்தன. அவற்றில் 2 ஆயிரத்து 163 வீடுகள் நிர்மா ணிக்க ப்பட்டன. 332 வீடுகள் சீரமைக்கப்பட்டன. 871புதிய வீடுகள் தேவையாகவுள்ளன. 253 வீடுகள்சீரமைக்கப்படவேண்டியுள்ளன' என்று மாவட்டச் செயலகத்தகவல்கள் மேலும் தெரிவித்தன. (4-6)

# 6 கிலோ மீற்றர் தூரத்துக்கு எம்மை அலையவிடாதீர்கள்

## கொக்கிளாய் மீனவர்கள் கோரிக்கை

> குறித்த வாடியினை தடை செய்ய வேண்டும் என்று தென்னிலங்கை மீனவர்களில் 3 பேர் சார்பில் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தினர் கடந்த வருடம் இதே மாதம் முல்லைத்தீவு நீதிமன்றினில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

முல்லைத்தீவு, ஜூலை 8
முல்லைத்தீவு கொக்கிளாய் உள்ளூர் மீனவர்களைக் கருநாட்டுக்கேணி அல்லது முகத்துவாரம் பிரதேசங்களுக்கு நகர்த்த முயற்சிப்பதாக அந்தப்பகுதி மீனவர் சங்கம் குற்றம் சாட்டுகின்றது.

"கருநாட்டுக்கேணி அல்லது முகத்துவாரம் பிரதேசங்களுக்கு நகர்த்தினால் நாம் வசிக்கும் பிரதேசத்தில் இருந்து 6 கிலோ மீற்றருக்கும் அதிகமான தூரத்துக்கு பயணிக்க வேண்டிய இக்கட்டுநிலை ஏற்படும். இந்த நிலையில்தொழில்புரிவதோ அல்லது உடைமைகளைப் பாதுகாப்பதோ முடியாத விடயம். திடீர் இடர் ஏற்படும் காலத்தில் மாற்று ஏற்பாடு செய்ய முடியாத நிலமையே ஏற்படும். அவ்வாறு நாளாந்தம் நாமும் எமது எதிர்காலச் சந்ததியும் இவ்வளவு தூரத்துக்கு அலையமுடியாது. அதற்கு இடமளியாதீர்கள். கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் புரிந்துகொள்ள வேண்டும்" - என்று பிரதேச மீனவர்கள் கோருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் கடற்கரையில் உள்ளூர் மீனவர்களின் பயன்பாட்டுக்காக வாடி அமைக்க பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட நிலம் தென்னிலங்கை மீனவர்களுக்கான கரைவலைப்பாட்டுப் பகுதிக்குள் உள்ளடங்குவதனால் அந்த வாடியைத் தடை செய்ய வேண்டும் என்று தென்னிலங்கை மீனவர்களில் 3 பேர் சார்பில் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினர் கடந்த வருடம் ஜூலை மாதம் முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

"வாடி அமைப்புக்காக வழங்கப்பட்ட பிரதேசம் தென்னிலங்கை மீனவர்களின் கரைவலைப் பாட்டுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிக்குள் அடங்கவில்லை. தென்னிலங்கை மீனவர்களுக்கு வழங்கப்பட்ட பகுதியில் இருந்து 375 மீற்றருக்கும் அப்பாலேயே உள்ளூர் மீனவர்களின் வாடி உள்ளது. பிரதேச செயலாளர், அரச நில அளவையாளர் மூலமாக மேற்கொண்ட அளவீட்டின் ஆவணத்தில் நில அளவைத் திணைக்கள அதிகாரியும் ஒப்பமிட்டுள்ளார்" என்று அந்த ஆவணம் கடந்த மார்ச் மாதம் 14 ஆம் திகதி வழக்கு விசாரணையின்போது மன்றுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

இதனையடுத்துச் சகல தரப்பினரதும் பங்குபற்றலுடன் மீண்டும் அளவீடு செய்ய மேற்கொண்டபோது குறுக்கீடுகள், இடையூறுகள் ஏற்பட்டன. அதனால் உள்ளூர் மீனவர்களும் பிரதேச செயலகப் பணியாளர்களும் அந்த இடத்தில் இருந்து வெளியேறியிருந்தனர். நீரியல்வளத் திணைக்களத்தின் பிரதிநிதிகள் மட்டும் அளவீட்டை மேற்கொண்டு அதன் வரைபடத்தை நீதிமன்றில் சமர்ப்பித்திருந்தனர்.

இந்த விடயம் தொடர்பில் இறுதி முடிவை மன்று கோரியதன் பெயரில் மேற்படி விடயத்தை சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையைப் பெறுவதற்காகச் சமர்ப்பித்திருப்பதாக நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் மன்றுக்குத் தெரிவித்திருந்தனர்.

பிரதேசசெயலாளரால் வழங்கப்பட்ட நிலம் தொடர்பான சர்ச்சைக்குத் தீர்வை எட்டுவதற்காக மாவட்டச் செயலர் மற்றும் கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளர், நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரை சட்டமா அதிபர், கடந்த 29ஆம் திகதி கொழும்புக்கு அழைத்திருந்தார். அங்கு இந்த விடயம் பதில் சட்டமா அதிபர் தலைமையில் ஆராயப்பட்டு உள்ளூர் மீனவர்களின் வாடியைத் தற்போதைய இடத்தில் இருந்து வடக்குத் திசைநோக்கி 275 மீற்றர்கள் தூரத்துக்கு நகர்த்தி நிரந்தர வாடி அமைக்க முடியும் என்ற இணக்கம் காணப்பட்டது. ஆனால் அதனை நடைமுறைப்படுத்துவதில் மீண்டும் சிக்கல் ஏற்பட்டது.

தற்போதுள்ள இடத்தில் இருந்து வடக்குநோக்கிவாடியை நகர்த்துவதனால் அங்கே அதிக பெரும் கற்பாறைகள் காணப்படுவதோடு அவ்வாறு காணப்படும் கற்பாறைகளும் அகற்றக்கூடிய ஏதுநிலைமையும் இல்லை என்று உள்ளூர் என்று மீனவர்கள் கூறுகின்றனர். (4-101)

# வங்கியிலிருந்து ரூ.20 லட்சம் மோசடியாகக் கைமாறி மாயம்

வவுனியா, ஜூலை 8
வவுனியாவிலுள்ள வங்கி ஒன்றில் வைப்பிடப்பட்ட 20 இலட்சம் ரூபா பணம் மோசடியாக வேறொருவரால் பெறப்பட்டுள்ளதாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் நபர் வெளிநாட்டுச் சுற்றுலா செல்வதற்காக முகவர் ஒருவரிடம் தனது வங்கி புத்தகம் கட வுச்சீட்டு என்பனவற்றை ஒப்ப டைத்துள்ளார். பின்னர் அவருடனான தொடர்பு துண்டிக்கப்பட்டதனால் சந்தேகமடைந்த பாதிக்கப்பட்ட நபர் தனது வங்கிக்கணக்கைச் சரிபார்த்தபோது வங்கியின் நாரமல என்ற பகுதியிலுள்ள கிளையிலிருந்து 20 இலட்சம் ரூபா வைப்பு மீள எடுக்கப்பட்டுள்ளமை பதிவாகியிருந்தது. குறித்த முகவரே பணத்தை மோசடியாகப் பெற்றுள்ளார் என்று சந்தேகிக்கப்படுகிறது. விசாரணை முன்னெ டுத்துள்ள தாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டம் ஒழுங்குகள் சீர்குலைந்தமைக்கு ரணிலே பொறுப்பு

### லெசில் டி சில்வா சாடல்

கொழும்பு, ஜூலை07

நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந் திருப்பதற்குத் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவே பொறுப்புச் சொல்லவேண்டுமென பெரும் மோசடிகள் மற்றும் அதிகார துஸ்பிரயோகம் தொடர்பான அரச தலைவர் ஆணைக் குழுவின் முன்னாள் செயலாளர் லெசில் டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த அரசு ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதையே முதன்மை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது எனச் சுட்டிக்காட்டியுள்ள அவர், 19ஆவது திருத்தச் சட்டம் கூட, தற்போதைய அரசின் நிலையை உறுதி செய்யும் நோக்கிலேயே உருவாக்கப்பட்டது எனவும் குறிப்பிட்டார்.

தேசிய அரசு அல்லாத நிலையில் அதிகளவில் அமைச்சர்கள் நியமிக்கப் பட்டுள்ளதாகவும், தேசிய கணக்காய்வுச் சட்டம் இதுவரை நிறைவேற்றப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்த அரச தலைவர் முன்வரத் தவறினால் அவரும் மக்களை ஏமாற்றியதாகவே கருதப்பட நேரிடும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

லெசில் டி சில்வா கடந்த ஆண்டு அரச தலைவர் ஆணைக்குழுவின் செயலாளர்பதவியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். ஆயினும் அவர் எதற்காக நீக்கப்பட்டார் என்பது பற்றிய விவரங்கள் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. (த-ய)

# சு.கவில் போட்டியிட மகிந்தவுக்கு இனி இடமே கிடையாது

### கட்சிப் பொதுச்செயலர் அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 8

இனிவரும் தேர்தல்களில் மகிந்த ராஜபக்சவுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் வேட்பாளர் நியமனம் வழங்கப்படமாட்டாது என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த ஆட்சியில் ஊழல் மோசடிகளும் சுதந்திரக் கட்சியைக் குடும்பச் சொத்தாக்கிக் கொள்ளும் முயற்சிகளும்தான் இடம்பெற்றன. கட்சியின் இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்டத் தலைவர்களை உருவாக்கும் தேவை மகிந்தவுக்கு இருந்ததில்லை. ஒன்றன்பின் ஒன்றாக மாறி மாறி குடும்பமே கட்சியை நிர்வகிக்கும் திட்டம்தான் அவரிடம் இருந்தது.

அவர் முடிந்ததும் மகன். மகன் முடிந்ததும் பேரப்பிள்ளை என்றுஒருகுடும்பம் மாத்திரமே கட்சியையும் நாட்டையும் ஆட்சி செய்யும் திட்டம் மகிந்தவால் வகுக்கப்பட்டது. அந்தத் திட்டங்கள் அனைத்தையும் நாம் உடைத்தெறிந்துவிட்டோம். இனிமகிந்தவுக்கு அரசியல் எதிர்காலம் கிடையாது. எந்தத் தேர்தலிலும் அவர் சுதந்திர கட்சி சார்பில் போட்டியிட முடியாது. அவர் வேட்பாளர் நியமனம் வழங்கமாட்டோம்.

இந்த நாட்டின் அரசமைப்பின்படி அவரால் இனி அரச தலைவர் தேர்தலில் போட்டியிட முடியாது. ரணிலும் மைத்திரியும்தான் இனிப் போட்டியிடுவர். மீண்டும் ஊழல் மோசடிமிக்க ஆட்சி ஒன்று மலருவதற்கு நாம் இடம் கொடுக்கமாட்டோம். மகிந்த மீது எமக்குத் தனிப்பட்ட கோபம் எதுவும் கிடையாது. எமக்கு அவருடன் இருப்பது அரசியல் ரீதியான பிரச்சினை. மீண்டும் இந்த நாட்டை ஊழல் மோசடிக்காரர்களிடம் ஒப்படைப்பதா என்ற பிரச்சினை. போர் வெற்றி போன்ற சில விடயங்களில் அவர் ஈட்டிய புகழ் அவருக்குத் தொடர்ந்து இருக்கும். அதில் நாம் கைவைக்கமாட்டோம். அதற்காக அவரிடம் நாட்டை ஒப்படைத்து சீரழிக்க முடியாது. - என்றார். (த-3)

# 2016 ஒதுக்கிய நிதியில் ஆகக் கூடிய வீதத்தை பயன்படுத்தியுள்ளன ஐந்து அமைச்சுக்கள்

கொழும்பு, ஜூலை 8

2016ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் ஆகக்கூடிய சதவீதத்தைப் பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு, தபால் மற்றும் தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் அலுவல்கள் அமைச்சு, அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு, மின்வலு மற்றும் புதுப்பிக்கத் தக்க சக்தி அமைச்சு என்பன பயன்படுத்தியுள்ளதாக நிதி மற்றும் வெகுசன ஊடகப் பிரதியமைச்சர் ஏரான் விக்ரமரத்ன சபையில் அறிவித்தார்.

அதேவேளை, கல்வி அமைச்சு, சிறப்புச் செயற் திட்ட அமைச்சு, மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு, சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு, நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சு என்பன 2016ஆம் ஆண்டில் வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் குறைந்தளவான சதவீதத்தைப் பயன்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம்வியாழக்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி பதில் சுற்றில் மஹிந்த ஆதரவு பொது எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரிடம் இது தொடர்பான கேள்வியைத் தொடுத்திருந்தார்.

இதற்குப் பதிலளித்தபோதே நிதி மற்றும் வெகுசன ஊடகப் பிரதியமைச்சர் ஏரான் விக்கிர மரதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்:

2016ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஊடாக மீண்டுவரும் செலவிற்காக ஒதுக்கப்பட்ட நிதியில் ஆகக் கூடுதலான சதவீதத்தை பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு, கிராமிய பொருளாதார அமைச்சு, தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, பொது நிர்வாக மற்றும் முகா மைத்துவ அமைச்சு என்பன பயன்படுத்தியுள்ள அதேவேளை, மீண்டுவரும் செலவுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் குறைந்த சதவீதத்தைக் கல்வி அமைச்சு, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு, சிறப்புச்செயற்திட்ட அமைச்சு, மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு, மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு என்பன பயன்படுத்தியுள்ளன.

அத்துடன், 2016ஆம் ஆண்டு மூலதனச் செலவுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு, புத்தசாசன அமைச்சு, அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு, மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு மற்றும் சமூக வலுவூட்டல் மற்றும் நலன் புரி அமைச்சு என்பன ஆகக் கூடுதலான சதவீதத்தை பயன்படுத்தியுள்ளன. சிறப்புச் செயற்திட்ட அமைச்சு, நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் பன்னாட்டுசர்வதேச வர்த்தக அமைச்சு, மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு, சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு என்பன 2016இல் மூலதனச் செலவுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் ஆகக்குறைந்த சதவீதத்தை பயன்படுத்தியுள்ளன - என்றார். (த)

# காணாமற்போதல்களை குற்றமாக்கும் சட்டத்தால் மகிந்த, கோத்தா ஆபத்தில்

### பதறுகிறார் தினேஸ் குணவர்தன

கொழும்பு, ஜூலை 8

பலவந்தமாகக் காணாமற்போதலைக் குற்றமாக்கும் புதிய சட்டம் மகிந்த ராஜபக்ச, கோத்தபாய ராஜபக்ச மற்றும் படையதிகாரிகள் உள்ளிட்டோரைப் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளிவிடும் என கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.



நாடாளுமன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பலவந்த காணாமற்போதல்களிலிருந்து அனைவரையும் பாதுகாக்கும் பன்னாட்டுப் பிரகடனச் சட்டத்தைத் தற்காலிக அடிப்படையில் அன்றி முழுவதுமாக ரத்துச் செய்யவேண்டும்.

இந்தப் பிரகடனம் குறித்த சட்டம் இலங்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க எவ்வித நியாயமும் கிடையாது. அயலுறவு அமைச்சும் அதன் அதிகாரிகளும் இந்தச் சட்டத்தில் கையொப்பமிட்டுப் பெரும் தவறிழைத்துள்ளனர்.

இந்த சட்டத்தின் ஊடாகப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த படையினர், அதற்குத் தலைமை வழங்கிய முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச உள்ளிட்டவர்கள் கடும் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்படுவர்.

எளிமையாகக் கூறினால் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் வெளிநாடு ஒன்றுக்கு இந்த நாட்டின் குடிமகனை ஏதேனும் ஓர் குற்றச்சாட்டின் அடிப்படையில் அந்த நாட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு இலங்கை அரசிடம் கோரிக்கை விடுக்க முடியும். அவ்வாறான கோரிக்கை விடுக்கப்பட்டால் குறித்த நபரை அந்த நாட்டிடம் இலங்கை ஒப்படைக்க வேண்டிய நிலை ஏற்படும் - என்றார்.

# தொலைபேசிகளை ஒட்டுக் கேட்கிறது கூட்டு அரசு

அரசு இரகசியமாகத் தொலைபேசிகளை ஒட்டுக் கேட்டு வருகின்றது என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

தொலைபேசிஉரையாடல்களைஒட்டுக்கேட்பதற்காக அரசு அமெரிக்காவிலிருந்து ஒரு கருவியைத் தருவித்துள்ளதாக அவர் கூறினார்.

தொலைதொடர்பு நிறுவனங்களின் ஒத்துழைப்பு இன்றி அரசால் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-ய)

# உமா ஓயாவால் பாதிப்புற்றோருக்கு தோட்டப்புறங்களில் 50 ஏக்கர் காணி

### அமைச்சர் மஹிந்த அமரவீர உறுதிமொழி

கொழும்பு, ஜூலை 8



பண்டாரவளைப் பிரதேசத்தில் உமா ஓயாத் திட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அந்தப் பகுதியிலுள்ள தோட்டக் கம்பனியின் 50 ஏக்கர் காணியைப் பெற்றுத்தர அரசு தீர்மானித்திருப்பதாகக் கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

குறிப்பிட்ட தோட்டக் கம்பனியிடமிருந்து 50 ஏக்கர் [illegible] ளுக்குப் பகிர்ந்தளிக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

[illegible] ஓயாத் திட்டத்தால் [illegible] பண்டாரவளைப் பிரதேச மக்களுக்குப் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. அவர்களின் தீர்வுக்கான முதற்கட்ட நடவடிக்கையாக அதியுயர் அபாயப் பகுதிகளில் உள்ளவர்கள் இந்த 50 ஏக்கர் காணியில்குடியேற்றப்படுவர்.

மீண்டும் மழைகாலம் தொடங்கினால் இந்தப் பகுதியில் மேலும் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்பிருப்பதால் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பவேண்டியுள்ளது.

அத்துடன், குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு வழங்குவதற்கான திட்டமொன்றும் முன்னெடுக்கப்படும். அதுவரை தற்காலிக நிவாரணமாக 500 லீற்றர் கொள்ளளவு கொண்ட மூவாயிரம் நீர்த் தாங்கிகள் வழங்கப்படவுள்ளன. இதன்மூலம் அந்தப் பிரதேசத்திலுள்ள சுமார் 15 ஆயிரம் குடும்பங்களுக்குத் தற்காலிக நிவாரணம் வழங்கப்படும் - என்றார். (த-ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரிபாலவும் ரணிலும் சொன்னதை செய்யவில்லை

## பிரதியமைச்சர் ரஞ்சன் விசனம்

கொழும்பு, ஜூலை07
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவும் ஜனவரி மாதம் 8ஆம் திகதி அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை எனப் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்பதால் அந்தக் கட்சியின் கள்வர்களும், தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் என்பதால் அந்தக் கட்சியின் கள்வர்களும் காப்பாற்றப்படுகின்றனர்.



கள்வர்கள் கட்சி நிறபேதங்கள் இன்றித் தண்டிக்கப்பட வேண்டும். அரசு 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி கள்வர்களைப் பிடிப்பதாக வாக்குறுதி அளித்திருந்தது. ஆயினும் அதனை உரிய முறையில் நிறைவேற்றத் தவறியுள்ளது.

இவ்வாறு கூறுவதால் இரண்டு கட்சிகளினதும் தலைவர்களும் என்னுடன் கோபிக்கக் கூடும். ஆயினும் உண்மைகள் கசப்பானவை. என்றாலும் அவற்றை வெளிப்படுத்தவேண்டியது அவசியமானது- என்றார். (த-ய)

# போசாக்கில்லாது ஐந்தரை இலட்சம் சிறார்கள் பாதிப்பு

## சபையில் அறிவித்தார் அமைச்சர் ராஜித

கொழும்பு, ஜூலை 8
இலங்கையில் சிறுவர் சனத்தொகையில் 5 இலட்சத்து 62ஆயிரத்து 288 சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன சபையில் தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி பதில் சுற்றில் மகிந்த அணியான பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வாசுதேவ நாணயக்கார தனது கேள்வியில், “இலங்கையில் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை, அதனைத் தீர்மானிக்கும் முறையியல், சிறுவர் சனத்தொகையில் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களின் சதவீதம் மற்றும் இதனால் மரணமடைந்துள்ள சிறுவர்களின் எண்ணிக்கை போன்ற தகவல்களைக் கோரியிருந்தார்.

இந்தக் கேள்விகளுக்குப் பதிலளித்த சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன,
“ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள பிள்ளைகளில் மூன்று பிரிவினர் உள்ளனர். அதில் வயதிற்கேற்ப சரியான பாரத்தைக் கொண்டிராத பிள்ளைகள் நிறை குறைந்த பிள்ளைகள் என்றும், வயதிற்கேற்ப சரியான நீளம் அல்லது உயரத்தைக் கொண்டிராத பிள்ளைகள் உயரம் குறைந்த பிள்ளைகள் என்றும், நீளம் மற்றும் உயரத்திற்கேற்ப சரியான நிறையைக் கொண்டிராத பிள்ளைகள் பருமன் குறைந்த பிள்ளைகள் என்றும் வகைப்படுத்தப்படுகின்றனர். அதில் நிறை குறைந்த 2,43,066 சிறுவர்களும், உயரம் குறைந்த 143955 சிறுவர்களும், பருமன் குறைந்த 1,77,267 சிறுவர்களும் என மொத்தம் 5,64,288 சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சுகாதார, போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சமூக விஞ்ஞான மற்றும் சுகாதார ஆய்வுகள் மூலம் மற்றும் சுகாதார அமைச்சின் குடும்ப நல சேவை அலுவலகத்தால் ஆண்டு தோறும் நடத்தப்படும் போசணை மதா ஆய்வின் மூலம் மேற்படி எண்ணிக்கை கணிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையில் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை சிறுவர் சனத்தொகையில் 36.1வீதம் ஆகும்” என்றார்.

இதேவேளை, சுகாதார அமைச்சால் திரட்டப்பட்ட தகவல்களில் ஊட்டச்சத்து குறைபாட்டு நிலைமை சுழற்சியாகத் தாக்கம் செலுத்தும் காரணத்தால் ஏற்படக்கூடிய சிறுவர் மரணம் தொடர்பான விபரங்கள் உள்வாங்கப்படவில்லை எனவும் இதன்போது அமைச்சர் ராஜித சேனாரத்ன சுட்டிக் காட்டினார். (த)

# ஊடகங்களை கட்டுப்படுத்த சட்டம் வரும்

## எச்சரிக்கின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூலை07
ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அரசு புதிய சட்டமொன்றை அறிமுகம் செய்ய உள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
செய்திகளின் மூலங்களை அறிவிக்கவேண்டும் என்ற வகையில் சட்டமொன்றை அரசு அறிமுகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசின் உண்மை நிலையை வெளிப்படுத்தும் ஊடகங்களை ஒடுக்கும் நோக்கில் இவ்வாறு புதிய சட்டம் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

தகவல்களை மூடி மறைத்து அரசின் நன்மதிப்பினை தக்க வைத்துக் கொள்வதில் அரசு ஆர்வம் காட்டி வருகிறது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டமை ஜனநாயக விரோதச் செயற்பாடுஎன்றார். (த)



# வெளிநாட்டில் வாழும் இலங்கையர்களுக்கும் வாக்குரிமை விரைவில்

## ஐ.தே.கட்சி எம்.பி. சபையில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை07
‘வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கு வாக்குரிமையைப் பெற்றுக் கொடுக்க அரசு துரித நடவடிக்கை எடுக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் குருணாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சீ.அலவத்துவல அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கு வாக்குரிமை வழங்கும் விடயம் குறித்து தற்போது கலந்துரையாடப்பட்டு வருகிறது. இதற்கான கலந்தாய்வுகளை மேற்கொள்ள ஏற்கனவே நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கையர்களுக்கு வாக்குரிமை வழங்கும்போது பின்பற்ற வேண்டிய அடிப்படை விடயங்கள் தொடர்பாகப் பல யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

நாட்டுக்குப் பெரிய பொருளாதாரப் பலத்தைக் கொடுத்து வரும் வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தொழிலாளர்களுக்கு உரிய கௌரவத்தைக் கொடுக்கவும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் அரசு முன்னுரிமை வழங்கும்.

இதற்காக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டியது முக்கியமானது - என்றார். (த-ய)

# மைத்திரி - ரணில் இடையே முரண்பாடு

## இதனால் நாட்டுக்கு எதுவித பயனுமில்லை என்கிறார் மகிந்த

கொழும்பு, ஜூலை8
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவினதும் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவினதும் கொள்கைகளும், தீர்மானங்களும் ஒன்றுக்கொன்று முற்றிலும் முரணாக இருப்பதால் நாட்டுக்கு எந்தவிதப் பிரயோசனமும் கிடைக்கப்போவதில்லை என முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டின் பொருளாதாரம் அடியோடு சிதைக்கப்பட்டுவிட்டது.

நாட்டைப் பிளவுபடுத்துவதற்குப் புதிய அரசமைப்பைக் கொண்டுவர முயற்சி நடக்கிறது.

அரச சொத்துகள் தனியாருக்குத் தாரை வார்க்கப்பட்டு வருகின்றன. நாட்டில் இலட்சக்கணக்கான இளைஞர், யுவதிகள் வேலையில்லாமல் திண்டாடி கொண்டிருக்கும்போது இந்தியாவிலிருந்து வேலைக்கு ஆள்களைத் தருவிக்கப் பார்க்கிறார்கள்.

நாட்டை மீட்டெடுத்த வீரர்களும் வீராங்கனைகளும் வேட்டையாடப்பட்டு வருகிறார்கள். நாட்டில் நிறையத் தலைவர்கள் உருவாகிவிட்டார்கள்.

அவர்களை அடையாளம் கண்டு கொள்ளப்பொதுமக்கள்திணறுகிறார்கள். உண்மையான தலைவர் யார் என்பதைப் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கின்றது.

அமைச்சரவைப் பேச்சாளர்களாக மூவர் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரின் நோக்கங்களும் வெவ்வேறாக உள்ளன.

நாட்டின் எதிர்காலம் இருண்ட யுகமொன்றை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது - என்றார். (த-ய)

# சிங்களத்தில் பதிலடி கொடுத்த விஜயகலா

கொழும்பு, ஜூன் 9
இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் உரையைச் சபையில் இருந்த பொது எதிரணி உறுப்பினர்கள் சிலர் குழப்ப முயன்றனர். இதனால் ஆத்திரமடைந்த அவர், சிங்களத்தில் காரசாரமான பதிலடி கொடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டவரைவு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார் இராஜாங்க அமைச்சர் விஜயகலா. இதன்போது மகிந்த அணியைச் சேர்ந்த தினேஸ் குணவர்தன உட்பட சிலர் குழப்பங்களை ஏற்படுத்தினர்.

இதன்போது ஆத்திரமடைந்த விஜயகலா மகேஸ்வரன், “எமக்கும் உரையாற்றுவதற்கு இடம் தாருங்கள். நீங்கள் எப்பொழுதும் இனவாதத்தையே பேசுகின்றீர்கள். நாம் பல கஷ்டங்களைச் சுமந்து கொண்டு இருக்கின்றோம். பொய்யாகக் கூச்சலிடாதீர்கள்” எனச் சிங்களத்தில் காரசாரமாகக் கூறினார்.

இதையடுத்தும் சபையில் தொடர்ந்து குழப்பங்கள் ஏற்பட்டன. (த-ய)



# சு.க. தலைமையகத்தில் டெங்கு அபாயம்

கொழும்பு, ஜூலை
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையக வளாகம் டெங்கு அவதானமிக்க பிரதேசமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியில் தலைமையகத்தில் இருக்கும் இருவருக்கு டெங்குக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்சித் தலைமையகத்தில் முன்னெடுக்கப்பட்டுவந்த கட்டட நிர்மாணப் பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து சிவப்பு எச்சரிக்கையை விடுத்துள்ள கொழும்புப் பிரதேச சுகாதாரப் பரிசோதகர்கள், எதிர்காலத்தில் வழக்குத் தொடுக்கும் நிலைமையைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் அறிவுறுத்தியுள்ளனர். (தய)

# தேர்தல் சட்டங்களை நிறைவேற்றுவது கட்சித் தலைவர்களின் பொறுப்பு

## கூறுகிறார் அமைச்சர் பைசர் முஸ்தபா

கொழும்பு, ஜூலை07
தேர்தல் சட்டங்களை நிறைவேற்றிக் கொள்ளவேண்டியது கட்சித் தலைவர்களின் பொறுப்பாகும் என உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாணசபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.



உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதற்குத் தேவையான சட்டங்களை இயற்றும் பொறுப்பு கட்சித் தலைவர்களையே சாரும் என அவர் எனச் சுட்டிக்காட்டியுள்ள அவர், இது தொடர்பான சட்ட வரைவு ஏற்கனவே நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டார். கட்சித் தலைவர்களின் ஒப்புதலுடன் இந்தச்சட்டத்தை நிறைவேற்ற அவைத் தலைவர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென வலியுறுத்தியுள்ள அவர், சட்டத்தை நிறைவேற்றினால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தக்கூடிய திகதிகளை அறிவிக்க முடியும் எனவும் கூறினார். (த-ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணியம்மன் தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 2017

## அருளாசிச் செய்தி



நயினை நாகபூஷணிக்கு இன்று தேர்த் திருவிழா. சரித்திரப் பிரசித்திபெற்ற இந்த நயினாதீவு திருத்தலம் ஒரு புதுமைமிக்க சிறப்பான திவ்யதிருத்தலமாகும். மேலும் இந்த நயினையம்பதி ஆலயம் ஒரு புனிதம்மிக்க புண்ணிய ஸ்தலமாகும்.

இந்த அருள்மிகு நாகபூஷணி அம்பிகையானவள் நயினையம்பதியிலே எழுந்தருளி வீற்றி ருந்து வணங்குவார்க்கு அருளைச் செய்யும் பாங்கே தனி. வாழ்த்த வாயும் நினைக்க நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவியாகிய அம்பிகை எமது அகந்தையை அழித்து நல் வாழ்வு தர இன்று தேரிலே ஏறி நேரிலே வருகின்ற அழகு பக்திபூர்வமானது.

அப்பேர்ப்பட்ட அம்பிகையை வணங்குதற்காக நயினையிலே அடியார் கூட்டம் அலைமோதுகின்ற அருட்காட்சி சொல்லில் அடங்காது. அழகே உருவான அம்பிகை இன்று நயினையிலே தேரேறி வருகின்றாள். ஆகவே, இன்றைய தேர்த் திருவிழா சிறப்புற நிகழ அருளாசிகள் நல்கி, உளமாரப் பிரார்த்தித்து அகமிக மகிழ்கின்றேன்.

அழகு திகழ இந்த நயினையம்பதியிலே வீற்றிருக்கும் அன்னையின் தேர்த்திருவிழா ஒரு சிறந்த பெருவிழாவாகும். அந்த வகையில் நயினை நாகபூஷணியின் தேர்த்திருவிழா இனிதே நிறைவெய்த அருளாசி நல்கி வாழ்த்துகின்றேன்.

" என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஆதீன குரு முதல்வர்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.



## புவனத்தைக்காக்க புவனேஸ்வரி பீடத்தில் தேரேறுகின்றாள் நயினை நாகபூசணி

உலகமெல்லாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம்வல்ல ஆதிபராசக்தி புவனேஸ்வரி பீடத்தில் நாகபூசணி என்ற திருநாமத்தோடு அருள் பாலிக்கின்றாள். நாயகியாக, நான்முகியாக, நாராயணியாக விளங்கும் அம்பாள் அழகிய திருத்தேரில் ஆரோகணித்து சங்காரத் தொழிலை நிறைவேற்ற இலட்சோபலட்சம் மக்கள் சகிதம் எழுந்தருளுகின்றாள். அழகுத் திருக்கோலத்துடன் அருளாட்சி புரிகின்ற அம்பாள் அருள்மழை பொழிகின்றாள். அரோகரா என்ற பக்திப்பரவச ஒலி வானைப்பிளக்க நேர்த்திக்கடன் நிறைவேற்றும் அடியார் திருக்கூட்டத்துடன் அன்னையின் மகத்துவமான தேர்த்திருவிழா இந்திர விழாவாக அமைந்து விடுகின்றது. எல்லோரும் நல்லவண்ணம் வாழ நாகபூசணியை வழிபடுவோம் வாரீர்.

**காரை.எம்.பி.அருளானந்தன்**
பணிப்பாளர் சைவத்தமிழ்
பண்பாட்டுக்கழகம்

# ஆன்மிகத்தில் பிள்ளைகளை ஆழ்ந்தெழச் செய்வோம்

ஆன்மிகம் என்பது இறைவனிடம் எமது உறவை ஏற்படுத்தி, அதைப் பலப்படுத்தி இறை அருளை சுவைப்பதாகும். அதாவது இறைவனிடம் ஆன்மாவை லயிக்கச் செய்யும் மார்க்கமாகும். இறைவனுக்கும் மனிதனுக்குமிடையிலுள்ள இறைமனுத் தொடர்பினால் வாழ்வின் பெரிதான அர்த்தங்களை புரிந்துகொள்வதாகும். ஒரு சமூக அமைப்பில் ஒரு அங்கத்தவராக விளங்கும் பிள்ளையின் இருப்பு நிலைக்கும் இயங்கு நிலைக்கும், வளர்ச்சிக்கும் ஒரு குடும்ப அலகின் சூழலே இன்றியமையாததாகும். இந்த குடும்ப அலகு எந்தளவுக்குப் பலமாக ஆன்மிக விடயங்களிலும் ஏனைய வாழ்வுக்கான அடிப்படைக் காரியங்களிலும் செயற்படுகின்றதோ அந்தளவுக்கு ஒவ்வொரு பிள்ளையினதும் எண்ணங்கள், நம்பிக்கைகள் சார்ந்த உணர்வுகள் ஆழமாக வேரூன்றி செழிப்படைகின்றது. அதாவது அன்பு, இறையருள், கல்வி, நம்பிக்கை, தன்னம்பிக்கை, சந்தோஷம், மனமகிழ்ச்சி, மனஅமைதி, பற்றுறுதி, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, சிறந்த தொடர்பாடல், பௌதீக சூழலை மதிக்கும் மனப்பக்குவம், மனித நேயத்தை மதித்தல் போன்றவற்றின் மலர்ச்சியின் பின்னணியில் ஆன்மிக இறைஞானம் வலிமை பெறுகின்றது.

எமது பிள்ளைகளை நாம் ஆன்மிகக் காரியங்களில் ஈடுபடுத்தும்போது அவர்களது உள்ளமதில் ஆழ்ந்த அமைதியும், ஆறுதலும், தன்னம்பிக்கை உணர்வுகளையும், ஒழுக்க நெறிகளையும் கட்டியெழுப்ப முடியும். அக உணர்வுகளை ஒருநிலைப்படுத்தி இறைவழிபாடு செய்யும்போது வாழ்க்கையின் பெரிதான அர்த்தங்களை உணர்ந்து கொள்ளும் வல்லமையைக் கட்டியெழுப்புவதோடு தன்னைத்தானே சுயமதிப்பீடு செய்யும் இறைஞானம் வெளிப்படுத்தப்படுகின்றது.

இன்றைய அவசரமானதும் ஆடம்பரமானதுமான உலகப் போக்குகளில் ஆன்மிக ஆணி வேர்கள் அறுக்கப்பட்டு வருகின்றதைக் காண்கின்றோம். ஆன்மிக அர்த்தங்களை இன்று ஏற்றுக்கொள்ள மறுக்கின்றோம். இவ்வாறான எண்ணப்பாங்குகள் சமூகத்தை பேராபத்துக்களில் ஈடுபடுத்திச் செல்கின்றது. இவ்விளிம்பிலிருந்து பிள்ளைச் செல்வங்களைக் காப்பாற்றுவது எமது பொறுப்பும் அவசியமுமாகின்றது. இதற்காக பெற்றோர் சமூகம் தம்மைத் தாமே இழக்க வேண்டும். அதாவது தாம் முன்மாதிரியாக ஆன்மிகப் பாதையில் ஈடுபட முன்வர வேண்டும். ஆன்மிகம் சார்ந்த விடயங்களில் அறிவு சார்ந்த விழுமியங்களைக் கற்றுக் கொள்வதையும், கற்றுக் கொடுப்பதையும் இலக்காகக் கொண்டு செயற்பட வேண்டும். இக்காரியங்களில் பெற்றோர்களாகிய நாம் தவறுகின்றோம்.

பெற்றோர்களாகிய நாம் இன்று இறைவனுக்கும், இறைவழிநடத்துதலுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதை விட பணம், பதவி, தொழில், சினிமா, பிரத்தியேகக் கல்விமுறை போன்ற உலகாயுத காரியங்களுக்கு ஈர்க்கப்பட்டு வருகின்றோம். இதன் காரணமாக எமது பிள்ளைகளை இறை ஞான ஆன்மிக வழிகளில் நடத்தவும் ஆலோசனைகளை வழங்கவும் தவறுகின்றோம். எனவே பிள்ளைகள் எமது அரவணைப்பிலிருந்து விலகி செயற்படும் ஒரு சூழல் உருவாக்கப்படுகின்றமையை இனம் காண முடிகின்றது.

எனவே பெற்றோர் சமூகம், சமயம் சார்ந்த நிறுவனங்கள், ஆலோசனைகளும் வழி காட்டல்களும் வழங்கும் நிறுவனங்களும் கல்விச் சமூகங்களும், பொதுச் சேவை அமைப்புக்களும் இணைந்து ஆன்மிக விழிப்புணர்வுகளையும் ஆலோசனைகளையும் பிள்ளைகளது எதிர்கால இலக்குகளையும் உளவியல் சார்ந்த எண்ணப்பாங்குகளையும் கருத்திற் கொண்டு ஒவ்வொரு பிள்ளைகளினதும் எதிர்கால வாழ்வு வளம் பெற எமது ஒத்தாசைகளை வழங்க வேண்டும்.

எமது பிள்ளைச் சமூகத்திற்கு இன்று ஆன்மிக இறைஞான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் கிடைப்பதில்லை. காரணம் கல்விச்சுமைகள், ஆடம்பர வாழ்வியல் சார்ந்த விடயங்கள், சினிமா உணர்வுகள், தகாத இணையத்தளப் பாவனைகள், கையடக்கத் தொலைபேசியின் அதிகநேரப் பாவனைகள், தொழில்நுட்ப வசதி வாய்ப்புக்கள், தகாத முறையில் பணக் கையாளுகை போன்ற உலகக் காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் காரணமாக பிள்ளைகளது எதிர்கால வாழ்வு சீராக கட்டமைக்கப்படுவதில்லை. இதனால் பாரிய சவால்களுக்கு முகம் கொடுக்கும் ஒரு நிலை உருவாகி வருகின்றமையை இனம் காண் முடிகின்றது.

எமது சமூகப்பண்பாட்டுக் கட்டமைப்பில் நிகழ்த்தப்படுகின்ற சமய நிகழ்வுகள், விழாக்கள், பக்தி விருத்தியை உருவாக்கும் நோன்புகள், ஏனைய சமயம் சார்ந்த விடயங்களில் எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றோம் என்பதை சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

இன்று பல உலக நாடுகளில் சமயம் சார்ந்த பாடங்கள் அவர்களது கல்விக் கலைத் திட்டத்தில் உள்வாங்கப்படுவதில்லை. ஏனெனில் சமயம் சார்ந்த உணர்வுகளும், நம்பிக்கைகளும் ஒவ்வொரு மனிதப்பண்பாட்டு விழுமியங்களினூடாகவே கட்டியெழுப்பப்பட வேண்டும் எனும் அவசியத்தை உணர்த்தி நிற்கின்றன. இறை ஞான அறவழிகளைக் கலைத் திட்டத்தினூடாகக் கற்று அதனை எமது வாழ்வின் அர்த்தங்களை அறிந்து கொள்ள முனைவது சாத்தியமற்றதாகும். எனவே அது தொன்று தொட்டு வந்த விழுமியங்களினூடாக பயிற்சியளிக்கப்படுதல் அவசியமானது. அது அனுபவத்தினூடாகக் கட்டியெழுப்பப்படல் வேண்டும்.

யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் தமிழர் பண்பாட்டடிப்படையின் ஓர் சமூக அங்கமாக இருந்து வந்த கூட்டுக் குடும்ப வாழ்வு முறை இன்று அருகி மறைந்து விடுமளவிற்கு எமது பண்பாட்டு அசைவுகளில் மாற்றங்கள் நிகழ்கின்றன. கூட்டுக் குடும்ப அலகுகளில் வயது முதிர்ந்தவர்களின் வழிநடத்தல், விழுமியக் காப்பு முறைகள், ஆலோசனைகள், அரவணைப்புக்கள், அன்பு, பாசம், அறவழிகளில் அக்கறை, இயற்கை வளங்களில் அக்கறை, ஆன்மிக வழிநடத்தல், விழுமியங்களை யதார்த்தத்துடன் நடைமுறைப்படுத்தல், விருந்தோம்பல், உதவிகளும் ஒத்தாசைகளும் புரியும் மனப்பாங்கு, பெற்றோரையும் பெரியோரையும் மதித்தல், கூட்டுமுயற்சிகள் போன்ற அம்சங்கள் பிள்ளைகளது எதிர்கால நல்வாழ்வுக்கு அத்திபாரமாகத் திகழ்ந்த காலம் மறைந்து தற்போது சிக்கலானதும், சவால் நிறைந்ததுமான இறை ஞானமற்ற ஒரு இருள் நிறைந்த சமூகச் சூழல் உருப்பெற்று வளர்ந்து வருகின்றமையை கண்களூடாகக் காண்கின்றோம்.

இன்று முதியோர் உறவுகள் குடும்ப அலகிலும், சமூகத்திலும் பெரும் சுமையாக எண்ணுமளவுக்கு சமூகத்தில் மாற்றம் நிகழ்கின்றது. முதியோர் விடுதிகள் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதில் சுதந்திரமற்ற வாழ்வில் இணைந்து வாடுகின்ற நிலை இன்று பெருகி வருகின்றது. இந்தக் கலாசாரம் மேல்நாட்டவர்களுக்கு உரியதாகும். இன்று முதியோர்கள் வெளிநாட்டு பணவருகையை இலக்காகக் கொண்டு பராமரிக்கப்படுகின்றனர். இவ்வாறான தொரு முதிர்ந்த சொத்துக்கள் பல குடும்ப அலகுகளில் கண்ணீருடன் நிறைந்த வாழ்வை அனுபவிப்பதை இயல்பாகக் காணமுடிகின்றது.

எமது முதுமை சொத்துக்களை இழந்து, நாம் கூலிக்காக வீட்டு வேலைகளில் அமர்த்தப்பட்ட, பராமரிப்பாளர்களினால் எமது பிள்ளைகளை பராமரிக்க, வீட்டுச் சூழலை உருவாக்குகின்றோம். இதனால் பிள்ளைகள் தன்னியலாக முடிவெடுத்தல், ஆபாச நடத்தைகள், துஷ்பிரயோகங்கள், களவு, பொய், பெற்றோரில் அன்பின்மை, ஒழுங்கற்ற இடைத்தொடர்பு, கீழ்ப்படிவற்ற நிலை, கல்வியிலும் ஆன்மிகக் காரியங்களிலும்

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணியம்மன் தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 2017

# ஆன்மிகத்தில் பிள்ளைகளை ஆழ்ந்தெழச் செய்வோம்


கரிசனையற்ற நிலை, தவறான பணக்கை யாளுகை, மது, மாது, போதைப் பொருளுக்கு அடிமையாகுதல், போன்ற சமூகப் பிறழ்வு களில் ஈடுபடவும், உருவாகவும் அதிக வாய்ப் புக்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.


கல்விக்காகவும், உலகப்பிரகாரமான காரி யங்களுக்கும் அதிக அக்கறையும், முக்கி யத் துவமும் கொடுத்து வருகின்றோம். ஆன்மிக நடவடிக்கைகளில் எமது பிள்ளை களை ஈடுப டுத்த தவறுகின்றோம்.

கல்வி நடவடிக்கைகளுக்காக கரிசனையு டன் செயற்படுவது போலவே எமது பிள்ளைகளை ஆன்மிகத்தில் அக்கறையுடன் செயற்படுத்து வது முதன்மையான காரியமாகும். அதாவது குடும்பமாக இறைவனைத் தொழு தல், குடும் பமாக இணைந்து உணவு அருந்துதல், சமய நிகழ்வுகளில் ஆன்மிக உணர்வுகளுடன் ஈடுபடச் செய்தல், ஒழுக்க நெறிகளைக் கடைப் பிடித்தல், பண்டிகை, விழாக்களின் பிரமா ணிக்கத் தன்மையை உணர்த்துதல், அன்பு உணர்வுகளைக் கடடியெழுப்புதல், மன்னிக் கும் மன உணர்வுகளை உருவாக்குதல், பொதுச் சேவைகளில் ஈடுபட வாய்ப்புக்களை வழங்குதல், ஆன்மிகத்தின் பின்னணியில் கல்விக்கு முக்கியத்துவமளித்தல், நல்ல சகபா டிகளைச் சம் பாதிப்பதற்கு சூழலை உருவாக் குதல், இயற்கையை கரிசனையுடன் பராம ரிக்கும் மன உணர்வுகளை ஆன்மிக அடிப்ப டையில் கட்டியெழுப்புதல், ஏனையோரை மதிக்கும் மனப்பான்மையை எமது தனித்துவ விழுமியங்களினூடாக உணர்த்துதல், கீழ்ப் படிதல் போன்ற சுயமதிப்பீட்டு உணர்வுக ளைக் கற்றுச் செயற்படக் கூடிய ஒரு சூழலை பெற்றோர்களாகிய நாம் எமது ஒவ்வொரு தனிக்குடும்ப அலகுகளிலும் உருவாக்குவது மிக அவசியமானதாகும்.

எனவே ஒரு சமூகத்தில், பிள்ளைச் சமூகம் சமநிலையான ஆளுமையுடன் வரும் சவால் களுக்கு முகம் கொடுக்க, ஆன்மிகப்பலம் இன்றியமையாததாகும். எமது பிள்ளைச் சமூகத்தை ஆன்மிகத்தில் ஆழ்ந்தெழச் செய் வது எமது ஒவ்வொருவரினதும் பொறுப்பாக உணரப்படுகின்றது.

கட்டுரையாளர்
**சாமுவேல் டேவிட்ராஜ்**
வரலாற்றுத்துறை ஆசிரியர்
யாழ்ப்பாணக் கல்லூரி.

யாழ் காலணியகம்
YARL TRADES CENTRE

Yarl Bata
யாழ் பாட்டா
Agents for : Bata
சிறுவர்கள் முதல் பெரியவர் வரை அனைத்து விதமான பாதணிகளையும் பெற்றுக் கொள்ளலாம்.
021 222 3152
இல.11, நவீன சந்தை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

நியூட்டன் எலக்ரிக்கல்
NEWTONE ELECTRICAL

வீட்டு வயரிங் செய்வதற்கு தேவையான மின்சார பொருள்கள், பைப்புக்கள், மோட்டார் என்பன சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
169, Sir Pon Ramanathan Rd,
Thirunelveli South, Jaffna.
Phone : 021 222 2037,
Cell : 077 061 0280.

கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், வவுனியா, மற்றும் முல்லைத்தீவு IELTS Exam Centre
கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற
Now prepare for your
IELTS
Do the exam at British College
Next exam date in Jaffna. 29 July 2017
idp www.idp.com/srilanka
திருமணம் முடித்து பிரித்தானியாவுக்கு SPOUSE விசாவில் செல்லவுள்ளவர்களுக்கு
IELTS Life Skills A1 B1
Audio, Video மற்றும் Multi Media பயன்பாட்டுடனான...
சர்வதேச மொழிக் கற்கை நெறிகள்
நெதர்லாந்து மொழிப் பாடநெறி DUTCH
நெதர்லாந்து மொழிப் பாடநெறியை Dutch பட்டதாரி ஆசிரியையிடம் கற்று ஒரே தடவையில் 3 பரீட்சையினையும் சித்தியடைவதற்கு..
ஜெர்மன், சுவிஸ் மொழிப் பாடநெறி Deutsch
Grammar, Vocabulary விருத்தியுடனான Speaking, Listening, Reading, Writing ஆகியவற்றில் மேலதிக பயிற்சியளிக்கப்பட்டு பரீட்சைக்கு ஒழுங்கு செய்யப்படும்
பிரான்ஸ் மொழிப் பாடநெறி FRENCH
சிறந்த விரிவுரையாளாரைக் கொண்டு பாடநெறி நடாத்தப் படுவதுடன் பாடநெறி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
Diploma in Spoken English
முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளிவரை தினமும் 4 மணித்தியாலங்கள் நடைபெறுவதுடன் பகுதிநேரப் பாடநெறிகள் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறுகின்றது.
BRITISH COLLEGE OF EDUCATION
HOT LINE : 0777-596148
23, Kachcheri nallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd. Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
IELTS பரீட்சை நிலையம்
Peradeniya Rd. Kandy
13, 1st chepal Rd. Colombo-06.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணியம்மன் தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 2017
























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணியம்மன் தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 2017






சிரத்தை அழகுபடுத்துவதற்குச் சிறப்புற்ற நவமணிகளைக் கொண்டு கிரீடங்களையாக்கி அணிவர். கிரீடமின்றேற் சிறப்பில்லையல்லவா? இலங்கையின் கிரீடமெனப் போற்றப் படுபவை சப்த தீவுகளே.

சப்த தீவுகளிலும் தனிப்பெரும் சரித்திரப் புகழ் பெற்ற நயினாதீவு யாழ்ப்பாணத்திலிருந்து தென்மேற்கே அமைந்திருக்கின்றது. நயினாதீவுக்கு முற்காலத்தே பல பெயர்கள் வழங்கப்பட்டனவென்று கருதப்படுகிறது.

நாகதீவு, நாகத்தீவு, நாகதிவயன, நாக நயினாதீவு, நயினார்தீவு, நாக தீபம், நாகதீப, மணிபல்லவம், மணிபல்லவத்தீவு, நாகேஸ்வரம் ஹார்லெம், சம்புத்தீவு, நரித்தீவு, நாகேச்சரம் முதலிய பல பெயர்கள் உள்ளன. இவ்வாறு பழமையும் புகழும் பெற்ற தேசத்தின் நாயகியான நயினை நாகபூசணி அம்மன் பல்லாயிரம் தொண்டர்களின் ஏக்கங்கள், எதிர்பார்ப்புக்கள், அரோகரா முழக்கங்கள் மத்தியின் இன்று அருள் பாலிக்கிறாள்.

COMPUTER CORNER

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்
அருளாசி அனைவருக்கும்
கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்

மாபெரும் விலைச் சலுகை

System 1
Intel core i3 3.9 GHz 7th
Mother Board Asus H110M.C
4 GB DDR 4 RAM
500 GB HDD
DVD Writer ASUS
Casing
19" LED View Sonic
Keyboard
Mouse
UPS DCP
CC
60999/=

System 2
Intel Duo core 3.3 GHz 7th
Mother Board Asus H110M.C
4 GB DDR 4 RAM
500 GB HDD
DVD Writer ASUS
Casing
19" LED View Sonic
Keyboard
Mouse
UPS DCP
CC
49999/=

System 3
Intel core 2 Duo i3 3.7 GHz
Mother Board Asus
2 GB DDR 4 RAM
250 GB HDD
DVD Writer HP
Casing
17" MONITOR
Keyboard
Mouse
CC
17999/=

Laptop 1
Intel core i3 6th GHz
4 GB DDR 4 RAM
500 GB HDD
DVD Writer Optical
15.6" LED Display
W LAN/ BT
CC
55000/=

Laptop 2
Intel core i3 7th GHz
4 GB DDR 4 RAM
1000 GB HDD
DVD Writer Optical
15.6" LED Display
W LAN/ BT
CC
66500/=

Free
For System
Speaker
Head Phone
Card Reader
Mouse Pad

Free
For Laptop
Laptop Cooler
Head Phone
Card Reader
Mouse
Laptop Bag

பாதுகாப்பு கமரா சேவையினையும்
எம்மிடம் பெற்று கொள்ள முடியும்

உங்களது கணனி பிரச்சனைகளை உங்களது இல்லங்களை நாடி வந்து சரிசெய்ய தயாராக உள்ளோம்

K.K.S Road,
Mallakam Junction
021 205 9044
021 561 8547

Kasthuriyar Road,
Jaffna.
021 222 1323
077 353 7126

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணியம்மன் தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 2017




வாடிக்கையாளர் அனைவருக்கும் நயினை
அன்னையின் அருளாசி கிடைக்கப்
பிரார்த்திக்கின்றோம்.

யாழ் நகரில் முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்டு
புதுப் பொலிவுடன்

அழகிய நவீன சிங்கப்பூர் நகைகளுக்கு

சிங்கப்பூர்
ஜுவல்லறி

மங்கையரின் அழகுக்கு அழகூட்டும்
தரமான நகைகளுக்கு இன்றே நாடுங்கள்



Singapoore
Jewellery

No.28, Kasthuriar Road,
Jaffna.

இல.28, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021 4590 260 / 021 222 3327




விசேட விலைக்கழிவு !!!

Discount
5,000/= to
50,000/=

Valid Until
31.08.2017


நீர் சுத்திகரிப்புத்துறையில் முன்னோடியான வரையறுக்கப்பட்ட **Everpure Hi – Tec (Pvt) Ltd.** நிறுவனம் மத்திய சுற்றாடல் அதிகாரசபை **(CEA)** யால் அங்கீகரிக்கப்பட்டு யாழ் மண்ணை தளமாக கொண்டு இயங்கி வரும் ஒரே நிறுவனமாகும்.
நீர் சுத்திகரிப்புடன் தொடர்புடைய அனைத்து சேவைகளுக்கும் அதிசிறந்த தீர்வினை குறைந்த விலையில் பெற்றுத்தருவதுடன் 100% திருப்திகரமான விற்பனைக்கு பிந்திய சேவையை வழங்குவதே எங்களின் வெற்றியின் இரகசியம்.

**சுத்தமான குடிநீருக்கான எல்லா அளவிலுமான RO நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்**




உங்கள் கிணற்று நீரில் அடங்கியுள்ள கல்சியம் , மக்னீசியம் , மாசுக்கள் , கிருமிகளை முற்றாக அழித்து பருகுவதற்கேற்ப சுத்தமான நீரை வீட்டிலேயே பெற்றுக் கொள்ளலாம்.

**Water Softener System**



Tiles , Bathroom Fittings , Washing Machine களில் படியும் கல்சியம் , மக்னீசியப் படிவுகளிலிருந்து நிரந்தர விடுதலை!

**Swimming Pool**



உங்கள் தேவைக்கேற்ற வகையில் வடிவமைத்து , நிறுவி , பராமரித்துத் தரப்படும்.

**Waste Water Treatment**



வீடு , தொழிற்சாலை , உல்லாச விடுதிகளின் கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமையை நிறுவியும் பராமரித்தும் தரப்படும்.

குறிப்பு :- பெரிய வேலைத்திட்டங்களுக்கு மிகக் குறைந்த வட்டியுடனான வங்கிக் கடன் சலுகைகள் பெற்றுக்கொள்ளலாம்!

WE ACCEPT MasterCard VISA

Everpure Hi-Tec (Pvt) Ltd.
No.341, K.K.S Road, Jaffna.
021 222 6888, 021 567 7567, 077 362 6230



அன்னையின் தேரோடும் வைரவிழாவில் அனைவருக்கும் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்





VMK JEWELLERY

நியூ
வீ.எம்.கே ஜுவல்லர்ஸ்

மக்கள் மனங்கவர் தங்க நகைகளை என்றும்
தரமாகவும், குறித்த தவணையில் வழங்கி வருகின்றோம்




80/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 720 1117 / 021 222 2515

கண்டி வீதி, சாவகச்சேரி
021 227 1616 / 077 7849 369


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணியம்மன் தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 2017

நாகபூசணி அம்மன் அருள் அனைவருக்கும்
கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்

## செல்வி நகைஅகம்



தங்கப்பவுண் நகை வியாபாரம்

Chelvi Nakai Agam

Manufacturers of Gold Jewels

22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்துகொடுக்கப்படும்.

1/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

1/3, Kasthuriar Road,
Jaffna.

T.P: 021 222 9441

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## ஸ்ரீ காளிகா சிற்பாலயம்



ஆலயங்களுக்குரிய சிற்பத் தேர்,
மஞ்சம், கைலாய வாகனம்,
ஆலய சிற்பங்கள், சிற்பமாதிரி
சாஸ்திர முறைப்படி செய்து
கொடுக்கப்படும்.



செல்லையா பாலச்சந்திரன்
பூநாறி மரத்தடி, K.K.S. Road, யாழ்ப்பாணம்.

அம்மன் அருள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்

கண் வைத்திய நிபுணர்களால் சிபாரிசு செய்யும் கண்ணாடிகளை
சரிவர பெற்றுக் கொள்ளவும், நவீன ரக *Frame* களையும்,
தரமான *Lenses* களையும் பெற்றுக்கொள்ள அன்றும் இன்றும் என்றும்
கண்ணாடிகளுக்கு பெயர்பெற்ற ஒரே ஸ்தாபனம்



## எரிக்கணேஸ்
பல், மூக்குக் கண்ணாடியகம்



கிளைகள்:
இல. 105, கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.
இல.91, கே.கே.எஸ். வீதி,
கொக்குவில்.

இல.566,564,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## றமணன் டிசைனிங்

றமணன் பியூட்டி பார்லர்
றமணன் பான்சி
றமணன் பந்தல் சேவை





அனைத்து விதமான
அலங்கரிப்பு வேலைகள்
சிறந்த முறையில்
செய்து கொள்ளலாம்.

திருமணத்துக்குரிய சகல விதமான பொருள்களும்
ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ளலாம்.

கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி மத்தி, அளவெட்டி.
T.P:- 077 4911 974, 021 221 5666, 070 277 2990 Mail :- uramanandesign@gmail.com

## சிறிநதியா நகை மாளிகை

36 வருடங்களுக்கு மேல் நம்பிக்கைமிக்க கைராசியான நிறுவனம்

வாடிக்கையாளர்களின்
நலன்கருதி 2012 ஆம் ஆண்டிலிருந்து
**கரட்மெசினை** அறிமுகப்படுத்தி
**தரச்சான்றிதழ்** வழங்கி வருகின்றோம்

சிறிநதியா நகைமாளிகை
இல.01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2709

சிறிநதியா நகைமாளிகை
இல.56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 6744

சிறிநதியா ஸ்ரூடியோ
No. 108A, Luxzan Plaza Building, Navalar Road, Jaffna
sreenathiyastudio@gmail.com
021 222 84 12
sreenathiya

## NSR & நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபம்
Wedding Hall

NSR திருமண மண்டபம்
No.01, Stanley Road Junction, Jaffna - Tel: 021 222 4452

கிளை : நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபம்
No.465/26, Point Pedro Road, Nallur, Jaffna. - Tel: 021 320 5694 / 021 222 1662

## சிறி குமரன் ரெக்ஸ்



அசத்தலான ஆடித்தள்ளுபடி

சிறிகுமரன் ரெக்ஸ்சின் மாபெரும் ஆடித்தள்ளுபடி தட்டாதெருச் சந்தியில்...

நாளை (03.07.2017)
திங்கட்கிழமை தொடக்கம்

இந்தியாவிலிருந்து நேரடியாக
இறக்குமதி செய்யப்பட்ட அனைத்துரக ஆடைகளும்
விசேட தள்ளுபடி விலையில்...

விசேடமாக Office ware சாறிகள்
மிகக்குறைந்த விலைகளில்



ஆடித்தள்ளுபடியில்
ஓர் ஜாலியான ஷொப்பிங்

சிறி குமரன் ரெக்ஸ்
770.K.K.S. றோட், தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம். Tel: 021 221 6845

உ
நயினை அம்பாள் துணை
நயினை தாயை போற்றிடுவோம் நலம்பெற்று வாழ்ந்திடுவோம்

## தர்சினி அமுதம்



எங்களிடம் சகலவிதமான
அபிஷேகப் பொருள்கள்,
அபரகிரியைக்கான பொருள்கள்,
வெற்றிலை, (முழு) பாக்கு,
பாக்குச் சீவல், புகையிலை, சுருட்டு
முதலியன மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.

உரிமையாளர்: சி.சிவகுமார்.

இல.89,90 மேற்கு மார்க்கட், யாழ்ப்பாணம்.
021 222 5733, 077 5020 333

போற்றுகின்றோம் நயினைத் தாயை

## பூபாலசிங்கம் புத்தகசாலை

சகலவிதமான பாடசாலை புத்தகங்கள், கொப்பிகள்
மற்றும் சகலவித பாடசாலை உபகரணங்கள்
அனைத்தும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.



இல. 4, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P:021 222 6693

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணியம்மன் தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 2017

அன்னையின் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்

நவீன அழகிய தங்க, வைர நகைகளுக்கு சிறந்த இடம்



## டோனிகா
நகைத் தொழிலகம்

நம்பிக்கை, நாணயம், நயமான சேவை

நகை வியாபாரிகள்

அழகுக்கு அழகு செய்யும் ஆபரணங்களுக்கு சிறந்த இடம்

T.P: 077 888 6191

82, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.

## நல்லூர்க் கந்தன்
திருமண சேவை



எல்லா மதம்,
எல்லா இனம், வெளிநாடு,
உள்நாடு ஆகிய
சகல திருமணங்களும்
எம்மால் செய்து கொடுக்கப்படும்.

இல.303,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வி.ஜெயந்தி,
தொ.பே.077 973,3183,
021 227 1468

அன்னை நாகபூசணி அனைவரையும் காக்க பிரார்த்திக்கின்றோம்

## சித்திவிநாயகர் களஞ்சியம்
Coir Merchant & Commission Agent

கயிறு, கால்மிதி வகைகள்,
தும்புத்தடி பொருள்கள் யாவும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.

66,67, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 4921179

அன்னையின் பாதம் தொழுதிடுவோம்
இன்பமாய் வாழ்ந்திடுவோம்

போட்டோ அல்பத்துறையின் முன்னோடிகள்

## தவம் போட்டோ & கலர் லாப்

போட்டோ அல்பத்துறைக்கென இலங்கையில் முதன் முறையாக அதி நவீன இயந்திரங்களை அறிமுகப்படுத்தி

* கிழியாத, * அழியாத,
* காலத்தால் கலர் மாறாத, * நீர் உட்புகாத,
* பாரம் குறைந்த அல்பம்களை

அதிநவீன வடிவமைப்புடனும் நூறு வருட உத்தரவாதத்துடனும் வழங்கி வருகின்றோம்.

THAVAM PHOTO & ALBUMS

இல.362, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

"தவம் போட்டோ
கலர் லாப்"

மணிபல்லவத் தாயின் தேர்த்திருவிழா சிறக்க
வாழ்த்துகின்றோம்

## கிருபா லேணர்ஸ்
Regd.No.: DS/589

இரவு நேர பயிற்சி நடைபெறுகின்றது

அரச அங்கீகாரம் பெற்ற
A தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை


- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள் நடைபெறும்.
- அரச, தனியார், ஊழியர்கள் சனி, ஞாயிறு உட்பட தாம் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சிகளை மேற்கொள்ள முடியும்.
- எமது கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சிகள் நடைபெறும்.
- மும்மொழிகளிலும் ஆண், பெண் இருபாலாருக்கும் பயிற்சிகள் வழங்கப்படும்.
- தவணை முறையில் கட்டணம் செலுத்தமுடியும்



இல. 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021 222 4353, 021 492 3200, 077 722 5292

| பருத்தித்துறை | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|
| 021 4923201 | 021 492 3202 | 021 300 6550 |
| 071 454 6958 | 021227 0700 | 071 454 6957 |
| சுன்னாகம் | கிளிநொச்சி | விசுவமடு |
| 021 224 2022 | 021 228 5505 | |
| 071 454 6956 | 071 454 6955 | |

## MODERN City Inn
WiFi Available



Adequate Parking
Satalite TV
Beach Tour-Taxi
Internet Facility
Round Tour
Airport Drops/Picks

Comfortable Air Conditioned Rooms
with Attached Toilets and Hot & Cold Water
**Very Moderate Room Charges**
Single or Double Occupancy and Family Apartment
Wedding / Small Group Conferance All Kind of Parties
**10 minutes drive from Air Port.**
**You can contact in all Three language**

426, Main Street, Negombo.
(Opposite Cargills Food City - Behind Glitz)

For inquiries and Reservationes
Contact No:- 031-2233967 / 077 9011900 / 078-4506918
moderncityinn@yahoo.com moderncityinn.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணியம்மன் தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 2017

நயினை அன்னையை போற்றி நலம் பல பெற்றிடுவோம்

## ஸ்ரீதேவி ஜுவலர்ஸ்



## Sri Thevi Jewellers

ஓடர் நகைகள் 22 கரட்டில்
குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

இல. 80/7, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021 720 1787,
077 104 2848

அன்னையை தொழுதிடுவோம், அறத்துடன் வாழ்ந்திடுவோம்

## கன்னிஹா ஜுவல்ஸ்



## KANNIHA JEWELS




இல.99E,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

021 222 4448

அன்னையின் தேரோடும் வைரவிழாவில் அனைவருக்கும்
அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.



## Vayuputhra Phone Shop

## வாயுபுத்ரா போன் சொப்

T.P: 077 36 44 246 / 077 8595 151
No.364, Hospital Road, Jaffna.



அனைத்து
விதமான
போன் விற்பனை
மற்றும் Repairs

## வாயுபுத்ரா புக்கிங் சென்றர்

அதிசொகுசு பயணிகள் போக்குவரத்துச் சேவை

யாழ் → 077 8595 151
கொழும்பு → 077 8591 555

Hotline
077 8591 943



ஆசனப் பதிவகம்
யாழ் ⇄ கொழும்பு
(தினமும்)

சகல விதமான பேருந்துகளுக்கும் ஆசனப் பதிவுகளை
மேற்கொள்ள முடியும்.


ஆசன பதிவுகளுக்கும் மேலதிக தொடர்புகளுக்கும் இல.364, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P: 077 36 44 246 / 077 8595 151

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரிய சந்தர்ப்பம் சலுகைக் கட்டணம்

15.07.2017 ற்கு முன்னர் பதிவு செய்யும் பின்வரும் கற்கை நெறிகளுக்கு சலுகைக் கட்டணம் வழங்கப்படும்

1. **B.Sc Computer Science - 3 years**
   தகைமை- A/ L
2. **Top Up Program in B.Sc Computer Science -1 year**
   தகைமை- 2years Diploma –HND
3. **B.Sc Physical Education in Sports -1 year**
   தகைமை-2 years in Physical Education
4. **M.Ed -2 years**
   தகைமை – B.Ed -PGDE
5. **B.Ed – 2 years**
   தகைமை - 2 year Diploma in Education
6. **BBM - 3 years**
   தகைமை- A/L
7. **Top up program in BBA – 1year**
   தகைமை- HNDA 2 years Diploma
8. **B.Sc Civil Engineering-1year**
   தகைமை- HND In Civil Engineering



மேலதிக விபரங்களுக்கு

NORTH LANKA IIT
SUCCESS MAKES PERFECT

North Lanka IIT
Top Floor,Peoples Bank Building
Stanley Road, Jaffna.
TP-0767504535



# Asian Fabricators

*High quality stainless raillings, Balcony Raillings, GI-raillings (Steel raillings), Steel gate, Textile Racks, Vehicle Items*






உயர்தரத்திலான துருப்பிடிக்காத பிடிமானம். பல்கனி பிடிமானம். GL-பிடிமானம் (இரும்பு பிடிமானம்).
இரும்பு வாயில் (Gate). புடைவை ரேக்குகள்.



**தரமான முறையில், உத்தரவாதத்துடன்**
**குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.**

- Hotline -
**077 110 4796**

**Kandy Road, Nunavil Junction, Chavakacheri T.P: 076 792 1122**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணியம்மன் தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 2017


நயினை தாயின் அருளாசி அனைவருக்கும் கிடைக்கட்டும்

aaa Metal Works




கொடிமரம், கலசங்கள், திருவாசிகள், கிரீடங்கள், அங்கிகள், விளையாட்டு பரிசளிப்பு உபகரணங்கள் மற்றும் கதிர்ப்பாத்திரம், நற்கருணைப் பாத்திரம், நினைவுக்கல், நிறைவுக்கல் என்பன ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்.

No:443, K.K.S.Road, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

நயினை தாயின் அருளாசி அனைவருக்கும் கிடைக்கட்டும்

பொதிகை
புத்தக சாலை



பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு சந்தி.
T.P: 077 990 1283

ஆங்கிலப்பயிற்சிக்கு NO.1 பயிற்சி மையம்

IELTS Life Skills -A1, B1

திருமணம் செய்து நிரந்தர விசாவில் U.K செல்பவர்களுக்கானது

- # UK இல் இருந்து கணினி மூலமான 40 க்கு மேற்பட்ட online listening மாதிரி பரீட்சைகள் DMI இல் மட்டுமே.
- # அனுபவம் வாய்ந்த பரீட்சைக்கு மாணவர்களை தயார்ப்படுத்தும் ஆசிரியர் குழாம்.
- # இதுவரை 2200 க்கும் மேற்பட்டோர் பயின்று UK சென்றுள்ளார்கள்.
- # Visa நடைமுறைகள் தொடர்பான இலவச விளக்கங்கள்.
- # மாதாந்தம் 30 க்கு மேற்பட்ட மாணவர்களை பரீட்சைக்கு அனுப்பும் ஒரே ஒரு நிறுவனம்.

Hotline 0777 17 35 17
Fee 9500/

இணைய முன் இணையத்தளத்தினை பார்வையிடவும் www.itdmi.com/ls அல்லது www.itdmi.com/lifeskill-english

Spoken English கற்கை நெறிக்கு இணைவோருக்கு IELTS Life Skills கற்கைநெறி முற்றிலும் இலவசம். நேரடியாக IELTS Life Skills கற்பவர்களுக்கு 9500/- மட்டுமே.
DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.

IELTS
ACADEMIC MODULE , GENERAL MODULE

We offer:
A practice workbook
A 30 hour online IELTS preparation course
A reference library membership to access IELTS material
Access to the IELTS Top Tips seminar
#Latest course Material #unique Test Tips
#40 hrs with free 4 mock exams

DMI COMPUTER EDUCATION

SPOKEN ENGLISH
ஆங்கிலப்பேச்சுக்கு உத்தரவாதம்
15 வயதிற்கு மேற்பட்ட ஆங்கிலம் பேச விரும்பும் அனைவருக்குமானதாகும்
www.itdmi.com/english

DMI COMPUTER EDUCATION

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, (சுமார் தோரண ஆகாரம) | M.M.V. வீதி, | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் | A9 வீதி, ஆனந்தபுரம் |
| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
| Tel.: 021-222 4403 | Tel.:021-226 2470 | Tel.:021-227 0775 | Tel.:021-224 1970 | Tel.:021-228 5655 |

தேரேறிவரும் நாயகியே தந்திடம்மா உன் அருளை

மிகவும் துல்லியமான கணிப்பீட்டின்
மூலம்தகுந்த மணமக்களை
தெரிவு செய்ய
நாடவேண்டிய தாபனம்



ஸ்ரீ நாகபூஷணிஅம்பாள்
திருமண சேவை

திருநிறைவாளன்
இணைப்பாளர்.
மாதாஜிலிங்கேஸ்வர ஆலயம் அருகில்.
கைதடி கிழக்கு, கைதடி.

T.P: 077 5193493, 077 9184646, 077 6849017

நயினை அன்னையின் அருளாசி அனைவருக்கும் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்



1 l = 66 km

YAMAHA வின் தனித்துவமான ஸ்கூட்டர்



- கிங் ஒஃவ் த ப்பிளிங்
  பாதுகாப்பான பின்விளக்கு
- இன்ஸ்றுமென்ட் கிளஸ்டர்
  கூர்மையான முப்பரிமான வடிவமைப்பு இரவிலும் உங்களை விரும்ப வைக்கும்
- சட்டர் லொக்கிங் சிஸ்ரம்
  பாதுகாப்பான சாவித் தொழில்நுட்பம்
- வைக்கேர்ஸ் ஸ்வாக்
  சுற்றுவட்ட முகப்பு விளக்கு வடிவமைப்பு
- உங்களை பின்தொடரும் வாற்பகுதி வடிவமைப்பு
  காற்றுக்கு அசைந்தாடும் தோற்றத்தை ஒத்த வாற்பகுதி கூடவே வெவ்வேறாக தோற்றமளிக்கும் இரு ஆசனங்கள்
- கறி இட் ஒல் ஸ்ரேறேச்
  உங்களுடைய தேவைக்கேற்ப 21 லீற்றர் கொள்வனவுடைய பொருள்கள் வைக்கும் இடவசதி. மேலதிகமாக முன்பக்க சிறிய இடவசதி.
- ரெலஸ்கோப்பிங் சஸ்பென்சன்
  உங்கள் சவாரிக்கு மேலும் மெருகேற்றும் முன்பகுதி

ஏக விநியோகஸ்தர்கள்:

Digital Electronics
62/16, Stanely Road, Jaffna.
T.P: 077 662 3824 / 021 222 4040

GREEN BEAUTY
FASHION MANTHIR



தையல் வகுப்புக்கள், பேசியல், மேக்கப், கெயார் ஸ்ரைல், கேக் ஐசிங், சமையல் வகுப்புக்கள், சரும ஆயுர்வேத பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

சனி, ஞாயிறு வகுப்புக்கள் மற்றும் வசதிக்கு ஏற்றவாறு கிழமைநாள் வகுப்புக்களும் இடம்பெறும்.

இலவச மற்றும் விசேட கட்டணக்கழிவு வழங்கப்படும்.

இவ்வனைத்துப் பிரச்சினைகளுக்குமான தீர்வு ஒரே இடத்தில் கிடைக்கும்



1. கரும்புள்ளி அகற்றல்
2. முகப்பருவிற்கான சிகிச்சை
3. சத்திரசிகிச்சை தழும்புகள்
4. கருமை நிறத்தினை குறைத்தல்
5. பித்த வெடிப்பு மற்றும் கை, கால், நக வெடிப்புக்கள் மற்றும் தோல் உரித்தல் பிரச்சினைகளுக்கான தீர்வு.
6. முடி கொட்டுதல் பிரச்சினை மற்றும் முடி வெடித்தல் வளராமை பிரச்சினைகளுக்கான தீர்வு.
7. கழுத்து கறுப்பு நீக்குதல்.
8. உடல் எடை கூட்டுதல் மற்றும் குறைத்தல்.
9. செந்நிற முடியை கருமையாக்குதல்
10. கண்புருவ வளர்ச்சிக்கான சிகிச்சை.
11. கருவளையம் நீக்குதல்.
12. உதடு வெடிப்பு மற்றும் கருமை நிற உதட்டுப் பிரச்சினைக்கான தீர்வு.



குறிப்பு:- அனைத்து பிரச்சினைகளுக்குமான தீர்வு இயற்கை மூலிகைகளின் மூலம் சிகிச்சை கொடுக்கப்படும்.

பருத்தித்துறை வீதி,
நல்லூர் (யாழ் மாநகரசபை முன்பாக). யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 5242 852 / 021 5688 645


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணியம்மன் தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 2017


நயினை தாயின் அருளாசி அனைவருக்கும் கிடைக்கட்டும்

**KKJ Workshop & Sales Centre**





**KKJ Workshop & Sales Centre**

Workshop : No11, Five Junction, Jaffna.
Branch : No 364, K.K.S. Road, Jaffna.
T.Phone : 077 9037 203 / 0212217319
E-mail : kkjfurniture@gmail.com

மேற்குறிப்பிட்டுள்ள பொருள்கள் விசேட விலைக் கழிவுடன் விற்பனைசெய்யப்படுகின்றது.
ஓடர்களுக்கு முந்துங்கள்.

நயினை தாயின் அருளாசி அனைவருக்கும் கிடைக்கட்டும்



**அபிராமி**
**சூ சென்ரர்**
**ABIRAMI SHOE CENTRE**



ஆண், பெண், சிறுவர்களுக்கான
கால், பாதணி வகைகளுக்கு
அபிராமி சூ சென்ரர்

155, 156 Model Market. Power House Road, Jaffna. T.P: 021 222 3525

நயினை தாயின் அருளாசி
அனைவருக்கும் கிடைக்கட்டும்

**ASR**
**Wedding Halls**





திருமணங்கள், பதிவுத்திருமணங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள் உட்பட சகலவிதமான வைபவங்களையும் உங்கள் எண்ணம்போல் சிறந்த முறையில் அனைத்து வசதிகளுடனும் சிறப்பாக நடத்திட நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

திருமணப் பதிவுநாள் வெற்றிடங்கள் இருப்பதால் பதிவுகளுக்கு இன்றே முந்திக்கொள்ளுங்கள்

**அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர்**
**கலாசார திருமண மண்டபம்.**

இல.542, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 373 4116, 021 222 1355

Annamalaiyan Sri Ragaventhirar Enterprises (Pvt) Ltd
asrhall@hotmail.com Find us on : Facebook.com/jaffnaasrenterprises

மஹா சக்தியுள்ள
**வசிய மாந்திரிகம்**

எதையும் எதையும் அறியாத மாந்திரிகர்களிடம் ஏமாறாதீர்கள். என்னுடைய வசிய மாந்திரிகத்தினால் நான் அவர்களுக்கு சவால் விடுகிறேன்.

- காதலால் நீங்கள் வேதனைப்படுகிறீர்களா ?
- காதலனால் - காதலியால் கைவிடப்பட்டவரா ?
- பெற்றோர் விருப்பமின்மையா ?
- கணவன் மனைவிக்கிடையில் முரண்பாடா ?
- வேலைத்தளத்தில் பிரச்சினையா ?
- காணி, சொத்து தொடர்பான பிரச்சினையா ?

- இரகசியம் பேணப்படும்.
- நம்பிக்கை - உத்தரவாதம் கடைப்பிடிக்கப்படும்.
- உங்களின் உள்ளங்களில் எழும் பிரச்சினைகளை என்னிடம் தெரிவியுங்கள்.
- ஒரு தாய் ஸ்தானத்தில் இருந்து உதவிகள் செய்வேன்.
- வரமுடியாதவர்களுக்கு பதிவுத் தபால் மூலம் செய்து தரப்படும்.
- உத்தரவு.

அனைத்து வசிய மாந்திரிகங்கள் மூலம் மக்களின் மனம் கவர்ந்த
**சீதா குணவதீ குரு மேனியோ**

மெனிக்ஹின்ன - திகன 0766 282 874, 077 392 9989
என்னைத் தொடர்பு கொண்டவர்களுக்கு ஒரு நாளும் தோல்வியில்லை.
வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு : 0094 766 282 874
076 418 0485

நயினை தாயின் அருளாசி அனைவருக்கும் கிடைக்கட்டும்

Rasi Collections
திருமணப் பட்டுப் புடைவைகளின்
கைராசியான ஸ்தாபனம்

**ராசி கலக்ஷன்ஸ்**
**(ராசி சில்க்ஸ)**



உங்கள் திருமணத்துக்குத் தேவையான
அனைத்துப் பட்டுப் புடைவைகளையும்
ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்

021 222 5571

198, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம்-வண்ணார்பண்ணை

# அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் கோயில்



# தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 08.07.2017

## ஆலய வரலாறு

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை வீரமாகாளி அம்மன் வரலாற்றுச்சிறப்புகளை நோக்குமிடத்து கலிங்கைசிங்கை ஆரியன் (1215 - 1240) யாழ்ப்பாணத்து அரசனாக இருக்கையில் அவனுடைய சிறிய இராசதானியான நல்லூரைப் பாதுகாக்கும் நோக்குடன் வீரமாகாளி அம்பாள் ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது. யாழ்ப்பாண மன்னர்களின் போர்த்தெய்வமாகவும் வீரமாகாளி அம்மன் விளங்கியதால் அக்காலத்தில் இவ்வாலயம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இவர்கள் வீரத்தை வேண்டி நவராத்திரி விழாவின் போது தங்கள் படைக்கலன்களைக் கொலுவின் போது வைத்து வழிபட்டு அம்பாளின் அருட்கடாட்சம் பெற்று வெற்றிகளைக் குவித்து வந்தனர். இதற்கு சான்றாக சில வருடங்களின் முன்னர் சங்கிலிய மன்னன் பயன் படுத்திய பட்டாளத்து வாள் மானம்பூ உற்சவத்தின் போது கன்னி வாழையை வெட்டப்பயன் படுத்தினர். இத்தகைய வரலாற்றுச் சிறப்புகளைக் கொண்ட இவ் ஆலயம் தற்போது பரம்பரை பரம்பரையாக சைவக் குருமார்களால் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகின்றது. இலங்கை யிலே முதன் முதலில் மஹிடாசுர சங்ஹாரம் நடைபெற்ற அம்மன் ஆலயம் என்ற சிறப்பும் இவ்வாலயத்திற்கு உண்டு. வடக்கு வாயில் நோக்கி அமைந்துள்ள வீரமாகாளியம்மன் ஆலயம் ஆனது யாழ் நகரில் இருந்து பருத்தித்துறை வீதியை மையமாக கொண்டு அமைந்துள்ளது. ஆலயத்திற்கு அழகு சேர்க்கும் வகையில் இருமருங்கிலும் அழகிய மணிக் கோபுரங்களும் சப்த தளங்களைக் கொண்ட இராஜகோபுரம் அமைந்து காணப்படு கின்றன. ஆலயத்துக்குள் புகுந்ததும் அடியார்களின் கண்ணைக்கவரும் வண்ணம் கொடித்தம்பம். காட்சியளிக்கின்றது.

ஆதி மூலம் எனும் கர்ப்பக்கிரகத்தினுள் எழுந்தருளியுள்ள விக்கிரகம் கருணாம்பிகை வடிவமுள்ளது. அதாவது அம்மூலவிக்கிரகமானது மகிடாசுவர்த்தினி எனவும் அழைக்கப்படுகின்றாள். தேவ சபையில் எட்டுக்கைகளுடன் காளியம்பாள் சிங்கத்தின் மீது அமர்ந்து காட்சியளிக்கின்றாள். மஹோற்சவ காலத்தின் போது எழுந்தருளி விக்கிரகமாக நான்கு கையுடன் கூடிய வீரமாகாளி தரிசனம் தருகின்றாள். பரிவார மூர்த்திகளாக விநாயகர், நாகதம்பிரான், கஜவல்லி, மகாவல்லி, சமேத சுப்பிரமணியர் , சனீஸ்வரன் , வைரவப்பெருமான் ஆகியோர் காட்சி தருகின்றனர். அம்பாளின் ஆலயத்தில் மிகச்சிறப்பான சித்திர வேலைப்பாடுகளையுடைய வாகனங்கள் பல காட்சியளிக்கின்றன. இவ்வாலய தேரானது வரலாற்றுச்சிறப்புகளளைக் கொணடது. அதாவது யாழ்ப்பாண தமிழ் சிற்பாச்சாரியர்களால் முதன் முதலில் உருவாக்கப்பட்ட தனித்துவச்சிறப்பினைக் கொண்டு விளங்குகின்றது. இவ்வாலயமானது அன்று தொடக்கம் இன்றுவரை சைவக்குருமார் பரம்பரையினால் பரிபாலிக்கப்பட்டும் நித்திய பூசைகள் நடத்தப்பட்டும் வருகின்றன.



### மஹோற்சவ பிரதம குருவின் ஆசிச் செய்தி

அண்ட சராசரங்களின் நாயகியாகவும் வேண்டுவோர்க்கு வேண்டுவன வரமாக அளிக்கும் அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியாகிய வண்ணை வீரமாகாளி அம்மன் சிம்மாசனம் வீற்றிருந்து அருள் புரியும் எங்கள் ஆலயத்தின் இந்த வருட மஹோற்சவத்தின் மஹோற்சவ பிரதம குருவாக இருக்கின்றமை அன்னை அருளாம்பிகையின் அருளென்றே கூற வேண்டும் அன்னையின் அடியார்கள் அனைவரும் அம்பிகை சித்திரத் தேரில் பவனிவருதலை கண்டு களித்து அன்னை அருள் பெற வேண்டுகின்றேன். இந்த ஆலயத்தின் மூத்த குருவானசிவஸ்ரீசெல்வராசாகுருக்களின் நல்லாசியுடன் இத்திருவிழா இனிதே நடைபெற்று நிறைவுற அம்பிகையை வேண்டுகின் றேன்.

" நான் " என்ற மமதையும் " எனது" என்ற அகந்தையும் இல்லாது ஒழிக்கும் சம்ஹார (அழித்தல்) உற்சவமான இரதோற்சவத்தை கண்டுகளிப்பதுடன் நாளைய தீர்த் தோற்சவத்திலும் கலந்து அம்பிகை அருள் பெற வேண்டுகின்றேன் அன்று சங்கிலி மன்னனின் காவல் தெய்வமாக மிளிர்ந்த வீரமாகாளி அம்பாள் எங்களை யெல்லாம் துன்பங்களிலிருந்து காத்தருளி அடியார்கள் யாவரும் தேர்த்திருவிழாவைக் கண்டு களித்து எல்லா நலன்களும் பெற்று நல்வாழ்வு வாழ எல்லாம் வல்ல வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்பாளை வணங்கி ஆசி கூறி அமைகின்றேன்.

**மஹோற்சவ பிரதம குருவும்**
**ஆதீன கர்த்தாவுமாகிய**
**" தேவி சாதகப் பிரியன்" சிவஸ்ரீ நா. சிவதர்ச குருக்கள்.**



### ஆலய பிரதம குருவின் அருளாசிகள்

" கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் " என்ற பழமொழிக்கு ஏற்ப யாழ்ப்பாணத்து அரசன் கலிங்கை சிங்கை சூரியன் நல்லூரை காக்கும் நோக்குடன் ஸ்தாபித்த ஆலயமே எங்கள் வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலயம் ஆகும். எங்களுடைய காவல் தெய்வமாகிய அன்னை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் மகிடாசுர வர்த்தினியாக சிம்மாசனம் அமர்ந்து அருள் புரிந்து வருகின்றாள்.

இந்த ஆண்டு மஹோற்சவத்தில் மஹோற்சவ குருவாகிய சிவஸ்ரீ. நா. சிவதர்சக் குருக்கள் அவர்களுக்கும். ஆதீன கர்த்தாக்களில் ஒருவரான சிவஸ்ரீ. நா. ஹரிதர்சஐயர் அவர்களுக்கும் என் நல்லாசிகளையும் அவர்கள் இளவயதினராக இருந்தாலும். குருத்துவத்தில் சிறந்து விளங்கி இன்றைய இளைய சமுதாயத்துக்கு முன்னுதாரணமாக திகழ வேண்டுமென வாழ்த்துகின்றேன். அன்னை பராசக்தி இரத பவனி வரும் இந்த நன்னாளில் அனைவரும் வணங்கி பயன்பெறுவதுடன் அன்னைக்கென நாளைநடைபெறஇருக்கும்தீர்த்தமண்டபத்தில் தீர்த்தமாடும் காட்சியையும் கண்டுகளித்து அருளாசிகள்பெறஅம்பிகையைபிரார்த்திக்கின்றோம்.

**ஆலயத்தின் மூத்த குருவும்**
**ஆதீன கர்த்தாவுமாகிய**
**சிவஸ்ரீ. செல்வராசா குருக்கள்**
**(காந்தி ஐயா)**



### குருமுதல்வரின் அருள் ஆசிச்செய்தி

உழன்று திரிந்த என்னை உத்த மனாக்கி தனது ஆலய பெருந் திருப்பணிகளை எல்லாம் எனது கையால் செய்து வைக்கின்ற பெரும் பாக்கியத்தை அன்னை எனக்களித்திருக்கின்றார். எம் முன்னோர்கள் உள்ளன்போடு செய்த பூஜைகளின் பயனே அவர்களின் வாரிசான எனக்கு அருள் கிடைக்க வழி சமைத்தது என்றால் மிகையாகாது அவர்கள் கண்ட கனவுகளை எல்லாம் இன்று நினைவாக்கி வைக்கின்றாள் அன்னை வீரமாகாளி. 25 தினங்கள் நடைபெறும் பெருந்திருவிழாவில் அன்னையின் அழகுக் கோலத்தை வர்ணிக்க முடியாது. அதிலும் தேர்த்திருவிழா அலங்காரத்தைக் காண கண் ஆயிரம் வேண்டும். எமது ஆணவத்தை அழித்து எம்மை மனிதனாக வாழ வழி சமைக்கும் தேர்த்திருவிழாவில் கலந்து கொண்டுள்ள அடியார்கள் தொண்டர்கள் புலம்பெயர் அடியார்கள் மற்றும் இவ்வுலகத்தில் வாழ்கின்ற சகல ஜீவ ராசிகளும் இன் புற்று வாழவும் எல்லாம் வல்ல பரம்பொருளாம் அன்னை வீரமாகாளியைப் பணிந்து அருளாசி கூறுகின்றேன். வீரமா காளியைச் சரண்புகுந்தால் வீரசக்தி பெறலாம் இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

**சிவாச்சார்ய இளவரசு, சக்தி கிரிஜா வியாசர், கிரிஜா ஞானபானு,**
**சாமஸ்ரீதேசமான்ய சிவஸ்ரீ சிவ.கமல்ராஜர் குருக்கள்**
**மேற்படி தேவஸ்தான குருமுதல்வரும், ஆதீன கர்த்தாவும்.**



### அருளாசிச் செய்தி

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மனுக்கு இன்று தேர்த்திருவிழா. அருள்மிகு அன்னை அடியார்க்கருள்புரிய இன்று தேரேறி வருகின்றாள். நாட்டில் நிகழும் அநியாயங்களையும் அக்கிரமங்களையும் அழித்தொழிக்கும் நோக்கில் அம்பிகை வீரமாகாளி அழகுரதமேறி அருட்காட்சி தருகின்றாள். நல்லூர் இராசதானியாகப் புகழ்பெற்ற இந்த அருள்மிகு அம்மன் கோயில் இருக்கும் இடம் சரித்திரப் பிரசித்தி பெற்ற கீர்த்திமிக்க திருப்பதியாகும். அலங்கார பூஜிதையாக அம்பிகை ரதமேறி வருகின்ற அற்புதக் கோலாகலத் திருக்காட்சி காண்பதற்குப் பூர்வ ஜென்ம புண்ணியஞ் செய்திருக்கவேண்டும். இன்றைய அம்பிகையின் தேர்த்திருவிழா சிறப்புற நிகழ எல்லாம் வல்ல வீரமாகாளித் தாயின் பொற்கமல திருப்பாதம் பணிந்து உளமாரப் பிரார்த்தித்து அருளாசி நல்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். அம்பிகையின் தேர்விழா சிறக்க ஆசிநல்கி வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் நல்லை**
**திருஞானசம்பந்தர் ஆதீனம்.**

GLOBAL RENT A CAR

Prop : T. Kamal
Office : 021 221 7424
Mobile : 077 071 2317
E.Mail : globalrent25@gmail.com

தேர்த் திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:

அம்பாள் வெதுப்பகம்
AMBAL Bake House

No.252, 254, Pointpedro Road, Aanaippanthi, Jaffna.


YOGI'S
அழகுக் கலையின் தன்னிகரற்ற நிறுவனம்
yogi'sbeauty@gmail.com
www.yogisbeauty.com
75 அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Amman Road, Nallur, Jaffna.
021 222 2796. 0777 164 923

அமுதாம்பிகை மணிமண்டபம்
திருமணம், பூப்புனித நீராட்டு விழா, ஆத்மசாந்திப் பிரார்த்தனை, பிறந்தநாள் வைபவம் போன்ற நிகழ்வுகளுக்கு முற்கூட்டியே மண்டப பதிவினை மேற்கொள்ளலாம்.
பூரண உரிமையாளர்: சிவஸ்ரீ சிவ.கமல்ராஜ் குருக்கள்
021 021 9044
077 350 7275

அம்பாள் மரக்காலை
Ambal Timber Depot

No. 261, Point Pedro Road, Veeramakali Amman Kovilady, Nallur, Jaffna.
T.P : 021 222 0045, 077 711 1147
077 889 4200, 077 007 6555

நியூட்டன் எலக்ரிக்கல்
NEWTONE ELECTRICAL

169, Sir Pon Ramanathan Rd. Thirunelveli South, Jaffna.
Phone : 021 222 2037
Cell : 077 061 0280

ராணி மரக்காலை
85, வீரமாகாளி அம்மன் கோயிலடி. நல்லூர், யாழ்ப்பாணம்.


கிருஷ்ணா நகை மாளிகை
தங்கப்பவுண் நகை வியாபாரம் அசல் 22 கரட் தங்க நகைகள் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
கிளை:
கிருஷ்ணா அடகு கடை.
370, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு இலட்சம் யூரோ மோசடி: இத்தாலியில் இலங்கையர் கைது

கொழும்பு, ஜூலை 8
சுமார் இரண்டு லட்சம் யூரோ மோசடியில் ஈடுபட்ட இலங்கையர் ஒருவர் இத்தாலியில் கைது செய்யப்பட்டுள்ளார் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இத்தாலியின் மிலானோ நகரில் வானூர்திப் பயணச்சீட்டு மற்றும் இலங்கைக்குப் பணம் அனுப்பி வைக்கும் நிறுவனமொன்றை நடத்தி வந்த நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் இலங்கை திரும்பவிருந்த 200 பேரிடம் இவர் இவ்வாறு நிதிமோசடியில் ஈடுபட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாகக் குறித்த நபர்கள் நாடு திரும்புவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது. வானூர்திப் பயணச் சீட்டு பெற்றுத்தருவதாகக் கூறிப் பணத்தைப் பெற்றுக் கொண்டு போலியான பயணச் சீட்டுக்களை அவர் வழங்கியுள்ளார் என மிலான் நகரப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் குறித்த நபரைக் கைதுசெய்துள்ளனர். (த-ய)

## சுகாதார அதிகாரி டெங்கினால் சாவு

ராகம வைத்தியசாலையில்

கொழும்பு, ஜூலை 8
ராகம கொழும்பு வைத்தியசாலையின் தலைமைச் சுகாதார முகாமைத்துவ உதவியாளர் டெங்கு நோயால் உயிரிழந்துள்ளார்.

அனோமா திஸாநாயக்க (வயது-57) என்ற ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார். ராகம வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்றுவந்த இவர் நேற்றுமுன்தினம் அதிகாலை 1.30 மணியளவில் உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

கடந்த 25ஆம் திகதி காய்ச்சலுக்குச் சிகிச்சை பெறுவதற்காக ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். (த-ய)

## நிறைவேற்று அதிகாரமற்ற அரசமைப்பே வேண்டும்

வலியுறுத்துகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூலை 8
நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் ஆட்சிமுறை இல்லாத அரசமைப்புச் சட்டம் ஒன்று அவசியம் எனவும், அதன் மூலம் மக்கள் பிரதிநிதிகளுக்கும், நாடாளுமன்றத்துக்கும் அதிகாரம் கிடைக்கவேண்டும் எனவும் மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் சபை உறுப்பினர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

பொலனறுவை விவசாயச்சங்கங்களின் மாவட்ட மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறைமை இருக்கும் இடத்தில் நாடாளுமன்றத்தினால் எந்தப் பயனுமில்லை. இதனால் கட்டாயம் அரசமைப்புச் சட்டம் மாற்றப்படவேண்டும்.

அதேபோல் எதிர்வரும் 2020ஆம் ஆண்டில் விவசாயிகளின் அரசை அமைக்க தயாராக இருக்கவேண்டும். அப்போது விவசாயியை அரசனாக்கும் ஆட்சி உருவாகும்.

சுதந்திரத்தின் பின்னர் ஆட்சிக்கு வந்த சகல அரசுகளும், அரசியல் கட்சிகளும் விவசாய மக்களை ஓரிடத்தில் கைவிட்டன. விவசாயத்தின் பயனைச் செல்வந்தர்களுக்குத் தேவையான வகையில் நிர்வகிக்கச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தவே அவ்வாறு செய்தனர் - என்றார். (த-ய)

## ஐ.தே.க. எம்.பிக்கள் வெளிநாடு செல்ல ரணில் கட்டுப்பாடு



கொழும்பு, ஜூலை 8
வரவு செலவுத் திட்டம் முடியும் வரை வெளிநாட்டுப் பயணங்களைக் குறைத்துக் கொள்ளுமாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளார்.

இந்த அறிவித்தல் நேற்றுமுன்தினம் கடிதம் மூலம் விடுக்கப்பட்டள்ளது. குறித்த காலப் பகுதியில் அத்தியாவசியமான வெளிநாட்டுப் பயணங்கள் இருந்தால் அதனை மூன்று வாரங்களுக்கு முன்னர் அறிவிக்குமாறு ரணில் அறிவுறுத்தியுள்ளார்.

அரசின் நடவடிக்கைகளை வினைத்திறனாகவும் முக்கியத்துவம் கொடுத்து நிறைவேற்றும் நோக்கிலும் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (த-ய)

## அம்பாறை நிதிமோசடி; தினேஸிடம் விசாரணை

கொழும்பு, ஜூலை 8
பெரும் நிதி மோசடிகள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் அரச தலைவர் ஆணைக்குழு நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தனவிடம் விசாரணை நடத்தப்படவுள்ளது. கடந்த ஆட்சிக் காலத்தில் அம்பாறையில் முன்னெடுக்கப்பட்டதாகக் கூறப்படும் பல கோடி ரூபா பெறுமதியான நீர் விநியோகத் திட்டத்தில் இடம்பெற்ற மோசடி குறித்து இவ்வாறு விசாரணை நடத்தப்படவுள்ளது. (த-ய)

**பழமரக் கன்றுகள் விற்பனைக்கு**

மாங்கன்று (பல இன) தென்னங்கன்று நல்ல இனம். செவிளை தென்னை. தேசிக் கன்று (விதை. ஒட்டு. பதி). மாதுளங்கன்று (றூட்டெட் விதை - திமாலி. இந்தியன்). கொய்யாக்கன்று 1Kg. கொய்யா (நல்ல இனம்). பலா (விதை. ஒட்டு). முருங்கை P.K.M. ரெட்லேடி பப்பாக்கன்று. அம்பலர்லங்கன்று. கமுகு. கஜு (ஒட்டு. விதை). அகத்தி. முழு நெல்லி. அரைநெல்லி. விலிம்பி. ஒட்டுத் தோடை. ஈரப்பலா (வேர்). வெற்றிலைக்கன்று (கொழும்பு). லாவுல். பசன் புறுட்கன்று. அகத்திக்கன்று மற்றும் தேக்கு. சவுக்கு சமண்டலை. மலைவேம்பு. கருங்காலி. மருது. பாலை. முதிரை. நாவல். இலுப்பை. வில்வம். சித்திரவேம்பு. ஊர்வேம்பு மற்றும் பூஞ்சாடி. பல இன பூங்கன்றுகளும் (குரோட்டன் வகை) விற்பனைக்குண்டு.

நியூலங்கா பாம்,
பலாலி வீதி, ஊரெழு மேற்கு,
கணேசா பாடசாலைக்கு அருகில். 077 612 9343

கிளை
K.K.S.வீதி, இணுவில்.

**நோயாளர் பராமரிப்புச் சேவை**
**ஆதார வைத்தியசாலை - தெல்லிப்பழை**

**வேலைக்கு ஆள் தேவை**

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையிலுள்ள நோயாளர்களைப் பராமரிப்பதற்கு தேக ஆரோக்கியமும் நற்பழக்கவழக்கங்களும் உள்ள ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை வைத்தியசாலையின் வளாகத்தில் முன் உள்ள நோயாளர் பராமரிப்புச் சேவை அலுவலகத்தில் ரூபா 100 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

**சம்பளம் ரூபா 1300 ஒருநாளைக்கு!**

**சேவைக்கேற்ற ஊதியம் பெறலாம்**

நோயாளர் நலன்புரி சங்கம்,
ஆதார வைத்தியசாலை,
தெல்லிப்பழை.

லயன் சி.ஹரிகரன்,
செயலாளர்.

**ST.JOHN'S COLLEGE, JAFFNA**

**VACANCIES**

Applications are hereby invited from qualified persons for the following.

1. Science (Tamil Medium / English Medium) - Grade 6-11
2. Western Music - Grade 6 - 11
3. Office Work / Management Assistant
   (Good Command of English & Computer Literacy essential.)

Please send your complete CV with contact details of two nonrelated referees by post on or before 22nd July 2017 to the address below. Only shortlisted candidates will be called for interview.

The Principal
St.John's College, Jaffna.

**விற்பனைக்கு**

பெரிய. சிறிய சணல் ஆடுகள். பொம்மேரியன் அல்சேசன் நாய்கள். நாய்க்குட்டிகள்.-மாடுகள் விற்பனைக்குண்டு.

077 101 6407

**பெண் விற்பனையாளர் தேவை**

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள புடைவை காட்சியறை ஒன்றுக்கு பெண் விற்பனையாளர் தேவை. முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

077 593 6369/ 077 753 1461

**வாடகைக்கு**
**Van For Hire**

டொல்பின் Hiace வான் யாழ்- கொழும்பு Airport, Pickup, Drop மற்றும் விசேட தேவைகளுக்கு மிகக் குறைந்த கட்டணத்தில் தரமான சேவைகள் வழங்கப்படும். நாள் மற்றும் மாத வாடகைக்கு விடப்படும்.
நிறுவனங்களுக்கு நீண்டகால அடிப்படையில் குத்தகைக்குக் கொடுக்கப்படும்.

**Apex Travels**
077 350 4700, 071 177 7771

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**





Congratulation
Congratulation

அ.அருளானந்த சோதி
அ.ஜெராட்

01.07.2017 அன்று நடைபெற்ற 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்திற்கான உத்தியோகத்தர்கள் தெரிவில் பொது உபதலைவராக அ.ஜெராட் அவர்களும் பொது உதவி செயலாளராக அ. அருளானந்தசோதியும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.
இவர்கள் இருவரையும் இவர்களுடன் அன்றைய தினம் தெரிவுசெய்யப்பட்ட அனைவரையும் பாராட்டுவதுடன் இவர்களின் மகத்தான சேவை தொடரவும் வாழ்த்தி மகிழ்கின்றோம்.

வாழ்த்துவோர்: ரியூப் தமிழ் நண்பர்கள்

**கட்டட நிர்மாண ஆளணி தேவை**

யாழ் நகரில் அமையவிருக்கும் 5 மாடி கட்டட வேலைக்கு தகைமையுடையோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. திட்ட முகாமையாளர்
B.Sc(Eng) உடன் 5 வருட கட்டட நிர்மாண அனுபவம். அல்லது NDT (Civil) உடன் 8 வருட கட்டட நிர்மாண அனுபவம்.

02. தொழில்நுட்ப உத்தியோகத்தர்
NDT(Civil) உடன் 5 வருட கட்டட நிர்மாண அனுபவம். அல்லது அதற்கு சமமான தகைமை.

03. கணிய அளவையாளர்
NCT(QS) உடன் 5 வருட கட்டட நிர்மாண அனுபவம். அல்லது அதற்கு சமமான தகைமை.

உப ஒப்பந்தகாரர்
Shuttering (சட்டறிங்) வேலையாள்கள்
கம்பி பொருத்துபவர்
மேசன்

அனுப்ப வேண்டிய முகவரி
கட்டட இணைப்பாளர்,
இல.154, முதலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 6239

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்குப் பாடசாலைகளில் கழிவறைகள் அமைக்க நிதி

*23 கோடி ரூபாவை ஒத்துக்கியது கல்வியமைச்சு*

கொழும்பு, ஜூலை 8
கிழக்கு மாகாணத்தில் கழிவறைகள் குறைபாடுள்ள பாடசாலைகளுக்கு கழிப்பறைகளை நிர்மாணிக்கக் கல்வி அமைச்சினால் 23 கோடியே 80 இலட்ச ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
இதன் மூலம் கிழக்கின் மூன்று மாவட்டங்களிலும் கழிப்பறை குறைபாடுள்ள பாடசாலைகள் அடையாளம் காணப்பட்டு அவற்றின் குறைபாடுகள் தீர்க்கப்படும் எனக் கிழக்கு முதலமைச்சர் ஹாபிஸ்நசீர் அஹமட் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமது பாடசாலைகளில் கழிப்பறைகள் இன்மையால் பல மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதையே நிறுத்தி இடைவிலகுகின்ற நிலைமையும் அறியக் கிடைத்ததுள்ளது. இவ்வாறான நிதி ஒதுக்கீடுகள் மூலம் அந்தக் குறைபாடுகள் தீர்க்கக் கிடைத்தமை மகிழ்ச்சியை அளிக்கின்றது.
கடந்த ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டின்போது மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகளின் பற்றுச் சீட்டுக்களுக்கான நிதி வழங்கப்பட்ட போதிலும் இந்த வருட அபிவிருத்திகளுக்கான நிதி இது வரை கிடைக்கப் பெறவில்லைஎன்றார். (த-ய)

# நீதிக் குற்றவியல்பிரிவை மூடுவதற்கு அரசு முயற்சி

*குற்றம் சாட்டுகிறது ஜே.வி.பி.*

கொழும்பு, ஜூலை 8
நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி நீதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவை மூடுவதற்கு முயற்சிக்கப்படுகின்றது என மக்கள் விடுதலை முன்னணியின் மூத்த உறுப்பினர் வசந்த சமரசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.
நீதிக் குற்றவியல் விசாரணைப் பிரவையும். பெரும் நிதி மோசடிகள் மற்றும் அதிகார துஸ்பிரயோகம் குறித்த அரசதலைவர் ஆணைக்குமுவையும் கலைப்பதற்கு முயற்சிக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த இரண்டு நிறுவனங்களாலும் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளை முடிவுக்குக் கொண்டு வர அரச தலைவரும், தலைமை அமைச்சரும் கூட்டாக இணைந்து முயற்சிக்கின்றனர்.
ஆயிரக்கணக்கான முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ள நிலையில் வெறும் 450 முறைப்பாடுகள் தொடர்பிலேயே விசாரணை நடத்தப்பட்டுள்ளது. என்ன காரணத்துக்காக விசாரணைகளைக் காலம் தாழ்த்தி வருகின்றார்கள் என்பது புரியவில்லை. வெளிப்படையானவிசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளைத் தண்டிக்கவேண்டும் என்றார். (த-ய)

# ஜெனரல் தயா ரட்நாயக்கா விசாரணைக்காக அழைப்பு

கொழும்பு, ஜூலை 8
முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் தயா ரட்நாயக்கவை பெரும் நிதி மோசடிகள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் அரச தலைவர் ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
காங்கேசன்துறை சிமெந்து ஆலையில் 600 தொன் எடையுடைய இயந்திர சாதனங்கள் பழைய இரும்புக்காக விற்பனை செய்யப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காகவே இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் தயா ராட்நாயக்கவுடன் மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, மேஜர் ஜெனரல் உதய பெரேரா, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் மேலதிகச் செயலாளர் சிறிபால ஹெட்டியாராச்சி ஆகியோரும் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.
எதிர்வரும் 13ஆம் திகதி இந்த விசாரணை இடம்பெறவுள்ளது.
போர் நிறைவடைந்ததன் பின்னர் 20122013ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் காங்கேசன்துறை சிமெந்து ஆலையை அண்டிய பகுதியில் உள்ள பழைய இரும்புப் பொருள்களை வெட்டி அகற்றுவதாகக் கூறி, நல்ல இயந்திர சாதனங்கள் அறுக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளமை விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.
சுமார் 600 தொன் எடையுடைய இரும்பு இவ்வாறு வெட்டி விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் அரசதலைவர் ஆணைக்குழு விசாரணைகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-ய)

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி
(08.07.2017)



செல்வராசா கோணேஸ்
கிளி/ செந்தாமரை ஹோட்டல் உரிமையாளர்
பிறப்பு 13.03.1980
இறப்பு 30.06.2015

ஆண்டுகள் இரண்டு ஆனாலும் ஆறாது எம் துயர்....
அப்பா அப்பா என்று தினமும்
காத்திருக்கின்றோம் விடியலில்
உங்கள் முகம் காண....
மறைந்து போனாலும் என்றும் மறந்து போகாதப்பா
உங்கள் நினைவுகள்
என்றுமே எங்கள் நினைவில் வாழும் தெய்வம் நீங்கள் தான் அப்பா ....
என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறையருள் வேண்டி நிற்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



இராஜரட்ணம் குகதாசன்

08.06.2017 அன்று சுவிற்சர்லாந்தில் இறைபதம் அடைந்து தாயகத்தில் இறுதிக் கிரியைகள் நடைபெற்ற எமது இதய தெய்வம் இராஜரட்ணம் குகதாசனின் அமரத்துவத்தின் போது சுவிற்சர்லாந்திலும் தாயகத்திலும் நேரில் வந்து எமது துயர் பகிர்ந்து கொண்ட பாசமுள்ள உறவுகள் நேசமுறு நண்பர்கள் தொலைபேசியிலும். மின்னஞ்சலிலும் எம்மை ஆறுதல் படுத்திய அன்பு நெஞ்சங்கள். அஞ்சலிப்பிரசுரம். அஞ்சலிப் பதாகை. மலர் வளையம் என்பன வைத்து எம்மை நெகிழ்வித்த உறவுகள். நண்பர்கள் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் எம் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (08.07.2017) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது ஆத்மசாந்தி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

கலாநிதிவீதி,
ஏழாலை வடக்கு.

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர், சகோதரிகள்.

# உமாஓயா திட்டத்தின் பணி இடைநிறுத்தம்

*பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.30 கோடி தற்காலிக இழப்பீடு*

உமாஓயா திட்டத்தில் ஏற்பட்டிருக்கும் நீர் ஒழுக்கு பற்றிய தீர்வைக் கண்டுபிடிக்கும்வரை அங்கு நடைபெறும் துளைப்பு வேலைகள் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டிருப்பதாக மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது.
உமாஓயா திட்டம் ஏற்படுத்தியிருக்கும் பிரச்சினைகள் பற்றி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நடத்திய கலந்துரையாடலின் பின்னர் துளைப்பு வேலைகள் பத்து நாள்களுக்கு இடைநிறுத்தம் செய்யப்பட்டிருப்பதுடன், சகல துளைப்பு இயந்திரங்களும் அங்கிருந்து அகற்றப்பட்டிருப்பதாகவும் அமைச்சின் செயலாளர் அநுர திசாநாயக்க தெரிவித்தார். இந்தக் கலந்துரையாடலின்போது பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தற்காலிக இழப்பீடாகவழங்குவதற்கு பதுளை மாவட்ட செயலாளருக்கு 30 கோடி ரூபாவை நிதியாக வழங்குமாறு அரச தலைவர் உத்தரவிட்டுள்ளார் எனவும் தெரியவருகின்றது. (த)

# ரணிலின் 40 வருட அரசியலை

## பாராட்டுவதற்கு சிறப்பு அமர்வு

கொழும்பு, ஜூலை 8
நாடாளுமன்ற உறுப்பினராக 40 ஆண்டுகாலம் சேவையாற்றியுள்ள தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பாராட்டு தெரிவிப்பதற்காக எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 4ஆம் திகதி நாடாளுமன்றத்தின் சிறப்பு அமர்வொன்றை நடத்துவதற்கு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஏகமனதாகத் தீர்மானித்திருப்பதாக நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் கட்சித் தலைவர்கள் கூடியபோது சபைத் தலைவர் லக்ஸ்மன் கிரியெல்ல முன்வைத்த பிரேரணை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
நாடாளுமன்றத்தில் தொடர்ந்து 40 ஆண்டுகாலம் உறுப்பினராக இருந்த சாதனையை ஒரு சிலரே செய்துள்ளனர் எனவும், முன்னாள் அமைச்சரான காலஞ்சென்ற மைத்திரிபால சேனநாயக்க மாத்திரமே 47 வருடங்களாகத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினராகச் சாதனை படைத்துள்ளார் எனவும் நாடாளுமன்ற வட்டாரங்கள் சுட்டிக்காட்டின. (த)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 12 . 12 . 1956



மறைவு 08 . 06 . 2017

அன்பு வழியில் எம்மை அரவணைத்து
ஆருயிராய் நேசித்து ஆசீர்வதித்து
இன்பமிகு நல்லறமாம் இல்லறத்தை
ஈடேற்றிய எம்மிதயத் தெய்வமே!
நாள்கள் முப்பத்தொன்று ஆனபோதும் ஆறவில்லை எம் துயரம்

கடந்த 08.06.2017 வியாழக்கிழமை இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவி
திருமதி தனலட்சுமி (ரதி) மகாலிங்கம்
அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (08.07.2017) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 108, [illegible] வீதி,
அன்னார் பண்ணை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரியெல்லவுடன் சபையில் மோத விரும்பாத மகிந்த

கொழும்பு, ஜூலை 8
கொழும்புத் துறைமுகம் தொடர்பில், சபைமுதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்லவுடன் மோதுவதற்குத் தான் விரும்பவில்லையென, முன்னாள் அரச தலைவர், குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டவரைவு மீதான விவாதம், நாடாளுமன்றத்தில் நேற்று முன் தினம் நடந்தது.

இந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய, ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே, "தற்போதைய அரசு, நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்கு விற்கிறது" என்று, கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்து அவை தொடர்பிலான விவரங்களையும் முன்வைத்தார்.

அளுத்கமகேயின் குற்றச்சாட்டுக்களை மறுத்த, சபைமுதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல, "உங்கள் அரசுதான் எல்லாவற்றையும் விற்றது. சபையில் மஹிந்த ராஜபக்சவும் உள்ளார். இவர்தான், கொழும்புத் துறைமுக நகரைச் சீனாவுக்கு விற்றார்" என்று, குற்றம்சாட்டினார்.

இதற்குப் பதிலளித்த, முன்னாள் அரச தலைவர் மஹிந்த ராஜபக்ச, "எமது ஆட்சி உருவாகுவதற்கு முன்னர் கொழும்புத் துறைமுகம் இருந்ததா? இதற்கு என்ன கூறுகின்றீர்கள்" எனக்கேட்டுவிட்டு இந்தவிவகாரத்தில் உங்களுடன் மோதுவதற்கு நான் விரும்பவில்லை என்று கூறியமர்ந்தார். (த)

# அதிகாரபோதை கொண்டவர்களே அரசமைப்பை எதிர்க்கின்றனர்

## அமைச்சர் சஜித் பிரேமதாச சாடல்




கொழும்பு, ஜூலை 8
அதிகார போதை காரணமாகவே சிலர் புதிய அரசமைப்புச் சட்டத்திற்கு எதிர்ப்பை வெளியிடுகின்றனர் என வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பெந்தர மிரிஸ்வத்தைப் பிரதேசத்தில் வீடமைப்புத் திட்டத்தைத்திறந்து வைத்து பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
அதிகார வேட்கையில் அதிகார போதையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் ஆட்சி முறைமையை அப்படியே வைத்துக் கொண்டு மீண்டும் அந்த நாற்காலிக்கு வந்து, நாட்டின் பொதுப் பணத்தைக் கொள்ளையிட முயற்சிப்போருக்கு நாங்கள் கொண்டுவர இருக்கும் அரசமைப்புச் சட்டம் தேசத்துரோகச் செயலாக இருக்கலாம்.

பௌத்த மதத்திற்கு வழங்கவேண்டிய சிறப்புமுன்னுரிமையை நாங்கள் வழங்குவோம். நாங்கள் அரசமைப்புச் சட்டத்தின் மூலம் அதிகாரத்தைப் பரவலாக்குவோம்.

அப்போது யார் பதவிக்கு வந்தாலும் கட்டளை பிறப்பிப்பதற்கு வாய்ப்பு கிடைக்காது - என்றார். (த-ய)



# புத்தளத்தில் கடும் வறட்சி 129,276 பேர் வரை பாதிப்பு

## கால்நடைகளும் தவிப்பு

புத்தளம், ஜூலை08
புத்தளம் மாவட்டத்தில் நிலவிவரும் கடும் வறட்சி காரணமாக ஒரு இலட்சத்து 29 ஆயிரத்து 276 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனப் புத்தளம் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

புத்தளம் மாவட்டத்தின் 13 பிரதேச செயலகத்திற்குட்பட்ட 161 கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள 36 ஆயிரத்து 394 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வறட்சியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் கடுமையான குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை எதிர்நோக்கி வருகின்ற நிலையில் அந்தந்தப் பிரதேச செயலகங்கள் ஊடாக குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வறட்சி காரணமாக மாவட்டத்திலுள்ள பல குளங்கள் மற்றும் நீர்நிலைகள் வற்றிய நிலையில் கால்நடைகள் உயிரிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. விவசாய நிலங்களும், செங்கல் உற்பத்தியும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-ய)

# டெங்கு குறித்து மைத்திரியுடன் பேச மருத்துவர் சங்கம் முடிவு

கொழும்பு, ஜூலை 8
நாட்டில் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள டெங்குநோய் தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் கலந்துரையாடுவதற்கு இலங்கை அரச மருத்துவர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கான திகதியொன்றை ஒதுக்கித்தருமாறு சங்கத்தின் தலைவர் மருத்துவர் அனுருத்த பாதெனியவும் செயலாளர் மருத்துவர் ஹரித அளுத்கேயும் கையொப்பமிட்ட கடிதமொன்று அரச தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

நாட்டின் சகல பகுதிகளிலும் உக்கிரமடைந்துள்ள டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு தங்கள் சங்கத்துக்கும் உள்ளது எனவும், இந்தப்பணிக்கானசகலஉதவிஒத்தாசைகளையும் வழங்கத் தாங்கள் தயாராகஇருப்பதாகவும்அந்தக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக மருத்துவர் ஹரித அளுத்கே கூறினார்.

தற்போதைய நிலையை மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் ஆராய்தல், டெங்கு ஒழிப்புத் தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வூட்டல், கிராமிய மட்டங்களில் டெங்கு ஒழிப்புக் குழுக்களை அமைத்தல், டெங்கு ஒழிப்புப் பணிகளுக்குத் தனியார் துறையில் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளல் போன்றவை உட்பட பல்வேறு ஆலோசனைகள்இந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (த)

## நீரிழிவு நோயாளர்கள் இரு மடங்காக உயர்வு

கொழும்பு, ஜூலை 8
கடந்த வருடத்தைவிட இந்த வருடம் இலங்கையில் நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கை இரு மடங்காக-அதிகரித்திருப்பதாகச் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீரிழிவு நோயாளிகள் உணவுக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கவேண்டியது மிக மிக அவசியம். சீனி மற்றும் இனிப்புப் பதார்த்தங்களை முற்றாகத் தவிர்க்கவேண்டுமெனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் சனத்தொகையில் கிட்டத்தட்ட 25 வீதமானோர் நீரிழிவு நோய்க்கு ஆளாகியுள்ளனர். அவர்கள் அதற்கான மருந்துகளை கிரமமாக உட்கொள்வதன் மூலம் நோயைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளலாம் எனவும், இதற்கான இலவச மருத்துவ முகாம்கள் நாடெங்குமுள்ள அரச மருத்துவமனைகளில் நடத்தப்பட்டு வருவதாகவும் அந்த அறிக்கை யில் கூறப்பட்டுள்ளது. (ம)

# வெளிநாட்டில் பணிபுரிவோரின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்

## 59 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு



கொழும்பு, ஜூலை 8
வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களின் பிள்ளைகளின் கல்விக்கான புலமைப்பரிசில்களை வழங்க இந்த வருடம் 59 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சர் திருமதி தலதா அத்துகோரள தெரிவித்தார்.

இந்த வருடம் 2,976 பிள்ளைகள் இந்தப் புலமைப் பரிசில்களைப் பெறுவார்கள். 2016 இல் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற 876 பிள்ளைகளுக்கு தலா 15 ஆயிரம் ரூபா வீதம் ஒரு கோடி 31லட்சத்து 40 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

2015 இல் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த 1,712 பேருக்குத் தலா 20 ஆயிரம் ரூபா வீதம் 3கோடி 42 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவும் அந்த வருடம் பல்கலைக்கழகம் சென்ற 388 பேருக்குத் தலா 30 ஆயிரம் ரூபா வீதம் ஒரு கோடி 16 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது.

> 2016 இல் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற 876 பிள்ளைகளுக்கு தலா 15 ஆயிரம் ரூபா வீதம் ஒரு கோடி 31லட்சத்து 40 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் முறையாகப் பதிவு செய்து வெளிநாடு செல்பவர்களின் பிள்ளைகளே இத்தகைய புலமைப்பரிசில்களுக்கு உரித்துடையவர்கள் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த)

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 06 . 1957



மறைவு 06 . 07 . 2017

### ஞானமலர் அல்பிரட்

" புஷ்பவாசா " உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானமலர் அல்பிரட் 06.07.2017 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - செல்வதி தம்பதிகளின் புதல்வியும், மாணிக்கம் அல்பிரட் (ஊழியர் - கிங்ஸ்ரன், எலக்ரோனிக்ஸ்) அவர்களின் அன்பு மனைவியும், றியோபிலாவின் (ஆங்கில விரிவுரையாளர் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) அன்புத் தாயாரும், யோகராஜா, காலஞ்சென்ற புஷ்பராணி மற்றும் தேவநேசன், ஜெயமலர், தேவமலர், கிருபைமலர், காலஞ்சென்ற அரியமலர் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (08.07.2017) சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் உடுவில் செபமாலை மாதா ஆலயத்தில் இடம்பெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
உடுவில். குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

செ.யாழிசை

# இயற்கையின் தோ(மா)ற்றம்

## உயிரினச் சமன்பாடுகளிடையே பலம்பெற வேண்டிய பல்வகைமைத்துவம்

மனிதன் தன்னைப் பெற்றவர்களுக்கும், வழிவழிவந்த மூதாதை யர்களுக்கும் தருகின்ற மரியாதையின் ஒரு பகுதியையாவது தனக்குமுன்பே தோன்றிய இந்த உலகை சேதாரமின்றி பக்குவமாய் பக்குவப்படுத்தி நமக்கு விட்டுச் சென்றுள்ள உயிரினங்களுக்கும், இயற்கைக்கும் தரவேண்டும் என எப்போதாவது சிந்தித்திருக்கிறானா..? சிந்தி த்ததுண்டா…? சிந்திக்கிறோமா…? தெரியவில்லை…! இருப்பவற்றையெல்லாம் தொலைத்துவிட்டு நிர்க்கதியாய் அறிமுகம் கொண்டுள்ளோம்.தொழிநுட்பச் சுடுகாட்டில் இயற்கையைத் தொலைத்துவிட்டு ஏதிலிகளாய் நின்று கொண்டிருக்கிறோம்.

**தோற்றம்**

புவி தோன்றியபோது நிலம், நீர், காற்று என்பன இருந்தன. பின் ஒரு செல் உயிரியிலிருந்து பல செல் உயிரிகள் வரை தோன்றத் தொடங்கின. இதற்குப் பல இலட்சம் ஆண்டுகளுக்குப் பின்னரே மனித இனத்தின் தோற்றம் நிகழ்ந்திருக்கிறது.

இயற்கையாகத் தோன்றிய புல், பூண்டு, செடி, கொடி, மரம், பூச்சிகள், பறவைகள், விலங்குகள் உள்ளிட்டவை மனிதனின் உதவியின்றியே உயிர்வாழக் கூடியவை. ஆனால் பிற உயிரினங்களையும் இயற்கை உற்பத்திகளையும் மட்டுமே சார்ந்திருக்கக்கூடியமனிதனோ உயிரினங்களை வேட்டையாடியும் இயற்கையை சூறையாடியும் தன்னுயிரை நிலைநிறுத்த முயல்கிறான். இதில் என்ன நியாயாம் இருக்கிறது. நகரங்களைப் பெருக்கி, காடுகளை அழித்து, வளிமண்டலத்தைக் கிழித்து, மாசுகளால் ஒழித்து,ஒளியைத் தொலைத்து இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையேயான இடைவெளியை குறைத்துக் கொண்டே செல்கிறோம்.செல்வதால் தான் எப்போதாவது வரவேண்டிய ஆழிப் பேரலை, புயல், வெள்ளம், புவிவெப்பமயமாதல் போன்றன அடிக்கடி வந்து தமிழர்களாகிய எம்மை அரச பயங்கரவாதம் அழித்திட கங்கணங்கட்டிய கடந்தகாலங்களை ஞாபக மூட்டுகிறது.இன்னமும் கொடிய முகம் கொண்டு அச்சுறுத்துகின்றது.

**அபிவிருத்தி நாமங்கள்**

நகரப் பெருக்கத்தின் காரணமாகவும் அதிகரித்துவரும் நல்லிணக்க நாமம் சூடிய அபிவிருத்தியின் திணிப்பான கட்டடக்காடுகளும் சுருங்கிப் போன குறுகிய வயல் நிலப்பரப்பில் அதிக விளைச்சல் வேண்டி இரசாயனங்களைக் கொட்டுவது என்பது ஒரு விதத்தில் இயற்கையை எமது கட்டுக்குள் கொண்டு வந்துவிட முடியும் என்பதான ஒரு மூடநம்பிக்கையின் தொனிப்புத்தான். தீராத வெறிப்புத்தான். யானைகள் தங்கள் வாழ்விடங்களை விட்டு வெளியேறி குடியிருப்புகளாக்கப்பட்ட பகுதிகளில் நுழைந்து தாக்குவதை



> “உயிரினங்களிலேயே முதிர்ச்சி பெற்ற,ஆறறிவு படைத்த உன்னதமான இனமாக நம்மை நாமே தன்னிச்சையாக அறிவித்துக்கொண்டு செய்கின்ற இயற்கை சூறையாடலுக்கு வரன்முறைகள் இல்லாது போய்விட்டது.வரையறைகள் அற்றுப் போய்க்கொண்டிருக்கிறது. இயற்கையைப் பகைத்துக் கொள்வதற்கும் புறக்கணிப்பதற்கும் மனிதனின் பேராசையும் கொடிய குணங்களுமே காரணம் என்று சொல்லலாம்.


நாம் 'நாசம்' செய்கின்றன் என்று கூறுகிறோம். நாம் செய்துவிட்ட பாதகங்களை,நாசங்கள் எனற சூசகங்களை மறந்துவிட்டவர்களாய். இவைதவிர நீர் வழிப்பாதைகளை மறித்து கட்டடங்களைக் கட்டிவிட்டு பெருவெள்ளத்தில் ஊர் அழிந்தபின் 'பேரழிவு' என்று சொல்கிறோம்.சொல்லித்திரிகிறோம்.

ஆக, உயிரினங்களிலேயே முதிர்ச்சி பெற்ற, ஆறறிவு படைத்த உன்னதமான இனமாக நம்மை நாமே தன்னிச்சையாக அறிவித்துக்கொண்டு செய்கின்ற இயற்கை சூறையாடலுக்கு வரன்முறைகள் இல்லாது போய்விட்டது.வரையறைகள் அற்றுப் போய்க்கொண்டிருக்கிறது. இயற்கையைப் பகைத்துக் கொள்வதற்கும் புறக்கணிப்ப தற்கும் மனிதனின் பேராசையும் கொடிய குணங்களுமே காரணம் என்று சொல்லலாம்.சொல்லப்படுகிறது.உண்மைதானே…! இயற்கை எமக்கு வழங்கிய எண்ணிலடங்காத கொடைகளை வெட்டியும் வெடி வைத்து தகர்த்தும் ஆழத் தோண்டியும் உறிஞ்சியும் கொள்ளையடிக்கின்ற மகா கொள்ளையர்களாக நாம் இருக்கிறோம்.



**ஒன்றுபட்டு வாழுதல்**

பல்லாயிரம் கோடி ஆண்டுகள் வழிவழியாய் இப்புவியில் வாழ்ந்துவந்த உயிரினங்களின் எண்ணிக்கையும் இயற்கைவளங்களும் குறைந்து வரும் அதேவேளையில் குடிநீர்த் தட்டுப்பாடும் இயற்கைப் பேரழிவுகளையும் மனித இனத்திற்கு விடுக்கப்படும் எச்சரிக்கையாகவே எடுத்துக்கொள்ள வேண்டும். மனிதா்களின் வளம் காப்பதற்காக வரம்புமீறி செய்யப்படும் இயற்கைவள சுரண்டலால் 'தக்கன தப்பி வாழ்நிலை பெறும்' எனும் சித்தா ந்தம்கூட எதிர்காலத்தில்,எதிர்வரும் கணங்களில் கூடப் பிழையாகிப் போகலாம்.



பிற உயிரினங்கள் இன்றி மனிதன் மட்டும் இந்த உலகத்தில் வசதி வாய்ப்போடு கோலோச்சி விடலாம் என்று நினைப்பது ஏகாதிபத்திய மனநிலை. இந்தச் சிந்தனையோ முட்டாள்தன மானதும்கூட. தனிமனித சுதந்திரம் பற்றி பேசிக்கொண்டே உலகிற்கே பொதுவாக இருக்கும் இயற்கையின் சுதந்தி ரத்திற்கு தொடர்ந்து இடையூறு செய்துகொண்டு இருக்கிறோம்.

வனப்பாதுகாப்புக்கான சட்டம் மட்டும் இருந்தால் போதாது. மனிதனின் மனக்கட்டுபாடுகளுக்கான சுயசட்டமும் ஒவ்வொரு மனிதரிடத்திலும் இருக்க வேண்டும். அரசின் கடமையும் தனிமனிதக் கடமையும் ஒருங்கிணைந்தால்தான் எந்தத் திட்டமும் வெற்றிகரமாக நடைமுறைக்கு வரும் என்பதைத் தோல்வியடைந்த பல திட்டங்கள் வாயிலாகவே புரிந்துகொள்ளலாம். புரிந்து கொள்ள வேண்டும். நகர்ப்புற விரி வாக்கத்திற்கும் கண்க்கற்ற கட்டடங்களை கட்டுவதற்கும் அனுமதி அளித்துவிட்டு அதற்குத் தேவையான மணலை 'அள்ளாதே' என்று சொல்வதில் என்ன பலனிருக்கும்…?? சிந்திக்க வேண்டும்.

கடலரிப்பைத் தடுப்பதற்காக கரையோரங்களில் பாறாங்கற்களைக் கொட்டினால் தடுக்கப்பட்ட அலைகளின் வேகம் கற்கள் கொட்டப்படாத அருகிலிருக்கும் வேறு கரையோரக் கிராமத்தை தாக்கமுறச் செய்யும் என்பதை உணர மறுக்கிறோம்.இயற்கையின் வலிமையை உணர்ந்து தெளியாமல் எம்பாட்டில் நடந்துகொள்கிறோம்.

**இயற்கையைப் பேணுவோம்**

பிற உயிரினங்களைப் போல் மனிதனும் இயற்கை மற்றும் உயிரின சமன்பாட்டுக்கு உதவ வேண்டுமாயின் இயற்கையைப் பேணவேண்டும். இயற்கையாக பழுக்கும் வரை காத்திருக்கப் பொறுமையின்றி இரசாயனங்களை வைத்துக்கொண்டு மாம்பழங்களைப் பழுக்கவைத்து உடனே பணம் பார்க்க முயலும் அவசரக்காரர்களிடம் நுகர்வோர் எச்சரிக்கையாய் இருந்து தம் உடல் நலனைப் பாதுகாத்து கொள்ள வேண்டும். அதுபோன்ற செயற்கை உற்பத்திக்கு ஆதரவு அளிக்காமல் இருப்பதும் புத்திசா லித்தனம்.புரிந்துகொள்ள வேண்டும்…!

தற்காலிகமாக வாழ்ந்து விட்டுப் போக வந்திருக்கும் மனிதனுக்கு இந்தப் பூமியை சிதைத்துப் பார்க்க எந்த உரிமையும் கிடையாது. இந்தப் பூமி மனிதனுக்கு மட்டும் உடையது அல்ல உயிரிப்பன்மயத்திற்கும், பல்வகைமைத்துவத்திற்கும் உதவும் எல்லா உயிரினங்களுக்குமானது.

இயற்கையின் சுழற்சியில் ஏதேனும் குளறுபடி ஏற்பட்டால் அது ஒட்டுமொத்த உயிரினங்களுக்கான உணவுச்சங்கிலியைப் பாதிக்கும். வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்பம் குறித்துப் பெருமைப்பட்டுக் கொள்ளும் அதே வேளையில் அழிந்து வரும் உயிரினங்கள் குறித்தும் கவனமாகச் சிந்திக்க வேண்டும்…!

மீண்டும் ஞாபகமிருக்கட்டும் மக்காள்…! பூமி நமக்கு அளித்திருக்கும் வாழ்வதற்கான இந்த அரிய வரத்தை எந்த தவத்தாலும் திரும்பப் பெறமுடியாது.எம் பயணங்களை சீர்மைத்துவங்களோடு சீர்ப்படுத்தி மகிழ்ந்திருப்போம்.வாழ்ந்திருப்போம்……!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதலீடுகளைத் திட்டமிடும் கடப்பாடு தனியார் தொழில்முயற்சியாளர்களிடம் காணப்படுகிறது

## தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க தெரிவிப்பு

"எதிர்வரும் 20 ஆண்டு காலப் பகுதியில் தெற்கு ஆசியா மற்றும் வங்காள விரிகுடா வலய நாடுகளின் சனத்தொகையானது 250 மில்லியன்களால் அதிகரிக்கும்."

தெற்கு ஆசியா மற்றும் வங்காளவிரிகுடா வலய நாடுகளில் அதிகரித்து வரும் சனத்தொகைப் பெருக்கத்தை கருத்தில்கொண்டு மேற்கொள்ளப்படுவதான முதலீடுகளை திட்டமிட வேண்டிய கடப்பாடும், பொறுப்பும் ஜப்பானின் தனியார் தொழில் முயற்சியாளர்களிடமே காணப்படுவதான கருத்தினை தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க வெளிப்படுத்தப்படுத்தியுள்ளார்.

ஜப்பான் பன்னாட்டு வர்த்தக அமைப்பின் தலைமையில் ஜப்பான் வர்த்தக மற்றும் கைத்தொழில் மன்றம், ஜப்பான் இலங்கை வர்த்தக ஒத்துழைப்புக்குழு, ஜப்பானின் புதிய எரிசக்தி மற்றும் கைத்தொழில் தொழில்நுட்ப அபிவிருத்தி அமைப்பு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த மாநாடொன்றில் கலந்து கொண்டு "உலக சுற்றாடல் சம்பந்தமான இலங்கையின் வாசிப்பு மற்றும் ஜப்பானின் முக்கியத்துவம்" என்ற தலைப்பின் கீழாக கருத்துரைக்கும் போதே இந்த விடயங்கள் அவரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அங்கு அவர் கருத்துரைக்கையில்;

" ஜப்பான் அரசின் ஒத்துழைப்பில் மாத்திரம் அபிவிருத்தி தங்கியிருக்கக்கூடாது. ஜப்பானின் தனியார் துறைப் பிரிவினரின் ஒத்துழைப்பும் அவசியம். கட்டியெழுப்பப்படும் வர்த்தக சந்தைகளிலேயே நீங்கள் முதலீடுகளைச் செய்கிறீர்கள். அது ஏனைய சந்தைகளை விடவும் வித்தியாசமானது. பொருளாதாரம் தொடர்பில் பேசும் போது அதில் இந்துசமுத்திர நாடுகளின் தலையீடும் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகிறது.

ஏனெனில் அங்கு சந்தை தோற்றம் பெறுகிறது. அங்கு தான் புதிய அபிவிருத்தி மற்றும் சனத்தொகையில் அதிகரிப்பு ஏற்படுகின்றது. இவ்வாறான விடயங்களையும் ஜப்பான் கருத்தில் கொள்ள வேண்டும். நான் ஜப்பான் என்று கூறுவது ஜப்பான் அரசு மாத்திரமல்ல அரசு, தனியார் துறை, மக்களிடையேயான தொடர்புகள் என்பனவே" - என்றார்.

தவிர பூகோள அரசியல் தொடர்பிலான இலங்கையின் நிலைப்பாடு மற்றும் ஜப்பானின் முக்கியத்துவம் எனும் தலைப்பிலும் பிரதமர் உரையாற்றியுள்ளார்.

இந்த மாநாட்டில் ஜப்பானின் 300 இற்க்கும் மேற்பட்ட முதல்தர வர்த்தகர்கள் கலந்து கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

# தொழிற் பயிற்சி நிறுவனங்களை நிறுவ அரசு நடவடிக்கை



அரசு பாகுபாடின்றிய தொழிற் கல்வியை உயர்த்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளதான தகவல்களை கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக,

"நாட்டில் தொழிற் பயிற்சி நிறுவனங்களை நிறுவுவதன் ஊடே வினைத்திறனான கல்விச் சேவைகளை வழங்கி அதனூடாக தொழிற் சந்தைக்கு தேவையான அளவு தொழிலாளர்களை உருவாக்கிக்கொள்ள முடியும். அதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளை அரசு தற்போது மேற்கொண்டுள்ளது. எந்தவொரு நாடும் வளர்ச்சியடைந்தமைக்குக் காரணம் கல்வியில் ஏற்பட்ட புரட்சியேயாகும்" எனத் தெரிவத்துள்ளார்.

# இலங்கைப் பணியாளர்களுக்கு வரி விலக்களிப்பு

## இலங்கை சுங்கம் தீர்மானம்

இலங்கையிலிருந்து தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்கு செல்கின்ற பணியாளர்கள் நாட்டுக்குத் திரும்பும் போது எடுத்துவருவதான சில பொருள்களுக்கு வரியை விலக்களிப்பதற்கு இலங்கை சுங்கம் தீர்மானித்துள்ளதென தெரிவிக்கப்படுகிறது.

தொழிலுக்காக சென்று ஒரு வருட காலத்தின் பின்பாக நாடு திரும்பும் இலங்கைப் பணியாளர்களுக்கே இந்த வரி விலக்களிக்கப்படும் என கட்டுநாயக்க விமான நிலைய பிரதி சுங்கப் பணிப்பாளர் பராக்ரம பஸ்நாயக்க தெரிவித்துள்ளார்.

குறிப்பாக குளியலறை உபகரணங்கள், கணனி, சூரியசக்தி உபகரணங்கள் உள்ளடங்கலான மேலும் சில பொருள்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

தவிர, ஆடை அணிகலன்களுக்காகவும் வரி நிவாரணமொன்றை வழங்குவதற்கு உத்தேசித்து வருவதான தகவலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன் குளிரூட்டிகள் உள்ளிட்ட மேலும் சில பொருள்களுக்கான வரி அறவீடுகள் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்குமென தெரிவிக்கப்படுகிறது.

# வாழ்வாதாரத்துக்கான நிதி மானிய வழங்கல் செயற்திட்டம் ஆரம்பம்

## துறைமுக நகர அபிவிருத்தி செயற்றிட்டத்தின் ஊடாக நடவடிக்கை



மீனவ சமூகத்தின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான நிதி மானியங்களை பெற்றுக்கொடுக்கும் செயற்திட்டமொன்று துறைமுக நகர அபிவிருத்தி செயற்றிட்டத்தின் ஊடாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதான தகவல் தெரிவிக்கப்படுகின்றது.

நகர அபிவிருத்திச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது அந்தப் பிராந்தியங்களில் மணல் அகழப்படுவதுடன் அங்குள்ளதான முருகைக்கற் பாறைகள் மற்றும் கடலுயிர்களின் இனவிருத்தி வலயங்கள் பாதிக்கப்படுவதாகவும் மீனவர்கள் குற்றச்சாட்டுகளை முன்வைத்ததைத் தொடர்ந்தே இந்த நிதி மானிய வழங்கல் செயற்றிட்டம் தொடர்பிலான முன்மொழிவு இடம்பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

குறிப்பாக மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த நிதி மானியங்களை வழங்க வேண்டும் என்பதான கோரிக்கைகள் துறைசார்ந்த அமைச்சரினால் துறைமுக நகர அபிவிருத்தி செயற்றிட்ட பிரிவிடம் கோரப்பட்டுள்ளதுடன் எந்தவொரு மீனவ சமூகத்தின் வாழ்வாதாரத்துக்கும் பாதிப்புக்கள் ஏற்படுமாயின் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நாரா நிறுவனம் மேற்கொண்டதான ஆய்வுகளின் தகவலடிப்படையில் குறித்த பிரதேசங்களில் உள்ள கடலுயிர்களின் இனவிருத்திக்கு எந்தவித பாதிப்புகளும் ஏற்படவில்லை என்பதான கருத்துக்களும் மீன்பிடித்துறை அமைச்சினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

# இலங்கை ரூபாவின் பெறுமான மதிப்பீடு குறைவடைந்துள்ளது

## இலங்கை மத்திய வங்கி தெரிவிப்பு

கடந்த மார்ச் மாதத்தில் இலங்கை ரூபாவின் பெறுமான மதிப்பீடு மேலும் குறை வடைந்துள்ளதான தகவலை இலங்கை மத்திய வங்கி வெளிப்படுத்தியுள்ளது.

அமெரிக்க டொலரின் பெறுமானத்துடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கை ரூபாவின் பெறுமதியானது 3.8 வீதத்தால் குறைந்திருந்தது எனவும், 2016 ஆம் ஆண்டின் இறுதிக் காலப்பகுதி முதல் கடந்த மார்ச் மாதம் வரை அதன் மதிப்பு என்பது மேலும் 1.2 வீதத்தால் குறைவடைந்துள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதேவேளை தற்போது அமெரிக்க டொலரொன்றின் பெறுமான மதிப்பீடு இலங்கை ரூபாவில் 151.94 ஆக உள்ளது. தவிர யூரோவுக்கு 3.2 வீதமும், ஸ்டேர்லிங் பவுணுக்கு 2.8 வீதமும், ஜப்பானிய யென்னுக்கு 5.5 வீதமும், கனேடிய டொலருக்கு 1.9 வீதமும், ஆவுஸ்திரேலிய டொலருக்கு 6.1 வீதமும், இந்திய ரூபாவுக்கு 4.8 வீதமும் என்பதான விகிதாசாரத்தில் இலங்கை ரூபாவின் மதிப்பு குறைவடைந்திருப்பதாக சொல்லப்படுகிறது.

மேலும் இந்த நிலைமைகள் மேலும் தீவிரமடையலாம் எனவும் 2016ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருமானம் 2.2 வீதத்தால் குறைவடைந்து ஆயிரத்து 310 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருப்பதாகவும் மத்தியவங்கியின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

# பேர்ப்பச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் வியாபார நடவடிக்கைகள் இடைநிறுத்தம்

பேர்ப்பச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் வியாபார மற்றும் முதனிலை வணிக நடவடிக்கைகளை இடைநிறுத்தம் செய்ய மத்திய வங்கியின் நிதிச் சபை தீர்மானித்துள்ளதான தகவல் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம், உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழான நியதிகள் மற்றும் நிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு கடந்த 6 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் பேர்ப்பச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் வணிக நடவடிக்கைளை மத்திய வங்கி இடைநிறுத்தியுள்ளது.

இதன்பிரகாரம் ஆறு மாதங்களுக்கு இந்தத் தீர்மானம் நடைமுறையில் இருக்குமென இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளதுடன் இந்த ஒழுங்கு முறைப்படுத்தல் நடவடிக்கையானது சந்தையில் தாக்கத்தை ஏற்படுத்தாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் விதமாக மத்திய வங்கி தேவையான வழிமுறைகளை கையாளவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

பேர்ப்பச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் வாடிக்கையாளர்களினதும், இணைத் தரப்பினர்களதும் நல உரித்துகளை சரியான விதத்தில் கையாள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் இலங்கை மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது.

Perpetual Treasuries Limited


CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 212221455

7/7/2017 www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டெண் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | 23.16 | 6,737.50 | 6,714.34 |
| S&P SL20 | 3.49 | 3,908.94 | 3,905.45 |
| வியாபாரப்புரள்வு | | 937,434,620 | 535,902,368 |
| உள்நாடு:- கொள்வனவு | | 383,960,960 | 387,115,936 |
| விற்பனை | | 563,949,060 | 445,188,928 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 553,473,660 | 148,786,432 |
| விற்பனை | | 373,485,568 | 90,713,432 |




| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| லயன் பிறெவெரி சிலோன் | LION.N | 445.00 | 346,694 | 151,852,672 |
| சிலோன் பெவெரேஜ் கோல்டிங்ஸ் | BREW.N | 600.00 | 239,485 | 1,436,910 |
| றிச்சட் பீரிஸ் அன் கம்பனி | RICH.N | 12.50 | 10,767,315 | 132,668,161 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 178.00 | 574,262 | 102,451,694 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 238.00 | 165,458 | 39,461,371 |
| டோக்கியோ சிமேன் | TKYO.X | 70.00 | 406,876 | 28,221,786 |
| சுவிஸ் டெக் | PARQ.N | 78.50 | 337,295 | 26,153,700 |
| தன்கொடுவா போர்ஸலைன் | DPL.N | 9.70 | 2,508,523 | 23,675,634 |
| ப்ரவுண்ஸ் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் | BIL.N | 3.40 | 5,727,957 | 19,476,869 |
| லங்கா வோல் டையில் | LWL.N | 115.00 | 219,801 | 19,308,929 |

- பங்குலாபம் -

ஏசியன் அசற் பைனான்ஸ் - ரூபா 0:07 சதம்
பிம்புத்து பைனான்ஸ் - ரூபா. 1:00
டோக்கியோ சிமேன் - ரூபா. 1:87

| சந்தைக் குறிகாட்டிகள் | |
|---|---|
| கம்பனிகள் | 296 |
| பரிமாற்றத்தில் | 244 |
| விலை உழைப்பு | 11.5 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளை | 2.6 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆப்கானிஸ்தான் இராணுவமும் அமெரிக்க இராணுவமும் இணைந்து நேற்றுமுன்தினம் கூட்டுப் போர்ப் பயிற்சியை நடத்தின. (ம)

# பாக். லொறி விபத்தில் 55 லட்சம் டொலர்கள் இழப்பீடுவழங்கஉத்தரவு

இஸ்லாமபாத், ஜூலை 8

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் 209 உயிர்களைப் பறித்த எரி பொருள் லொறி விபத்துக்கான இழப்பீடாக 55 லட்சம் டொலர்களை வழங்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் கராச்சி நகரில் இருந்து லாகூர் நோக்கி கடந்த மாதம் 25ஆம் திகதி சுமார் 25 ஆயிரம் லீற்றர் பெட்ரோலை ஏற்றிவந்த லொறி, பஞ்சாப் மாகாணத்தின் பஹவல்பூர் நகர் அருகே கவிழ்ந்து விபத்துக் குள்ளானது.

லொறியில் இருந்து புரண்டு ஓடிய பெற்றோலை அள்ளுவதற்காக கிராம மக்கள் முண்டியடித்தனர். திடீரென தீ விபத்து ஏற்பட்டதில் அதில் சிக்கி 209 பேர் உயிரிழந்தனர். இந்த விபத்துக்கு இழப்பீடாக இலங்கை மதிப் பில் சுமார் 55 லட்சம் டொலர்களை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ம)



# போலந்தில் ட்ரம்ப்

வார்சவ், ஜூலை 8

அமெரிக்க அதிபர் ட்ரம்ப், தற்போது போலந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

அமெரிக்க அதிபராகப் பொறுப்Nபுற்ற பின்னர் ட்ரம்ப் மேற்கொண்ட ஐந்தாவது பயணமாக இது அமைந்தது. முன்னதாக சவூதி அரேபியா, இஸ்ரேல், ஜேர்மனி, இத்தாலி (உரோம்) ஆகிய நாடுகளுக்கு ட்ரம்ப் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். தற்போது அவர் போலந்துக் குப் பயணம் மேற்கொண்டுள்ளார். ட்ரம்பின் பயணத்துக்கு எதிராகப் போலந்தில் சில ஆர்ப்பாட்டங்கள் நேற்று இடம்பெற்றன என்று பன் னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இந்தப் பய ணத்தின் மூலம் அமெரிக்கா - போலந்து ஆகியவற்றுக்கு இடையே இராணுவ ஒப் பந்தங்கள் கைச்சாத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)






# 'நரகத்துக்கு வரவேற்
# ஜி-20 மாநாட்டில் ஆர்

- ஒரு லட்சம் பேர் கலந்துகொண்டனர்
- உலகத் தலைவர்களுக்கு எதிர்ப்பு
- ஆர்ப்பாட்டம் கலவரமாக மாறியது



பெர்லின், ஜூலை 8

ஜெர்மனியின் ஹம்பேர்க் நகரில் நேற்று ஆரம்ப மான ஜி20 மாநாட்டுக்கு எதிராகவும், மாநாட்டில் பங்குபற்ற வந்திருந்த உலகத் தலைவர்களுக்கு எதிராகவும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இணைந்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். 'நரகத்துக்கு வரவேற்கிறோம்' உள்ளிட்ட வாசகங்கள் எழுதிய பதாகைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர்.

இந்த ஜி20 மாநாட்டில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், துருக்கி அதிபர் தையீப் எர்டகன், இந்தியத் தலைமை அமைச்சர் மோடி உள்பட பலநாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

உலக தலைவர்கள் ஒன்று கூடுவதால் ஹம்பேர்க் நகரம் பலத்த பாதுகாப்பு வளையத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த நிலையில், மாநாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒரு லட்சம் பேர் வரையிலான முதலாளித்துவ கொள்கை எதிர்ப்பாளர்கள் இணைந்து ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். இதனை யடுத்து, அங்கு பாதுகாப்புப்பணியிலிருந்தபொலிஸார் போராட்டக்காரர்களைக் கலைந்து செல்லும் படி எச் சரித்தனர். ஆனால், போராட்டக்காரர்கள் அசைந்து கொடுக்காததால், பொலிஸாருக்கும் அவர்களுக்கும் இடையே மோதல் வெடித்தது. அப்போது, பொலி ஸார் மீது தண்ணீர்ப் போத்தல்கள் மற்றும் செங்கற் கள் வீசப்பட்டன. ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்ட இடத்தில் இருந்த வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

நிலைமைகட்டுக்குள்அடங் காது சென்றதை அடுத்து கலகமடக்கும் பொலி ஸார் வரவழைக்கப்பட்ட னர். பின்னர், கண்ணீர் புகைக் குண்டுகள் வீசி ஒரு வழியாக போராட் டத்தை கலவரத் தடுப்பு பொலிஸார் கட்டுக்குள் கொண்டுவந்தனர். இதில், பலர் காயமடைந்து மருத் துவமனையில் சேர்க்கப் பட்டனர். குறைவான எண்ணிக்கையினரே போராட்டத்தில் ஈடுபட்ட னர் என்று அரசு சமாளித் தாலும், சுமார் ஒரு லட் சம் பேர் இதில் கலந்து கொண்டனர் என்று ஜேர் மனிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



# வடகொரியாவுக்கு எதிரான

வடகொரியா மீது புதிய பொரு ளாதாரத் தடை விதிக்கும் தீர்மா னத்துக்கு ரஷ்யா எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன், அந்தத் தீர்மானத்தை நிறைவேற்று வதற்குத்தடையாகவும்இருக்கி றது என்று பன்னாட்டு ஊட கங்கள் செய்தி வெளியிட்டன. வடகொரியாவின் புதிய ஏவு கணைச் சோதனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐ.நா. பாதுகாப்புச் சபை நேற்று முன் தினம் கூடியது. இதில் வடகொரியா மீது புதிய பொரு ளாதாரத் தடைகள் மற்றும் வடகொரியா மீது ராணுவ நடவடிக்கையை மேற்கொள் ளுதல் உள்ளிட்ட கோரிக்கை களை அமெரிக்கா முன்வைத் தது. 15 நாடுகள் பங்கேற்ற இந்தக்கூட்டத்தில் அமெரிக்கா சார்பில் வெளியிடப்பட்ட இந்த அறிக்கைக்கு சில நாடு கள் ஆதரவு தெரிவித்துள் ளன. அமெரிக்காவின் இந் தக் கோரிக்கை குறித்து நடந்த விவாதத்தின் போது, வடகொரியாவின் இத்த கைய செயலுக்கு எதிராக குறிப்பிடத்தக்க நடவடிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிறோம்'
ப்பாட்டம்





# பெற்றோல், டீசல் வாகனத்துக்கு தடை விதிக்க மக்ரோன் திட்டம்

பரிஸ், ஜூலை 8

சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைக்கும் விதமாக எதிர்வரும் 2040ஆம் ஆண்டு முதல் பெட்ரோல், டீசல் வாகனங்களுக்குத் தடை விதிக்கும் வகையில் செயற்பட பிரான்ஸ் அதிபர் இம்மானுவல் மக்ரோன் திட்டமிட்டுள்ளார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

பெட்ரோல், டீசல் உள்ளிட்ட சுற்றுச்சூழல்களை மாசுபடுத்தும் வாகனங்களைப் படிப்படியாகக் குறைத்து, மின்சாரத்தில் இயங்கும்வாகனங்களின்பயன்பாட்டை அதிகரிக்கும் விதமாக இந்த நடவடிக்கையைப் பிரான்ஸ் மேற்கொள்ளவுள்ளது.

தற்போதைய நிலவரப்படி மொத்த வாகனப் பயன்பாட்டில் வெறும் 1.2 சதவிகிதம் அளவுக்கே அநத நாட்டில் மின்சார வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், எதிர்கால சந்ததியினரின் நலன் கருதி, கரியமில வாயுக்களை வெளியிடும் வாகனங்களை 2040ஆம் ஆண்டிலிருந்து தடை செய்ய முடிவெடுத்துள்ளதாக அந்நாட்டின் சூழலியல் துறை மந்திரி நிக்கோலஸ் தெரிவித்துள்ளார்.

உலக வெப்பமயமாதலுக்கு எதிரான திட்டங்களை கடும் முனைப்புடன் மேற்கொண்டு வரும் நாடாக பிரான்ஸே உள்ளது. இது வரை அந்த நாடு பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. இந்த நிலையில் மிகவும் முக்கிய மைல்கல்லாக இந்த வாகனத் தடை வந்தமைந் துள்ளது. (ம)






தைவானில், தாய்பாவில் உள்ள தைப்பி மிருகக்காட்சிசாலையில் உள்ள யுவான் ஜாய் என்ற பண்டா நேற்றுத் தனது பிறந்த நாளைக் கொண்டாடியுள்ளது. பழங்கள் மூலம் தயாரிக்கப்பட்ட பிறந்த நாள் கேக்கை யுவான் ஆர்வத்துடன் உண்ணும் ஒளிப்படம் பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸால் வெளியிடப்பட்டது. (ம)

# மாராவி மீட்கப்படும்; டுடேர்தே தெரிவிப்பு

மணிலா, ஜூலை 8

பிலிப்பைன்ஸின் மாராவி தீவு விரைவில் மீட்கப்படும் என்று அந்த நாட்டின் அதிபர் றொட்றிக்கோ டுடேர்தே தெரிவித்தார்.

பிரிப்பைன்ஸில் உள்ள ஓர் தனித்தீவான மாராவி கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பின் பிடிக்குள் விழுந்தது. தீவை மீட்கும் போர் தற்போது நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் ஆயுததாரிகளுக்கு எதிராக மிகவும் வலிமையான கருத்துக்களை முன்வைத்துள்ளார் டுடேர்தே.

"மாரவியில் உள்ள அத்தனை ஆயுததாரிகளும் சாவை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றனர். அவர்கள் உயிருடன் பிடிபட்டால் மிகக்கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் " என்று டுடேர்தே மேலும் தெரிவித்தார்.

பிலிப்பைன்ஸின் கடல் பரப்பில் வைத்து கடந்த வருடம் ஜூன் மாதம் வியட்நாம் மாலுமிகள் ஆறு பேர் கடத்தப்பட்டனர். அவர்களில் இருவரின் தலை துண்டிக்கப்பட்ட சடலங்கள் அண்மையில் மீட்கப்பட்டன. இதற்கும் டுடெர்தே கடும் கண்டனத்தைத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)




# தென்கொரியா அமெரிக்கா மற்றுமொரு போர்ப் பயிற்சி

சியோல், ஜூலை 8

வடகொரியாவின் ஏவுகணைச் சோதனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவுக்கும் விதமாக அமெரிக்காவும், தென்கொரியாவும் இணைந்து நேற்றும் கூட்டுப் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டன.

பன்னாட்டு விதிமுறைகளைப் பின்பற்றாமல், வடகொரியா தன்னிச்சையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஏவுகணை சோதனைகள், அணு ஆயுதச் சோதனைகளை நடத்தி வருவதற்கு ஐ.நா., அமெரிக்கா உட்பட பன்னாட்டுச் சமூகம் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. எனினும், வடகொரியா தொடர்ந்து பல்வேறு சோதனைகளை நடத்தி வருகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை கண்டம்விட்டுக் கண்டம் பாயும் அதிநவீன ஏவுகணையை வடகொரியா வெற்றிகரமாக சோதனை நடத்தியது. அந்த ஏவுகணை அணு ஆயுதங்களைச் சுமந்து சென்று அமெரிக்காவின் எந்தப் பாகத்தையும் (குறிப்பாக அலாஸ்கா வரை) தாக்கும் வல்லமை படைத்த தாக கூறப்படுகிறது. இதை அமெரிக்காவுக்கு பரிசாக அளிப்பதாக வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் கிண்டலாகத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் வடகொரியாவின் அச்சுறுத்தல்களை எந்த நேரத்திலும் எதிர்கொள்ள தயாராக இருப்பதை வெளிப்படுத்தும் வகையில், தென்கொரியாவும் நேற்று ஏவுகணைச் சோதனைகளை நடத்தியது. தென்கொரியாவின் கிழக்குக் கடல் பகுதியில் போர்க் கப்பல்கள், போர் விமானங்கள் மூலம் நேற்று மிகப் பெரியதும் நீண்டதுமான ஒத்திகை நடைபெற்றது.

இந்த ஒத்திகையில் 15 போர்க் கப்பல்கள், உலங்குவானூர்திகள், போர் விமானங்கள் என்பவை ஈடுபடுத்தப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



# ா நகர்வுகளுக்கு ரஷ்யா முட்டுக்கட்டை

ந்துள்ளன. அமெரிக்கா
் கோரிக்கை குறித்து
த்தின் போது, வடகொரி
கைய செயலுக்கு எதிராக
க நடவடிக்கைகள் எடுக்
று ஐ.நா. தெரிவித்தது.
ந்த அறிவிப்புக்கு ரஷ்யா
 தெரிவித்திருப்பதுடன்,
சயற்படுத்தத் தடையாக
வருகிறது.

வடகொரியா மீதான இந்தத் தடைகள் மேலும் வேண்டத்தகாத விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் ரஷ்யா தெரிவித்துள்ளது. இதுதொடர்பில்ஐக்கிய நாடுகள் சபைக்கான ரஷ்யத் தூதுவர் சப்ரான்கோவ், வடகொரியா மீதான புதிய பொருளாதாரத் தடையை எதிர்க்கிறோம். அந்த நாட்டின் மீதான ராணுவ நடவடிக்கைகளை அனுமதிக்க முடியாது என்று தெரிவித்துள்ளார். (ம)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அம்பிகையின் தேர்வடம் பிடித்து அருள்வரம் பெறுவோம் வாரீர்

■ விசு. இராசநாயகம்

வட இலங்கையில் வரலாற்றுச் சிறப்பும், நாற்புறமும் கடலால் சூழப்பட்ட அமைவிடச் சிறப்பும், சப்த தீவுகளில் மணிபல்லவம் என்று அழைக்கப்படும் தனிச் சிறப்பும் கொண்டமைந்த அழகிய நயினாதீவின் அலைகடல் நடுவே வீற்றிருந்து அருளாட்சி புரிகின்றாள் அன்னை நாகபூசணித் தாய். சக்தி பீடங்கள் அறுபத்தி நான்கினுள் புவனேஸ்வரி பீடம் எனும் தனித்துவம் கொண்டும் எழுந்தருளி அலங்காரம் பெறுகிறாள். அடியார்களது நோய் பிணிகளை நீக்கி குழந்தைச் செல்வம் அளிக்கின்ற பேரருள் சக்தியாக அன்னை விளங்குகிறாள். நல்லன எல்லாம் தருகிறாள். சர்வமதத்தவர்களையும் தன்பால் அழைத்திருக்கிறாள். இந்து, பௌத்தர், இஸ்லாமியர், கிறிஸ்தவர்கள் என அனைவருமே அன்னையை வணங்கி திருவழிபாடாற்றிச் செல்கின்றனர்.

**திருத்தேர்**

திருத்தேர் அம்பிகையின் சரித்திர வரலாறுகளை பிரதிவிம்பம் செய்யும் வகையில் மிகச் சிறப்பான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக போர்த்துக்கீசர் ஆலயத்தை இடித்த போது அடியவர்கள் அம்மனை மேற்குக் கடற்கரை பக்கமாகவுள்ள ஆலய மரப்பொந்தினுள் மறைத்து வைத்த தன்மைகளும், அம்பாளின் தேர் கடலினுள் உருண்டு செல்லும் போதும் நயினர் பட்டர் என்னும் அந்தணர் அம்பாளுக்கு பூசை செய்தது போன்ற காட்சிகளும் தேரில் உயிரோட்டமாகச் செதுக்கப்பட்டுள்ளன. அம்பிகை அருளின் மகத்துவத்தை நினைவுறுத்திக் கொண்டிருக்கின்றன. தேர் வடிவமைக்கப்பட்டு அறுபது ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு ஆலய அறங்காவலர் சபையினர் இன்றைதினம் விசேட பூசை வழிபாடுகளை ஏற்பாடு செய்துள்ளனர்.

**பெயர் சூட்டல்**

நயினாதீவுக்குச் சமீபமாக அனலைதீவு என்றும் ஓர் அழகிய தீவு உள்ளது. அதன் தெற்குப் பகுதியில் வரலாற்றுடன் கூடிய நாகதம்பிரான் ஆலயம் அமைந்துள்ளது. அந்த ஆலயப் பகுதியில் இருந்து நாகபாம்பு பூக் கொண்டு வந்து அம்பிகையை வழிபாடு செய்ததாக கூறப்படுகிறது. அதன்படியே நாகம் பூக் கொண்டு வந்து அம்பிகையை வழிபாடு செய்த காரணம் கொண்டு நாகபூசணி எனும் பெயர் கூறப்பட்டு வருவதாக வரலாறுகள் சான்று பகர்கின்றன.

**பாம்பு சுற்றிய கல், கருடன் கல் வரலாறு**

ஆலய வட கடல் பகுதியில் ஆலயத்துக்கு அண்மையாக இரு பெரிய கற்கள் காணப்படுகின்றன. அதில் ஒன்று பாம்பு சுற்றிய கல் எனவும் மற்றையது கருடன் கல் எனவும் அழைக்கப்படுகின்றது. நாகபாம்பு அனலைதீவுப் பகுதியில் இருந்து கடல் வழியாகப் பூக் கொண்டு வந்த போது கருடன் நாகபாம்பை வழிமறித்ததாகவும் நாகபாம்பு கல்லில் சுற்றிக் கொண்டதாகவும் அந்த சந்தர்ப்பத்திலே அருகில் இருந்த கல்லில் கருடன் அமர்ந்து கொண்டு நாகத்தைச் செல்லவிடாது வழி மறித்ததாகவும் கதைகள் கூறப்படுகின்றன. அதேவேளை கடல் வழியாக பயணித்த செட்டியார் இந்தக் காட்சிகளைக் கண்டு கொண்டு அம்மனை நோக்கி வேண்டுதல் செய்ததாகவும் கருடன் அவ்விடம் விட்டுப் பறந்து சென்றதாகவும் வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. இந்த இரு கற்களும் ஆலய புராதன சின்னங்களாக போற்றிப் பாதுகாக்கப்படுவதுடன் ஆலய உற்சவத்தின் பதினோராம் திருவிழா அன்று சிறப்பு வழிபாடுகள் இடம்பெறுகின்றன.

**வழிபாடு**

இந்த ஆலயத்தில் நித்திய அன்னதானப் பணிகள் இடம்பெறுகின்றன. பல்வேறு இடங்களில் இருந்தும் ஆலயம் நோக்கி வருகை தரும் அடியவர்கள் தங்கியிருந்து நாக தோஷ நிவர்த்தி வழிபாடுகளைச் செய்து அம்பாளின் திருவருளைப் பெற்றுச் செல்கின்ற னர். பௌர்ணமி தினங்களில் 'ஸ்ரீ சக்தர' பூசை நடை பெறுகிறது. திருமணமாகாத பெண்கள் திருமண வாழ்வு வேண்டியும், திருமணமான பெண்கள் தாலிபாக்கியம் நிலைக்கவும் அம்பாளை வேண்டிப் பணிந்து வழிபாடு செய்கின்றனர்.

**திருத்தொண்டு**

ஆலய திருவிழாக் காலங்களில் அமுதசுரபி அன்னதான சபையினர் இரவு, பகல் என நல் அன்னதான சேவையை வழங்கி வருகின்றனர். ஆலய தென்கிழக்குப் பகுதியில் அமையப்பெற்றுள்ள தம்பையா தாக சாந்தி நிலையம் சிறப்பான ஆகார சேவை வழங்கி வருவதுடன் அபிவிருத்திச் சபையும் ஆலய முன் வாயிலில் தாக சாந்தி சேவை வழங்கி வருகிறது.

சாரணர் படை, தொண்டர் படை, சென்ஜோன் அம்புலன்ஸ் சேவையினர், கடல் பாதுகாப்பு சேவையினர் இணைந்து அடியவர்களுக்கு நற் சேவையை வழங்கி வருகின்றனர்.

இன்றாகி, ஏவிளம்பி வருடத்தின் மகோற்சவம் கண்டு இனிதே தாய்மையின் உருவகம் கொண்டு தேரில் எழுந்தருளி அடியவர்களுக்கு காட்சி தர வருகிறாள். தீவினைகள் அகன்று அமைதியுள் அருள் நயம் சுரந்திட சித்தமுறுகிறாள். அம்பிகையின் தேர்வடம் பிடித்து அருள்வரம் பெறுவோம் வாரீர்.

*தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வு அறியா*
*மனம் மதரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா*
*இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே*
*கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக் கண்களே...!*

---

# 'வாழ்நாள் சாதனையாளர்' விருது காணும் மூத்த ஊடகவியலாளர் கலாபூஷணம்

## ஏ.எல்.எம் சலீம்

■ பி.எம்.எம்.ஏ.காதர்

தனது வாழ்நாளை ஊடகத்துறைக்காக அர்ப்பணித்த இலங்கையின் மூத்த ஊடகவியலாளர்களுள் ஒருவரான நிந்தவூரைச் சேர்ந்த கலாபூஷணம் ஏ.எல்.எம். சலீம் முழு நேர ஊடகவியலாளராக ஐம்பது வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளமை பாரட்டுதலுக்குரியது. அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனம் அவருடைய சேவைக்கான கௌரவமாக 'வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்கி பாராட்டிக் கௌரவிக்கவுள்ளது.

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் தலைவர் கலாபூஷணம் மீரா எஸ்.,ஸ்ஸடீன் தலைமையில் எதிர்வரும் 09 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நிந்தவூர் பிரதேச சபை மண்டபத்தில் இந்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இதன் போது 'பொன் விழா காணும் ஏ.எல்.எம்.சலீம்' என்ற நினைவு மலரும் வெளியிடப்படவுள்ளது.

**பிறப்பு**

மீன் பாடும் தேனாடாம் மட்டுநகரின் தெற்கே அமைந்துள்ள நிந்தவூரில் சாலிஹூ லெப்பை பரிகாரி ஆதம்லெப்பை மற்றும் சாஹூல் ஹமீது லெப்பை ஆமினா உம்மா தம்பதியினரின் மூன்றாவது புதல்வனாகப் பிறந்தார்.

**கல்வி**

முகம்மது சலீம் நிந்தவூர் ஜூனியர் பாடசாலையில் தனது ஆரம்பக்கல்வியைக் கற்றார். கலைத்துறையில் மிகுந்த ஆர்வம் கொண்டவராக விளங்கிய சலீம் பாடசாலைக் காலத்திலே மாணவர் மன்றங்களில் அங்கம் வகித்ததோடு கலைநிகழ்வுகளிலும் பங்குகெடுத்துக்கொண்டார். குறிப்பாக சிறுகதை, நாடகம், கவிதை என்பனவற்றை எழுத்துருவாக்கியும், அவற்றை அரங்கேற்றியும் பலரது பாராட்டுதல்களைப் பெற்றுக் கொண்டார். இளமைக்காலத்தில் பாடசாலையின் சக நண்பர்களுடன் இணைந்து கொண்டு 'பூங்கா எழுத்தாளர் மன்றம்' எனும் அமைப்பை உருவாக்கினார். அதன் மூலம் "தென்றல்" எனும் கையெழுத்துச் சஞ்சிகையை முன்னின்று வெளியிட்டார்.

**ஊடகத்துறை**

கலை, இலக்கிய எழுத்துத் துறையில ஆர்வம் உடையவராகச் செயற்பட்டு வந்த சலீமின் மூத்த சகோதரரும், ஓய்வு பெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளரும், மூத்த ஊடகவியலாளருமான அல் ஹாஜ். ஏ.எல்.எம். அமீனின் வழிகாட்டுதலுடன் 1966 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஊடகத்துறையில் காலடி பதித்தார். அக்காலத்தில் இந்தப் பயணத்துக்கான களத்தை அமைத்துக் கொடுத்தது இலங்கையின் முன்னணி தமிழ் நாளிதழான வீரகேசரி என்பதை நன்றியுடன் சலீம் நினைவு கூர்ந்தார். அதே வேளை இலங்கையின் தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் என வர்ணிக்கப்படும் அமரர் எஸ். ரீ.சிவநாயகம் போன்ற முன்னணி ஊடகவியலாளர்களால் வளம்படுத்தப்பட்டு ஊடகத்துறையின் காவலனாகத் திகழும் சலீம் கலை இலக்கியத்தில் இலை[illegible] திகழ்ந்த பலரையும் [illegible] சிறந்த [illegible]லாளர்களாக வளர்த்தெடுத்த பெருமைக்குரியவராவார்.

முஸ்லிம் சமூகத்துக்கு முகவரியைத் தேடிக் கொடுத்த மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபின் தென்கிழக்கு அலகுக் கோரிக்கைக்கு வலுச்சேர்க்கும் வகையில் இவரது சிந்தனை கொண்டு உருவானதே தென்கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கம் ஆகும். இதன் மூலம் தமிழ் முஸ்லிம் ஊடகவியலாளர்களை ஒன்றிணைத்து இனங்களிடையேயான புரிந்துணர்வை கட்டியெழுப்புவதில் அக்கறையுடன் செயலாற்றினார்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் தமிழ் தேசிய நாளிதழான உதயன் உட்பட தமிழ் நாளிதழ்களான வீரகேசரி, சுதந்திரன், தினபதி, சிந்தாமணி, சூடாமணி, நவமணி, சுடரொளி, தினகரன், தினக்கதிர் மற்றும் பலவார நாளிதழ்களுக்கும், வெளிநாட்டு இணையத்தளங்களுக்கும் செய்திகளை வழங்கி வருகின்றார்.

**விருதுகளும் பாராட்டுக்களும்**

2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் 9ஆம் திகதி வரை தம்புள்ளையில் லண்டன் பி.பி.சி உலக சேவையினால் நடத்தப்பட்ட ஊடகப் பயிற்சியில் கலந்து கொண்டு சூழல் செயற்பாடாக இடம்பெற்ற சுற்றாடல் பாதிப்புக் குறித்து மூன்று பத்திரிகைகளில் தமது கருத்துக்கள் வெளிப்படுத்[illegible] பணியாற்றிய பத்திரிகையே முதலி[illegible] பெற்றுக்கொண்டது. இதற்காக பி.பி.சி உலக சேவையின் ஆசிரிய பீடப் பணிப்பாளர் தி.ரிச்சட் கற்லோவ் இன் பாராட்டுதலை பெற்றுக்கொண்டார்.



அதேபோன்று 2008 ஆம் ஆண்டு இலக்கியப் பணிக்காக இலங்கை அரசின் கலாச்சார அமைச்சினால் வழங்கப்படும் உயர்விருதான 'கலா பூசஷ ணம்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். கிழக்கு மாகாண முதலமைச்சராக சிவனேசத்துரை சந்திரகாந்தன் பணியாற்றிய காலப் பகுதியில் மாகாண மட்டத்தில் வழங்கப்படும் உயர்விருதான 'முதலமைச்சர்விருது' வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

யாழ் உதயன் பத்திரிகையின் 25 வதுவருடகாலபூர்த்தியை முன்னிட்டு கொண்டாடப்பட்ட வெள்ளி விழா நிகழ்வின் போதும் ஊடகத்துறைக்காக ஆற்றிய சேவையை மதித்து விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அம்பாறைமாவட்ட கரையோரசெய்தியாளர் சங்கம், சிறிலங்கா முஸ்லிம் மீடியா போரம், இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், நிந்தவூர் பிரதேச சபை, கல்முனை மாநகர சபை, கல்முனை லயன்ஸ் கழகம், கல்முனை ரோட்டரி கழகம், பாண்டிருப்பு அறநெறிப்பாடசாலை, மட்டக்களப்பு சரீரம் அமைப்பு, நாவிதன்வெளிப் பிரதேச செயலகம், 'லக்ஸ்டோ' மீடியா நெற்வேக் மெஸ்ரோ அமைப்பு முஸ்லிம் லீக் வாலிப முன்னணி (அம்பாறை மாவட்டம்) போன்ற பல்வேறு பொதுநல சமூக அமைப்புக்களால் பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

மருதமுனை மண்ணில் 1966 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 02 ஆம் திகதி கொண்டாடப்பட்ட முதலாவது இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாட்டின் 50 ஆவது வருட நிறைவினை வரலாற்றில் பதிக்கும் பொன் விழா நிகழ்வின் போது ஊடகத்துறைக்காக அர்ப்பணிப்புடன் தடம்பதித்துசெய்துகொண்ட ஊடகப் பணியை வாழ்த்திப் பாராட்டி சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் பொன் விழா விருது வழங்கி கௌரவித்தார்.

அந்த வகையில் ஊடகத்துறைக்காக அரும்பணியாற்றிவந்த சலீமின் வாழ்வில் ஒவ்வொரு கட்டங்களிலும் அவரது துணைவியார் டாக்டர் திருமதி.ஜே.சலீம் ஆற்றியுள்ள பங்களிப்பும், ஒத்துழைப்பும் அளப்பரியதாகும். இவர்களது குழந்தைகளான அக்கீலா, அக்கீல் ஆகியோர் தகவல் தொழில் நுட்பத் துறையில் உயர் பட்டங்கள் பெற்று சமூகத்தில் முன்னிலை பெற்றிருக்கின்றனர்.

இந்தச்சாதனைவீரர் இன்னும் நீண்ட ஆயுளோடு பல ஆண்டுகள் வாழ்ந்து ஊடகத்துறைக்கு பெருமை சேர்க்க இறைவனைப் பிரார்த்திப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2017 ராகு, கேது பெயர்ச்சிப் பலன்கள்



## விருச்சிகம்

விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை

பெருந்தன்மையான குணமுள்ளவர்களே! உங்கள் ராசிக்கு 3இல் கேதுவும், 9இல் ராகுவும் ஜூலை 27 முதல் 13.2.19 வரை சஞ்சரிக்க உள்ளார்கள்.

**ராகுவின் பலன்கள்:** உங்கள் ராசிக்கு 9ஆம் இடத்தில் அமரும் ராகு, எதையும் சாதிக்கும் தன்னம்பிக்கையைத் தருவார். செயற்கரிய காரியங்களையும் செய்து முடிப்பீர்கள். வருமானத்தை உயர்த்த திட்டமிடுவீர்கள். வீடு கட்ட, வாங்க வங்கிக் கடனுதவி கிடைக்கும். ஆனால், 9இல் இருக்கும் ராகுவால், தந்தையின் ஆரோக்கியம் பாதிக்கப்படக் கூடும்.

உங்களின் அஷ்டமாதிபதி மற்றும் லாபாதிபதியுமான புதனின் ஆயில்யம் நட்சத்திரத்தில் 27.7.17 முதல் 4.4.18 வரை ராகு பகவான் செல்வதால், வெளிநாட்டில் வேலை கிடைக்கும். உறவினர்கள் வீட்டு சுப நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள். மற்றவர்களுக்காக பிணைக் கையெழுத்து போட வேண்டாம். 5.4.18 முதல் 10.12.18 வரை உங்களின் திரிதியாதிபதியும் சுகாதிபதியுமான சனி பகவானின் பூச நட்சத்திரத்தில் ராகு பகவான் செல்வதால், புதிதாக வீட்டு மனை வாங்குவீர்கள். ஆன்மிகப் பெரியவர்களின் உதவி கிடைக்கும். உங்களின் தனஸ்தானாதிபதியும் பூர்வ புண்ணியாதிபதியுமான குரு பகவானின் புனர்பூசம் நட்சத்திரம் 4ஆம் பாதம் கடக ராசியில் 11.12.18 முதல் 13.2.19 வரை ராகு பகவான் செல்வதால், குழந்தைப் பாக்கியம் உண்டாகும். பணப்புழக்கம் அதிகரிக்கும். மாணவ மாணவியர் அன்றைய பாடங்களை அன்றே நன்றாகப் படித்து, கிரகித்துக்கொள்வது அவசியம். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். வியாபார நுணுக்கங்களை அறிந்துகொண்டு செயற்படுவீர்கள். பழைய சரக்குகள் விற்றுத் தீரும். அனுபவமிக்க வேலையாட்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். தள்ளிப்போன பதவி உயர்வு கிடைக்கும். வேலைக்கு முயல்பவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். கலைத்துறை யினர்களே! படைப்புகளை வெளியிடுவதில் யோசனை எதுவும் வேண்டாம்.

**கேதுவின் பலன்கள்:** உங்கள் ராசிக்கு தைரியஸ்தானமான 3ஆம் இடத்தில் கேது அமர்வதால், சவால்களில் வெற்றி பெறுவீர்கள். மனவலிமை கூடும். பிரச்சினைகளைச் சமாளிக்கும் சக்தி பிறக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். எதிர்பார்க்கும் உதவிகள் தடையின்றிக் கிடைக்கும். தாயாரின் உடல் ஆரோக்கியம் மேம்படும். சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். குடும்பத்தினருடன் வெளிமாநில புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்றுவருவீர்கள். கௌரவப் பதவிகள் தேடிவரும். இளைய சகோதரர்களால் சில பிரச்னைகள் ஏற்படக்கூடும்.

27.7.17 முதல் 29.11.17 வரை உங்கள் ராசிநாதனும் சஷ்டமாதிபதியுமான செவ்வாயின் அவிட்ட நட்சத்திரம் 1, 2ம் பாதம் மகர ராசியில் கேது பகவான் செல்வதால், தைரியம் அதிகரிக்கும். புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். அலைச்சல் இருந்தாலும் நினைத்ததை முடிப்பீர்கள். சுபச் செலவுகள் அதிகரிக்கும். சொத்துகள் விஷயத்தில் இருக்கும் இழுபறி நிலை மாறும். உங்களின் பாக்கியாதிபதியான சந்திரனின் திருவோண நட்சத்திரத்தில் 30.11.17 முதல் 6.8.18 வரை கேது பகவான் செல்வதால், செயலில் வேகம் கூடும். பணவரவு அதிகரிக்கும். பிரபலங்கள் உதவுவார்கள். பங்குகள் மூலமாகப் பணம் வரும். புதிய ஆடை ஆபரணங்கள் சேரும். ஆனால், தந்தையின் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படுவதுடன், அவருடன் மன வருத்தம் ஏற்பட்டு நீங்கும். 7.8.18 முதல் 13.2.19 வரை உங்களின் ஜீவனாதிபதியான சூரியனின் உத்திராடம் நட்சத்திரம் 2, 3, 4ஆம் பாதம் மகர ராசியில் கேது செல்வதால் செல்வாக்கு கூடும். அரச காரியங்கள் சாதகமாகும். புதிய பதவிகளும் பொறுப்புகளும் தேடி வரும். பழைய வாகனத்தை விற்றுவிட்டு புதிய வாகனம் வாங்குவீர்கள். முக்கியப் பிரமுகர்களின் அறிமுகத்தால் பெரிய நிறுவனங்களின் ஒப்பந்தங்கள் கிடைக்கும். வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள்.

மொத்தத்தில் இந்த ராகு கேது பெயர்ச்சி, புதிய அனுபவங்களைத் தந்து வெற்றிப்பாதைக்கு இட்டுச் செல்வதாக அமையும்.

# வடகொரியாவை கட்டுப்படுத்துமா ஐக்கிய நாடுகள் சபை?

வடகொரியா கண்டம் விட்டுக் கண்டம் தாண்டிச் செல்லும் வகையிலான ஏவுகணைச் சோதனையை நடத்தி முடித்துள்ளது. பெரும் வல்லரசான அமெரிக்காவுக்குச் சவால்விடும் வகையிலேயே வடகொரியா ஏவுகணைச் சோதனையில் ஈடுபட்டமை தெளிவாகத் தெரிகின்றது. இதற்குப் பதிலடி வழங்கும் வகையில் அமெரிக்காவும், தென்கொரியாவும் கூட்டு இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளமை கொரியத் தீபகற்பத்தில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

வடகொரியாவின் ஏவுகணைச் சோதனை தொடர்பாக விவாதிகக்க ஐ.நாவின் பாதுகாப்புச் சபை சிறப்பு கூட்டம் ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. வடகொரியாவில் சர்வாதிகார ஆட்சி இடம்பெற்று வருகின்றது. அந்த நாட்டின் அரச தலைவர் தாம் நினைத்தவாறு ஆட்சியை நடத்துகின்றார். அவரை எதிர்ப்பவர்களுக்குப் பரலோக யாத்திரைக்கான கதவு திறக்கப்பட்டுவிடும். வடகொரியா தனது பிரதான எதிரிகளாக அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளை மனதில் கொண்டு காய்நகர்த்தி வருகின்றது.

வடகொரியாவிடம் அணு ஆயுதங்கள் உள்ளதாகக் கருதப்படுவதால் அதனையொரு ஆபத்தான நாடு என்றே கொள்ள வேண்டியுள்ளது. இதன் காரணமாகவே வல்லரசு நாடுகள் அதற்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வதில் தயக்கம் காட்டி வருகின்றன.

அமெரிக்கா கொரியாமீது நேரடியான தாக்குதல்களை மேற்கொள்ளாமைக்கு இதுவும் முக்கிய காரணமாகும்.

மிகப்பெரிய வல்லரசு நாடுகளான ரஷ்யாவும், சீனாவும் வடகொரியாவுக்கு மறைமுகமான உதவிகளை வழங்கி வருகின்றன. அமெரிக்காவை மட்டம் தட்டுவதே இந்த நாடுகளின் நோக்கமாக இருந்தாலும் அதிலுள்ள ஆபத்தையும் அவை புரிந்து கொள்ள வேண்டும். பாம்புக்குப் பால் வார்த்து வளர்ப்பது ஆபத்தில்தான் முடியும். வடகொரியாவுக்கு வழங்குகின்ற உதவிகளும் அவ்வாறே முடியப் போகின்றன.

இரண்டாவது உலகப்போர் நிறைவடைந்து சுமார் 70 ஆண்டுகளுக்கு மேலாகின்றது. ஜப்பான் நாட்டின் மீது அமெரிக்கா அணுகுண்டுகளை வீசியதால் ஏற்பட்ட பாதிப்புக்கள் இன்னும் கூட அகலாத நிலையிலுள்ளன. அப்போது குறிப்பிட்ட சில நாடுகள் மட்டுமே அணுவாயுதங்களைக் கொண்டிருந்தன. தற்போது பாகிஸ்தான் போன்ற பயங்கரவாதம் தலை தூக்கி நிற்கின்ற நாடுகளிலும் அணுவாயுதங்கள் காணப்படுவதால் உலகம் ஆபத்தின் விளிம்பில் உள்ளது.

ஆகவே ஐ.நா.சபை தீர்க்கமான நடவடிக்கையை மேற்கொள்வதன் மூலமாக வடகொரியாவின் அச்சுறுத்தலுக்கு முடிவு கட்ட முடியும்.




## வரலாற்றில் இன்றைய தினம்

1099-ஜெருசலேமை முற்றுகையிடும் முகமாக 15 ஆயிரம் வரையிலானோரை உள்ளடக்கிய கிறிஸ்தவப் படையினர் நகரைச சுற்றி மார்க்க நடைபவனி ஒன்றை மேற்கொண்டனர்.
1497-போர்த்துக்கேய கடலோடி வாஸ்கொடகாமா தனது முதல் பயணத்தை மேற்கொண்டார் கடல் வழியாக இந்தியாவை அடைந்த முதல் ஐரோப்பியர் ஆனார் இவர்.
1796-அமெரிக்க உள்நாட்டலுவலகள் திணைக்களத்தால் முதலாவது பாஸ்போட் வழங்கப்பட்டது
1800-அமெரிக்காவில் முதன் முதலாக மருத்துவர் பென்ஜமின் வோட்டர் ஹஸினால் அவரது மகனுக்கு சின்னமுத்து நோய்த்தடுப்புக்கான தடுப்பு மருந்து ஏற்பட்டது.
1730-8.7 ரிட்டர் அளவிலான நடுக்கத்தால் ஏற்பட்ட சுனாமி சிலி கரையோரமாக ஆயிரம் கி.மீ. தூரத்துக்கு அழிவை ஏற்படுத்தியது
1876-வெள்ளையின மேலாதிக்கவாதிகளால் தென் கரோலினாவின் ஹம்பேர்க்கில் ஐந்து கறுப்பினத்தவர்கள் கொல்லப்பட்டனர்.
1986-அரசியல் தீர்வு குறித்து நம்பிக்கையே இல்லையென அமிர்தலிங்கம் பேட்டியில் தெரிவிப்பு
1889-த.வோல் ஸ்றீற் ஜேர்னலின் முதலாவது பதிப்பு வெளியிடப்பட்டது
1937-சதபாத் ஒப்பந்தத்தில் துருக்கி, ஈரான், ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் ஒப்பமிடப்பட்டன.
1960-ரஷ்யாவுக்கு மேலாக உளவு பார்க்கும் நோக்கத்துடன் விமானத்தில் பறந்ததாக அமெரிக்க விமானி பிரான்சிஸ் காரி பாவார்ஸ் மீது குற்றம் சுமத்தப்பட்டது.
1966-புரூண்டி அரசர் நாலாம் வம்புட்சா அவரது மகன் இளவரசர் சாள்ஸ் நிடிஷியால் பதவி விலக்கப்பட்டார்
1972-இஸ்ரேலிய மொசாட்டினரால் பலஸ்தீனியர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டார்.
1982-ஈராக்கிய அரசதலைவர் சதாம் ஹூசைனை படுகொலை செய்யும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.
1988-பெங்களூரிலிருந்து கன்னியா குமரிக்குப் பயணித்த ஜலண்ட எக்ஸ்பிரஸ் பெருமன் பாலத்தில் தடம் புரண்டு ஏரியில் வீழ்ந்ததில் 105 பயணிகள் சாவடைய 200 பேர் வரை காயமடைந்தனர்.

## நாளை

**ஆனி - 25**
ஞாயிற்றுக்கிழமை -09.07.2017
திதி:பூரணை மு.ப.10.12 வரை
நட்சத்திரம்: பூராடம் மா.05.48 வரை
சுபநேரம்:08.58-10.28 வரை
ராகுகாலம்:04.28-05.58 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தடைகள் கண்டு அஞ்சாது பயணிக்குமா அரசு?

இலங்கையின் ஆட்சியாளர்கள் பயணிக்கத் தொடங்கியிருக்கும் பாதை குறித்த அச்சங்கள், தீவிரமடையத் தொடங்கியுள்ளன.

அரசியல் சீர்திருத்தங்களை முன்னெடுப்போம், ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்போம், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவோம் எனத் தேர்தல் காலத்தில் வாக்குறுதியளித்து மக்களின் நம்பிக்கையைப்பெற்று அரியணைஏறியவர்கள் அளித்த வாக்குறுதிகள், குறித்த அர்ப்பணிப்புடன் இல்லை என்ற சந்தேகங்கள் வலுப்பெறத் தொடங்கியுள்ளன.

இலங்கையின் சிறுபான்மை சமூகத்தவர்கள் தாங்களும் இந்தத் தேசத்தின் ஒரு பகுதி என பெருமிதம் கொள்ளும் ஒரு சூழலை ஏற்படுத்துவதே இன்றைய காலத்தின் தேவையாக வுள்ளது. சிறுபான்மை மக்கள் நீதி சமத்துவம், மனித உரிமைகள் போன்றவற்றுக்கான உரித்துடையவர்களாவதற்கு இலங்கையின் அரசமைப்பில் மாற்றங்கள் மேற்கொள்ளப் படுவது அவசியம்.

அதிகாரங்கள் உரிய முறையில் பகிரப்படுவதுடன், ஏனைய காத்திரமான சாதகமான அம்சங்களை உள்வாங்கிய புதிய அரசமைப்பொன்று மிகத் தேவையாக உள்ளது.

நல்லாட்சி அரசும் இந்தத் திசையிலேயே பயணிப்பதாக உறுதியளித்திருந்தது.

எனினும், வழமைபோல பேரினவாதத்தின் கர்ச்சனை அதிகமாகத் தொடங்கியவுடன் நல்லாட்சி அரசிடம் நடுக்கம் ஏற்படுவதை உணரமுடிகின்றது.

இலங்கை ஜனாதிபதி பௌத்த மதத்தைச் சேர்ந்த உயர் தலைவர்களைசந்தித்துள்ளதையும் அவர்களுக்கு வழங்கியுள்ள வாக்குறுதிகளையும் சாதாரணமாக எடுத்துவிட முடியாது.

புதிய அரசமைப்பை ஏற்படுத்துவதற்கு எதிராக மகாநாயக்கர்கள் தூக்கியுள்ள போர்க்கொடியால் அரசு மிரண்டு போயுள்ளது என்பதை இந்தச் சந்திப்பு வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கையில் காலத்துக்குக்காலம் இடம்பெற்ற விடயம் இது. சிறுபான்மை மக்களுக்கான உரிமைகள் வழங்கப்படும் சூழ்நிலைகள் உருவாகும் வேளைகளில் பௌத்த பேரினவாதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி நிற்கும் சக்திகள் ஆவேசமடைவதும் அவர்களின் கூக்குரல்களின் காரணமாக அரசியல் தலைவர்கள் பாதை மாறுவதும் இலங்கை தனது அரசியல் வரலாற்றில் பல தடவைகள் சந்தித்த விடயமாக வுள்ளது.

பௌத்த மதத் தலைவர்களின் ஆசியில்லாமல் புதிய முயற்சிகள் இடம்பெறாது என்ற விதத்தில் ஜனாதிபதி வெளியிட்டு கருத்துகள் சிறுபான்மை சமூகத்தை கலக்கமடையச்செய்யக்கூடியவையாக காணப்படுகின்றன.

பௌத்த மதத்தைப் பிரதிநிதித்துவம் செய்பவர்கள் சிறுபான்மை சமூகங்களுக்கு எவற்றையெல்லாம் வழங்குவதை எதிர்ப்பார்கள் என்பது வெளிப்படையான விடயம்.

சிறுபான்மைசமூகத்தவர்களுக்கு அதிகாரப்பகிர்வையோ அல்லது ஏனைய உரிமைகளையோ வழங்குவதை பேரினவாத சக்திகள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

பௌத்த பேரினவாத சக்திகளை தடவிக்கொடுக்கும் போக்கைக் கையாளும் நல்லாட்சி அரசு அவர்களின் எதிர்ப்பை மீறி சிறுபான்மை மக்கள் விடயத்தில் இதய சுத்தியுடன் நடந்துகொள்ளுமா, அதற்கான உறுதிப்பாடு அதனிடம் உள்ளதா என்ற கேள்வி இன்றைய சூழ்நிலையில் இலங்கையின் சிறுபான்மை மக்களின் மனதில் மீண்டும் எழுந்துள்ளது.

# தேவையற்றதாக மாறிவிட்டதா வட மாகாண சபை?

■ இந்துமதி

இந்தியத் தூதுவர் புத்திமதி கூறும் அளவுக்குவடக்கு மாகாண சபையின் ஒற்றுமை சந்தி சிரிக்க வைத்துள்ளது. அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இந்தியத் தூதர் தரன்ஜித்சிங், வடக்கு முதலமைச்சரையும் சந்தித்து உரையாடியுள்ளார். இதன் போதே வடக்கு மாகாண சபையில் ஒற்றுமையாகச் செயற்படுமாறும், அப்போது தான் அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும், வடக்கின் உட்கட்டமைப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தியில் முன்னேற்றத்தைக் காணமுடியுமெனவும், முதலமைச்சருக்கு இந்தியத்தூதுவர் அறிவுரை கூறியுள்ளார்.

ஆனால் தன்னிச்சையாகச் செயற்பட்டுவரும் முதலமைச்சரின் காதில் இந்தியத் தூதுவரின் புத்திமதி ஏறியிருக்குமா? என்பது சந்தேகமே.

ஒரு மாகாணத்தின் முதலமைச்சரிடம் பல தகைமைகள் காணப்பட வேண்டும். இதில் முக்கியமானது பாரபட்சமற்ற வகையில் செயற்படுவதாகும். இது எதிர்த்தரப்பினருக்கும் பொருந்தும். ஆனால் வடக்கு முதலமைச்சர் தாம் சார்ந்து நிற்கின்ற ஆளும் கட்சிக்குள்ளேயே பாரபட்சமாக நடந்து கொள்கின்றார் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

### சில அமைச்சர்களை வேண்டுமென்றே புறக்கணித்தார் முதலமைச்சர்

வடக்கு மாகாணசபையின் இரண்டு புதிய அமைச்சர்களின் பதவியேற்பு வைபவம், இந்தியத் தூதுவருடனான சந்திப்பு ஆகியவற்றின்போது முதலமைச்சருக்கு விருப்பமில்லாத அமைச்சர்களான ப.சத்தியலிங்கம் மற்றும் பா.டெனீஸ்வரன் ஆகியோர் வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக அமைச்சர் பா.டெனீஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில்; முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆளும் தரப்பில் தமக்கு வேண்டிய 14 பேருடன் மட்டுமே உறவுகளைப் பேணிவருகின்றார். ஆலோசனையில் ஈடுபடுகின்றார். ஏனையவர்கள் அவரால் புறக்கணிக்கப்படுகின்றனர், என்று கூறியிருக்கிறார்.

முதலமைச்சரின் இந்தநிலைப்பாட்டை எவருமே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அவருக்கு ஆதரவு தெரிவித்து வருபவர்கள் கூடத் தமக்கும் மற்றவர்கள் போன்றதொரு நிலை எப்போதாவது ஏற்படுமென்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அதேவேளை, வடக்கு மாகாணசபையைப்பொறுத்த வரையில் அங்கம்வகிக்கின்ற மொத்தமுள்ள 30 ஆளும் தரப்பு உறுப்பினர்கள் 15 க்குப் 15 என்றவகையில் பிளவுபட்டு நிற்கின்றனர். முதலமைச்சருக்கு எதிராகத் தமிழ் அரசுக் கட்சியினால் நம்பிக்கையில்லாத்தீர்மானம் கொண்டுவரப்பட்ட போது அதே கட்சியைச் சேர்ந்த மாகாணசபை உறுப்பினர்களான அனந்தி மற்றும் கஜதீபன் ஆகியோர் அதற்கு எதிராகவும் நடந்து கொண்டனர். இன்று அனந்திக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் கஜதீபனும் முதல்வரால் கவனத்தில் கொள்ளப்படலாம்.

### மௌனிக்கப்பட்ட ஆயுதப் போராட்டம்


தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டமே ஈழத்தமிழர்களை உலகுக்கு அடையாளம் காட்டியது. தமிழர்களுக்கெனத்தனியான தாயகம் கிடைத்தால் மட்டுமே அவர்கள் கௌரவமாகவும், நிம்மதியாகவும் வாழ முடியுமென அவர்கள் எண்ணினார்கள். அந்தக் குறிக்கோளுடனேயே போராடினார்கள். ஆனால் எவருமே எதிர்பார்க்காதவாறு அந்தப் போராட்டம் மௌனிக்கப்பட்டு விட்டது. இதனால் தமிழர்கள் ஏதுமற்ற ஏதிலிகளாகக் கணிக்கப்படுகின்றனர். தனிநாடு கேட்ட தமிழர்கள் இன்று தமது தாயக பூமியாகிய வடக்குக் கிழக்கைப் பிளவுபட்ட நிலையிலேயே பார்த்துக் கொண்டிருக்கின்றனர். கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் பதவிகூட அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இந்த நிலையில், பெரும் இழுபறி நிலையின் பின்னர் வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இடம்பெற்றது. தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு அனைவரும் எதிர்பார்த்ததைப் போன்று அமோக வெற்றி பெற்றது. விக்னேஸ்வரன் முதலமைச்சர் பதவியில் நோகாமல் அமர்ந்து கொண்டார். கஷ்டப்படாமல் கிடைக்கின்ற சுகத்தின் அருமை பலருக்குத் தெரிவதில்லை. அதை எவ்வாறு அனுபவிப்பது என்பதைப் புரியாமல் குழம்பி நிற்பார்கள். ஏனையவர்களையும் குழப்புவார்கள். இதைப் போன்றதொரு நிலைதான் தற்போது வடக்கு மாகாண சபையில் காணப்படுகின்றது.

### தமிழ்நாட்டு அரசியலிலும் பல்வேறு சிக்கல்கள்

இந்தியாவின் தமிழ் நாட்டைத் தமிழர்களின் தாயகமெனக் கூறுவார்கள். இங்கு வேறெங்கும் இல்லாத அளவுக்கு அதிகமான, சுமார் ஏழு கோடி தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்தியாவின் அபிவிருந்தியடைந்த மாநிலங்களில் தமிழ்நாடு முக்கியமானது. அங்கும் அடிக்கடி அரசியல் சிக்கல்கள் எழுவது வழமையாகும். ஆனால் ஆளும் கட்சிக்குள் மிகப் பெரிய சிக்கல் இப்போது தான் எழுந்துள்ளது. இன்றைய நிலவரப்படி தமிழ் நாட்டின் ஆளும் அ.தி.மு.க. கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் மூன்று அணிகளாகப் பிரிந்து காணப்படுகின்றனர். பன்னீர்செல்வம் அணி, பழனிச்சாமி அணி மற்றும் தினகரன் அணி ஆகிய மூன்று அணிகளுமே அவையாகும். இதனால் அந்த மாநிலத்தின் அபிவிருத்திப் பணிகளில் தேக்க நிலையொன்று தோன்றியிருப்பதாக மக்கள் குறை கூறுகின்றனர். மக்கள் தினமும் ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராட்டங்களில் ஈடுபடுவதையும் அங்கு காணமுடிகிறது.

தமிழ்நாட்டுடன் ஒப்பிடும் போது வடமாகாணத்தையொரு சுண்டங்காய் என்றே கூறவேண்டும் நிலப்பரப்பும் குறைவு; மக்கள் தொகையும் குறைவு. இதில் வறட்சியின் தாண்டவம் வேறு. மக்கள் தமக்குத் தேவையான குடிதண்ணீரைப் பெறுவதில்கூடத் துயரங்களை எதிர் கொண்டு வருகின்றனர். கடும் வறட்சி காரணமாக தோட்டப் பயிர்கள் பாதிப்பை எதிர்கொண்டு வருகின்றன. வேலை கிடைக்காத நிலையில் இளைஞர்கள் அடாவடித்தனங்களில் தமது பொழுதைக் கழித்து வருகின்றனர். தொண்டராசிரியர்கள் மற்றும் வேலையற்ற பட்டதாரிகள் போராட்டங்க்களில் ஈடுபட்டு வருகின்றனர். இடம்பெயர்ந்த மக்களின் அவலங்கள் இன்னமும் தொடர்கின்றன. மக்களின் காணிகளில் பௌத்த விகாரைகளை அமைக்கும் பணிகள் சூட்சுமமான முறையில் இடம்பெற்றுவருகின்றன. வெளியூர் மீனவர்களால் உள்ளூர் மீனவர்கள் தொடர்ந்து பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர். ஆனால் இவையெல்லாம் வடக்கு மாகாண சபையினதோ அல்லது முதல்வரினதோ கவனத்தை ஈர்த்ததாகத் தெரியவில்லை. அமைச்சர்களை நியமிப்பதும், அமைச்சர்கள் மீது விசாரணைகளை மேற்கொள்வதும், அரசியல் காய்நகர்த்தல்களில் ஈடுபடுவதும் தான் ஒரு மாகாணத்தின் முதலமைச்சரின் கடமைகள் என்றால் அவ்வாறானதொரு பதவிக்கு இங்கு தேவையே இல்லை. மாகாணசபை நிர்வாகத்தாலும் பயன் கிடைக்கப் போவதில்லை..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆபத்தான நிலையில் வடக்கின் அரசியல்

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி கூட்டமைப்பை ஒழித்து விடுவதையே தனது பிரதான நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

■ சேரலாதன்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குள் வடக்கு மாகாண சபை உள்ளதாகக்கூறப்படுகின்ற போதிலும், கூட்டமைப்பு இரண்டு அணிகளாகப் பிரிந்துசெயற்படுவதைத்தான்காண முடிகின்றது. முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஆளுநரிடம் கையளித்ததன் பின்னர் முதலமைச்சருக்கு ஆதரவான அணி, எதிரான அணி என இரண்டுஅணிகள்தோன்றிவிட்டன. கூட்டமைப்புக்குள் ஏற்பட்டுள்ள இந்தப் பிளவு, வடக்குத் தமிழர்களின் ஒற்றுமையை உலகறியச் செய்து விட்டது. வடக்கின் அரசியல் ஆபத்தில் சிக்கி யுள்ளதையும் தெளிவாகக் காட்டிவிட்டது.

**பாட்டும் நானே; பாவமும் நானே என்ற ரீதியில் முதலமைச்சர்**

அதிகாரங்கள் எவற்றையுமேகொண்டிராத வடக்கு மாகாணசபையால் உருப்படியாக எதையுமே சாதிக்க முடியாது என்பது எதிர்பார்த்த ஒன்றுதான்.

ஆனால் அங்கு மக்கள் நலத்திட்டங்கள்நிறைவேற்றப்படுவதற்குப்பதிலாகக் குழப்பநிலைதான் நீடித்துக் கொண்டிருக்கின்றது.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் "பாட்டும்நானே, பாவமும்நானே" என்பது போன்று, எல்லாமே தாமேயென எண்ணி நடந்து கொள்கின்றார். இதனால் ஏற்படக் கூடிய பாதகங்கள் தொடர்பாக அவர் சிறிதும் எண்ணிக் கூடப் பார்ப்பதாகத் தெரியவில்லை. முதலில் அவர் தாம் முன்னர் உயர் நீதிமன்ற நீதியரசராக இருந்தவர் என்ற நினைப்பை அறவே மறந்து விடவேண்டும்.

தாமொரு சாதாரண அரசியல்வாதி என்ற நினைப்பு மட்டுமே அவரது மனதில் குடிகொள்ள வேண்டும். எவருமே எதிர்பாராத வகையில் அரசியலுக்குள் இழுத்துவரப்பட்ட ஒருவர் தான் சி.வி.விக்னேஸ்வரன். அதை விடத் தமிழ் மக்களின் பிரச்சினைகளில் பங்குபற்றிய ஒருவராகவும் அவர் இருக்கவில்லை.

கம்பன் கழகத்தின் பெருந்தலைவராக அவர் இருந்தமைதான் நினைவுக்குவருகின்றது. முதலமைச்சரான பின்னர் அதுவும் கைநழுவிப் போய் விட்டது. தமது இரண்டு வாரிசுகளுக்கும் சகோதர இனத்தில் மணம் முடித்துக் கொடுத்து சமத்துவம் கண்டவர் அவர்.

ஆனால் இன்று அவரொரு இனவாதியாகத் தெற்கில் உள்ளவர்களால் சித்தரிக்கப்பட்டு வருகின்றார்.

**முதலமைச்சரின் அரசியல் பிரவேசத்துக்குக் காரணகர்த்தா சம்பந்தன்**

அவரது அரசியல் பிரவேசத்துக்கு வழியமைத்தவர் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தரே. அவருமொரு மூத்த சட்டத்தரணியாக விளங்கியவர் என்ற வகையில் நீதியரசராகவிருந்த விக்னேஸ்வரன்பால் ஈர்ப்பு ஏற்பட்டிருக்கலாம். ஆனால் பிள்ளையார் பிடிக்கப் போய் அது குரங்காக மாறிய நிலையில்தான் இன்று சம்பந்தரே பரிதாபமாகக் காட்சிதருகின்றார்.

புதிய கூட்டாளிகள் கிடைத்து விட்டதால், தம்மைஉயரத்தில்ஏற்றிவைத்தவர்களை வடக்கு முதலமைச்சர் இப்போதெல்லாம் மதித்து நடப்பதில்லை. இதில்சம்பந்தரும் அடக்கம். மதிக்காமல் விட்டாலும் பரவாயில்லை. சம்பந்தரைப் பகிரங்கமாகத் தாக்கிப் பேசுகின்ற அளவுக்கும் அவர் துணிந்து விட்டார். சம்பந்தர் வழக்கம்போன்றுமௌனம்சாதித்து வருவதைக் காணமுடிகின்றது. ஆனால் இந்த மௌனத்தைப் புயலுக்குமுந்தியஅமைதிஎன்றும்கொள்ள முடியும்.

சம்பந்தர், விக்கிஇருவருமேவயோதிபத்தின் எல்லையில் நிற்பவர்கள். பந்தபாசங்களைக் கடந்தவர்கள். மற்றவர்களுக்கு நல்லவழியைக் காட்ட வேண்டியவர்கள். இப்போதுள்ள நிலையில் இவர்கள் இருவரும் இணைந்து எடுக்கின்ற முடிவுகள் தமிழினத்தின் விடிவுக்கு வழிசமைக்க வேண்டும். அதை விடுத்துப் பிரிவினைக்கும் குழப்பங்களுக்கும் வழிஏற்படுத்திவிடக்கூடாது.

**த.தே.மக்கள் முன்னணியின் கபடத்தனம்**

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி கூட்டமைப்பை ஒழித்து விடுவதையேதனதுபிரதானநோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. கூட்டமைப்புத் தலைவர்களை இழிவுபடுத்துகின்றகாரியங்களிலும் அது ஈடுபட்டு வருவதைக் காணமுடிகின்றது. இலங்கைத்தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழுகின்ற நாடுகளில் கூட்டமைப்புக்கு எதிரான பரப்புரைகளை மேற்கொள்வதில்இந்தமுன்னணியினர் தீவிரமாகவே, ஈடுபட்டு வருகின்றனர்.

வெளிநாட்டில் வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனும் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவும் அங்கு புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழர்கள் சிலரால் அவமானப்படுத்தப்பட்டனர். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தம்மை இனவிடுதலைக்கான போராளிகளாகக் காட்டிக் கொண்டு களத்தில் சுழன்று திரிந்த இவர்கள், பரப்புரைக்கூட்ட மேடைகளில்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எவ்வளவு கேவலமாக விமர்சிக்க முடியுமோ அந்த அளவுக்குக் கேவலமாக விமர்சித்தனர்.

தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் இருந்து பெருமளவு நிதியுதவியும் இவர்களுக்குக் கிடைத்ததாகக் கூறப்படுகின்றது. ஆனால் சொற்பவாக்குகளைப் பெற்று இவர்கள் படுதோல்வியைத்தழுவிக்கொண்டனர். கூட்டமைப்பு ஓர் ஆசனத்தை இழப்பதற்கும் இவர்களே காரணமானார்கள்.


**இவர்கள் திருந்தவே மாட்டார்களா?**

தேர்தலில் மக்கள் தகுந்த பாடத்தைப் புகட்டிய போதிலும், இவர்கள் இன்னமும் திருந்தவில்லையென்பதை இவர்களது தற்போதைய நடவடிக்கைகள் உணர்த்துகின்றன. இவர்கள் தமிழ் மக்களின் நலன்களில் உண்மையான அக்கறையுள்ளவர்களாக இருந்தால், தற்போதுவடக்கில் ஏற்பட்டுள்ள குழப்பநிலைக்குத் தூபம் இட்டிருக்க மாட்டார்கள். முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு உருவேற்றிச் சாமியாட வைத்திருக்க மாட்டார்கள். மாகாணசபையில் பிளவு ஏற்படுத்துவதற்குத் தூண்டுகோலாக இருந்திருக்கமாட்டார்கள். ஆனால், இவர்கள் இதையெல்லாம் செய்துகொண்டுதம்மைத்தமிழ்மக்களின் காவலர்களெனக் கூறிக் கொண்டு செயற்படுவது மக்களை ஏமாற்றுகின்றதொரு செயலாகவே கருதப்படவேண்டும்.

வடக்கு முதலமைச்சரின் அதிரடி நடவடிக்கைகளால் வடக்கு மாகாண சபை தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டது போன்ற நிலையில் காணப்படுகின்றது. வடக்கின் முதலாவது பெண் அமைச்சர் என்ற பெருமையை அனந்தி பெற்றுக் கொண்டார்.

கட்சித் தலைமையை ஒதுக்கி வைத்துவிட்டு முதலமைச்சருடன் ஒட்டிக் கொண்டதற்கு அவருக்கு பெரியதொரு வெகுமதி வழங்கப்பட்டுவிட்டது. சுரேஷ் பிரேமச்சந்திரனும் இப்போதுமனநிறைவுகொண்டிருப்பார். அவரது நீண்டநாள் கனவு நனவாகி விட்டதல்லவா?

ஆனால் வடபகுதி மக்களுக்குத்தான் எந்த விடிவும் ஏற்படவில்லை. அரசியல்வாதிகளின் ஏமாற்றுத்தனங்களைப் பார்த்துப் பார்த்து அவர்களுக்குப் புளித்துப் போய்விட்டது. சலிப்புடன் அவர்கள் அங்கு மிங்கும் நெளிவது தெளிவாகத் தெரிகின்றது. வடபகுதி அரசியல்வாதிகள் அதை மேலும் மேலும் அதிகரிக்க வைப்பதிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளனர். ■



## ஆசிரியருக்கான கடிதம்

### திட்டமிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய சோலை வரி மீளாய்வுப் பணி

நல்லூர் பிரதேச சபையின் நிர்வாகத்தின் கீழ்வரும், எமது பகுதியில் கடந்த மாதம் தொடக்கம் சோலைவரி மீளாய்வு என்றொரு பணி நடைபெற்று வருகின்றது. வெற்றுக்காணி தொடக்கம் குடியிருப்பு இல்லங்கள் வரை, சோலைவரிக்கான உரிமைப் பெயர்களும், இலக்கங்களும் பிரதேச சபை வசம் உள்ளன. அண்மைக்காலத்தில் காணிகள் துண்டாடப்பட்டு வருகின்றன. சோலைவரி மீளாய்வு அவசியம் என்பது ஏற்கப்பட வேண்டியதொன்றே. மிக நீண்டகாலமாக காணி உறுதி தொடக்கம் தொழில் நடவடிக்கைகள், பிள்ளைகளின் கல்வி விடயங்கள் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள், வங்கிக் கணக்கிலக்கங்கள், ஆட்பதிவுத் திணைக்கள நடவடிக்கைகள் போன்றவற்றுடன்தொடர்புடைய சகல ஆவணங்களிலும் வீட்டு இலக்கமும், முகவரியும் குறிப்பிடப்பட்டு வருகின்றன. இலக்கங்களைத் திடீரென மாற்றும் போது அதனால் மக்களுக்குப் பெரும் கஷ்டம் ஏற்படப் போகின்றது.

காணிகள் துண்டாடப்பட்டிருந்தால் குறித்த காணியின் பழைய இலக்கத்தை தொடர்புபடுத்தி A1, A2, A3 என இலக்கமிடுவதே ஏனைய பிரதேசங்களில் கைக் கொள்ளப்படும் நடைமுறை. இதனை விடுத்து, புதிய இலக்கம் புகுத்தப்படுவது மக்களுக்குப் பெருமளவில் சிக்கல்களை உருவாக்கும். மேற்கூறப்பட்ட ஆவணங்களில் புதிய இலக்கங்களைக் குறிப்பிடுவதிலுள்ள சிக்கல்கள், பிரச்சினைகள் குறித்து சிந்தித்து நிர்வாகத் தரப்பினர் செயற்படுவது அவசியம்.

இ.கமலாதேவி

### நல்லிணக்கச் சிந்தனை வளர்ச்சி காணட்டும்

எப்போதுமே பௌத்த மதத் தலைவர்களது கருத்தை வேதவாக்காக ஏற்று சிங்கள மக்களும் சிங்கள அரசியல்வாதிகளும், செயற்பட்டமைதான் வரலாறு. அண்மைக்காலமாக அந்த வழக்கத்தில் ஒரு மாற்றத்தை உணர முடிகிறது.

புது அரசமைப்பொன்று அவசியமில்லை என்ற பௌத்த மதத் தலைமைப்பீடத்தின் கருத்துபச்சை இனவாதமென்றுபிரபலசிங்களசிவில்சமூகச் செயற்பாட்டாளரொருவர் கடுமையாகக் கண்டித்திருப்பது வரவேற்கத்தக்கது. சிங்கள மக்கள் மத்தியில் இன நல்லிணக்கச் சிந்தனைகள் வளர்ச்சி காணுமாயின், எம்மினத்தின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டுமென எதிர்பார்க்கலாம்.

பு.அரவிந்தன், ஏழாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Water Supply Software தொடர்பான மென்பொருளுக்கான கூறுவிலை கோரல்

எமது சபையின் தேவையின் பொருட்டு *Water Supply Software* தொடர்பான மென்பொருள் ஒன்றினைக் கொள்வனவு செய்ய உத்தேசித்துள்ளோம். குறித்த *Water Supply Software* தொடர்பான மென்பொருள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

**Software - Water Supply Software**

*a. User friendly Interface* *b. Web base*
*c. Language : Tamil and English* *d. Software Content*

**Database**
- *Customer Details of all connections*
- *Water Supply Connection Details*
- *Water Supply Category (Stand Post, Private Post, Bowser Supply, Ect.)*
- *Water Meter Reading Details*
- *Water Bill Collector Details.*

◆ **Reports**
- **Recovery Summary, Arrears Summary, New Connection Details.**
  - ✓ **Daily, Monthly, Quarterly, Yearly**
  - ✓ **Water Supply Category**

◆ **Analyzing Report**
- Meter Reading Records and total quantity consumed against supply quantity
- Stand post supply quantity
- Waste not paid
- Ceiling of Supplies (Individual connections, Time duration of supply)

◆ **Notice**
- Monthly Meter Reading Notice
- Red Notice (Every 3 Months)
- Bowser supply Notice (Used Details and amount)

◆ **Update Facility**
- Water Connection owner details change (View History)
- Permanent, Temporary Water Supply Disconnection and Reconnection Facility.

◆ **Online Payment Facility and Mobile Version**
- Visible Mobile version Software
- Online Payment Interface
- Enable Facility for Hand Device with Printer

◆**User Setting** ◆ **Activity Log** ◆ **Data Backup Facility**

எனவே கூறுவிலை தரவிரும்புவோர் தங்களால் வழங்கப்படக் கூடிய Water Supply Software தொடர்பான மென்பொருள் பற்றிய தங்களின் திட்ட முன்மொழிவினை ( Project Proposal ) குறிப்பிட்டுக் கூறுவிலையுடன் கீழே 1 - 3 வரையுள்ள ஆவணங்களையும் இணைத்துக் கடித உறையிலிட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **Water Supply Software தொடர்பான மென் பொருளுக்கான கூறுவிலை'** எனக் குறிப்பிட்டு " **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்** " என்ற முகவரிக்கு 24.07.2017 இற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும். (தேவையான விவரங்களினையும் இணைத்து அனுப்பவும்)

◆ Company Profile ◆Certified Copy Of Businness Registration Certificate
◆ Certified Copy of VAT Certificate.

**- ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் -**

# மரண அறிவித்தல்

## திருமதி இராஜசோதி மகாலிங்கம்



**அன்னை மடியில்** 25.09.1941 **இறைவன் மடியில்** 07.07.2017

கற்கோவளம் பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜசோதி மகாலிங்கம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயா - செல்வநாயகிஅம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகலிங்கம் - சிவகாமி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நாகலிங்கம் மகாலிங்கம் (ஓய்வு பெற்ற நிலஅளவை அத்தியட்சகர்) இன் அன்பு மனைவியும் திருமதி ச.குமுதினி (அதிபர் விவசாய கல்லூரி, வவுனியா), திருமதி க.நந்தினி (பிரதம பொறியியலாளர் நீர் வழங்கல் திட்டம், முல்லைத்தீவு), திருமதி அ.மாதினி (தொழிநுட்ப உத்தியோகத்தர் நகரசபை, ஏறாவூர்), ம.ராஜ்குமார் (ஆசிரியர்), ம. சிவகுமார் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனியா/வருகைதரு போதனாசிரியர் தொழில்நுட்ப கல்லூரி, வவுனியா) ஆகியோரின் அன்புத்தாயும் க.சந்திரகாந்தன் ( பிரதம பொறியியலாளர் SPMU வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மன்னார்), வை. கமலதாசன் (பொறியியலாளர் / வருகை விரிவுரையாளர் தொழில்நுட்பகல்லூரி, வவுனியா), மை.அன்ரனி (தொழில்நுட்ப உத்தியோகத்தர் நகரசபை ஏறாவூர்), திருமதி ரா. ரஞ்சினி (ஆசிரியை), திருமதி சி. சுஜந்தினி ஆகியோரின் அன்பு மாமியும் ரஞ்சனி, திவானா, கரிசயன், கரினிகா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் சற்குணானந்தராஜா (ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர் தபால் திணைக்களம்) காலஞ்சென்ற தவராஜா (ஓய்வு பெற்ற ஓவசியர் AMC சுகாதாரதிணைக்களம்), இராஜேஸ்வரி, இராசஞானம் (ஆசிரியர் கில்ணர் பாலர் பாடசாலை), இன்பராஜா (ஓய்வு பெற்ற கணக்காளர்), ஜீவராஜா (பொறியியலாளர் ஆஸ்திரேலியா), இராசமனோகரி (ஓய்வு பெற்ற செயலாளர் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.07.2017) ஞாயிற்றுக்கிழமை ID54, நீர்ப்பாசன விடுதி சந்தை சுற்றுவட்ட வீதி, வவுனியாவில் மு.ப. 9 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ID54, நீர்ப்பாசன விடுதி**
**சந்தை சுற்றுவட்ட வீதி, வவுனியா. 077 990 6590**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

# இடைக்கால...

...டிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழிநடத்தல் குழுவின் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மகிந்த அணியினரும் கலந்து கொண்டிருந்தனர். இடைக்கால அறிக்கையின்ஒவ்வொரு வாசகங்களும் நீண்ட நேரம் ஆராயப்பட்டன. இடைக்கால அறிக்கையில் உள்ள காணி அதிகாரம், தேர்தல்முறைமை, நிறைவேற்று அரச தலைவர் முறைமை என்பன தொடர்பில் மாத்திரமே இன்னமும் ஆராயப்படவேண்டியுள்ளது. இதில் காணி அதிகாரம் தொடர்பில், ஏற்கனவே நீண்ட கலந்துரையாடலின் பின்னரே வாசகங்கள் எழுதப்பட்டன. தற்போது அது தொடர்பில் ஆராயப்பட்டு முடிந்தாலே பெரும்பாலும் இடைக்கால அறிக்கை இறுதியாக்கப்பட்டு விடும். தேர்தல்முறைமை தொடர்பில் 4 கட்சிகள் முன்வைத்துள்ளயோசனை, நிறை வேற்று அதிகார முறைமை தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ள யோசனை என்பன இடைக்கால அறிக்கையுடன் பின்னிணைப்பாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளன. இதனால், காணி அதிகாரம் தொடர்பில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அமர்வில் ஆராயப்பட்டு இறுதி செய்யப்பட்டதும், இடைக்கால அறிக்கை தயாராகிவிடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற அமர்வு எதிர்வரும் செவ்வாய்க் கிழமை இல்லாதபோதும், இடைக்கால அறிக்கை தொடர்பில் ஆராய்வதற்கு வழிநடத்தல் குழு கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

கோடிபதி ஷனிடா
சீட்டிழுப்பு வாரம்: 159
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 07.07.2017
அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 93,158,324/-
T 21 32 76 78
01 04 62 67
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 580 வர்ணம்: நீலம்
சீட்டிழுப்பு திகதி: 07.07.2017
வெற்றி இலக்கங்கள்
09 38 51 52 H
06 12 21 29
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 30,181,735/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 07.07.2017
வெற்றி வாரம் 2155
வர்ணம் சிவப்பு
மேடம்
வெற்றி இலக்கங்கள் 02 26 28 59
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 000, 000
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்
33 43 45 51
2017.07.09 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
ஊதா நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி (08.07.2017)



மண்மகள் மடியில் 10.03.1983
மாதுயர் மடியில் 11.07.2014

## அமரர் நாகரத்தினம் பார்த்தீபன்

**வாழுமோர் நிலையில் மேன்மை**
**வகுத்துடன் தொகுத்து நின்று**
**நாளுமே உயர்வு தன்னை**
**நாடியே நடந்தபோது**
**சூழுமோர் வஞ்ச நஞ்சு**
**சுற்றிய சதிசேர் நெஞ்சர்**
**பாழுமோர் கொலைஞர் மாய்க்கப்**
**பறந்து மூன்றாண்ட தாச்சோ!**

**மந்துவில் மேற்கு, கொடிகாமம்.** **குடும்பத்தினர்.**

# 24 ஆவது ஆண்டு நினைவு அஞ்சலி

**தோற்றம்** 12 - 03 - 1941



**மறைவு** 08 - 07 - 1993

## அமரர் சிதம்பரி மகேந்திரன்

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

ஆண்டுகள் பல உருண்டோடியும்
அகன்றதில்லை உம் நினைவு
காவலனாய் நீர் நாட்டிற்கும் வீட்டிற்கும்
ஆற்றிய பணிகள் அமர வாழ்வே !

**நாகம்மாள் வீதி,**
**உடுவில் கிழக்கு, சுன்னாகம்.**

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24 மணிகளில் இரு வேறு தினங்கள்

பூமி கோள வடிவமானது. இது தன்னைத் தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றுகிறது. இவ்வாறு பூமி சூரியனைச் சுற்றி வரும் போது சூரியனின் ஒளிபடும் பூமியின் ஒரு பகுதி பகலாகவும் அதன் எதிர்ப் பகுதி இரவாகவும் இருக்கும். ஆக பூமியின் எல்லாப் பக்கங்களும் ஒரே பகலாகவோ. அல்லது ஒரே இரவாகவோ இருப்பதில்லை. என்பது வெளிப்படை. ஆதலால் பூமியின் எல்லா இடங்களிலும் நேரம் ஒரே மாதிரியாக இருப்பதில்லை என்பதும் உண்மை. இதன்படி தான் எமது குடும்ப அங்கத்தவரோ, உறவினரோ, நண்பர்களோ வெளி நாடுகளில் இருந்து நம்மோடு பேசுகையில் எமக்கு நேரம் ஒன்றாக இருக்க, அவர்கள் நேரம் மற்றென்றாகவும், எமக்கு இரவானால் அவர்களுக்கு பகலாகவும் எமக்கு பகலானால் அவர்களுக்கு இரவாகவும் இருப்பதை அறிகிறோம். இவ்வாறு பூமியிலே வேறுபட்ட நேரங்கள் இருப்பதைப் பின்வருமாறு கணிக்கிறார்கள்.



மேலே உள்ள உலக புற உருவப்படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு பூமியிலே வடக்கிலிருந்து தெற்காக 360° நெடுங்கோடுகள் வளைகோடுகளாக வரையப்பட்டுள்ளன. இவை கற்பனைக் கோடுகள். இவற்றில் 0° நெடுங்கோடு பிரிட்டனில் உள்ள கிறீனிச் என்ற நகரத்தினூடாக (நேரம்கணிப்பதற்கு) மையக் கோடாக வரையப்பட்டுள்ளது. 180° நெடுங்கோடு ஒரு கோடாக திகதிகோடு என வரையப்பட்டுள்ளது.

பூமி மேற்கில் இருந்து கிழக்காகச் சுற்றுவதால் 0° கிறீனிச்சிலிருந்து கிழக்கச் செல்லச் செல்ல ஒவ்வொரு பாகைக்கும் நேரம் 4 நிமிடத்தால் அதிகரித்துச் செல்லும். இதே போன்று கிறீனிச்சிலிருந்து மேற்கே செல்ல ஒவ்வொரு பாகைக்கு 4 நிமிடம் குறைந்து செல்லும். உதாரணமாக கிறீனிச்கோட்டில் நேரம் முற்பகல் (காலை) 10 மணியாக இருக்கும் போது கிறீனிச்சுக்கு கிழக்கே 90° நெடுங்கோட்டில் அமைந்திருக்கும் ஒரு நகரத்தில் நேரம் மாலை 4 மணியாக இருக்கும். இதே போன்று 90° மேற்கில் அதிகாலை 4 மணியாக இருக்கும். இந்த ஒழுங்கில் 178° கிழக்கு நெடுங்கோட்டில் திங்கட்கிழமையாக இருக்கும் பொழுது மேற்கில் 178°யில் ஞாயிற்றுக்கிழமையாக இருக்கும். அதாவது 180° கிழக்கில் 1 நாள் கூடுதலாகவும் மேற்கில் ஒரு நாள் குறைவாகவும் இருக்கும். ஆனி மாதம் 30ஆம் திகதி கிழக்கில் தனது பிறந்த நாளைக் கொண்டாட மறந்த ஒருவர் உடனடியாக சர்வதேச திகதிக் கோட்டைக் கடந்து விமானமேறி மேற்குக்கு வருவாராகில் அங்கு நடந்து கொண்டிருக்கும் ஆனி 30இல் தனது பிறந்த நாளைக் கொண்டாடுவார். (அதாவது இந்த திகதிக் கோட்டுக்கு மேற்கிலும் கிழக்கிலும் வேறு வேறு நாள்கள் நடைமுறையில் இருக்கும். மேற்கில் ஆனி 30, கிழக்கில் ஆடி)



# எல்லாம் அழகு தான்!

தன் உருவத்தை நினைத்து நரி ஒன்றுக்கு பெருங் கவலை. "ஊசியான மூஞ்சி. அவலட்சணமான காதுகள், துடைப்பம் போன்ற அநாவசியமான வால், குள்ளமான உடல்.சே.சே என்ன அவருவருப்பான பிறவி நான் என்னை ஏன் இறைவன் இவ்வாறு படைத்தான்?" என வருந்தியது. "அந்த யானையைப் போன்று தந்தங்கள் எனக்கிருந்தால் எத்தனை அழகாக இருப்பேன். சிங்கத்தைப் போன்ற வலுவான உடல் இருந்தால் எத்தனை கம்பீரமாக இருக்கும். கரடியைப் போன்ற உரோமக் கட்டு இருந்தால் எத்தனை மிடுக்காக இருப்பேன். மான்களைப் போன்ற அழகிய கால்கள் இருந்தால் எப்படியெல்லாம் துள்ளி விளையாடலாம். இவற்றில் எதுவுமே இல்லாமல் இப்படி அற்ப பிறவியாய் உலவிக் கொண்டிருக்கிறேனே! நினைக்கவே கேவலமாக இருக்கிறது" என்று நினைத்து வருந்தியதோடு, துக்கம் தொண்டையை அடைக்க தனியான இடம் சென்று குலுங்கிக் குலுங்கியும் அழுதது நரி. ஒரு சமயம் மிகவும் விரக்தியுற்று தற்கொலை செய்யலாமா? என்றும் யோசித்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் நரியினுள் இருந்த மனச் சாட்சி பேசியது. "சே.... நீ தற்கொலையை நினைக்குமளவுக்கு கோழையாகி விட்டாயா? இப்போது உனக்கென்ன குறை? நீ எந்த வி[illegible] ஊனமும் இன்றி நிறைவா கத்தானே! இருக்கிறாய். நீ இல்லாத ஒன்றை இருந்திருக்க வேண்டும் என நினைத்தே கவலைப்படுகிறாய். இது பேராசையே அன்றி வேறில்லை. யானைக்கு தும்பிக்கை. சிங்கத்துக்கு பிடரி மயிர், போல உனக்கு நீயே அழகு. உனக்கு இருக்க முடியாத ஒன்றுக்காக நீ கவலைப்படவே கூடாது. சரி அது இல்லை; இது இல்லையே. என்று கவலைப் பட்டாலும் அவை கிடைத்துத்தான் விடுமா? கோழைத்தனமாக அழுவதை விட்டு விட்டு உனக்கிருக்கும் மூளையை வைத்து யோசி. நல்லது நடக்கும்" என்றது மனசாட்சி. "மனச்சாட்சி சொல்லுவதும் சரியே" என்று யோசித்து நரி அழுகையையும் கவலையையும் விட்டது.

ஒரு நாள் காட்டுக்குள் மிருகங்களை வேட்டையாட பலர் துப்பாக்கிகளுடன் அலைந்து திரிவதை நரி கண்டது. உடனே யானையிடம் ஓடிப் போய் நரி " யானை அண்ணா காட்டுக்குள் வேட்டைக்காரர் துப்பாக்கிகளுடன் திரிகின்றனர். எச்சரிக்கையுடன் இருங்கள்" என்று கூற "அப்படியா? என்று அதிர்ச்சியடைந்த யானை காட்டின் அடர்ந்த நடுப்பகுதிக்குள் தன் இனத்தவருடன் சென்று மறைந்தது. அடுத்து சிங்கம், புலி, சிறுத்தை, கரடி, கழுதை, ஓநாய் ஆகிய கொடிய விலங்குகளிடமெல்லாம் சென்ற நரி வேட்டைக் காரர்களின் வரவைக் கூறி முன்னெச்சரிக்கை செய்ய, எல்லாக் கொடிய விலங்குகளும் திசைக் கொன்றாக ஓடி குகைகள், அடர்காடுகள் நிலப் பொந்துகள் என்று பாதுகாப்பாக ஒதுங்கின. இப்போது காடு அமைதியானது.

நரியோ இப்போது காட்டினுள் மிக சுதந்திரமாகத் திரிய ஆரம்பித்தது. "என்ன ஆச்சரியம் என்னை ஒரு பொருட்டாக நினைக்காமல் நெஞ்சை நிமிர்த்தி பெருமையுடன் உலாவியவர்களெல்லாம், தங்கள் உயிருக்கு ஆபத்தென்றதும் என் பேச்சைக் கேட்டு எனக்கு மரியாதை கொடுக்கிறார்கள். மூளையைப் பயன்படுத்தினால் தான் என்னை எல்லோரும் மதிப்பார்கள் போலும், இதை விட்டு அழகு இல்லை என்று அழுது திரிந்தேனே" என்று தனக்குள் நினைத்து புத்தி சாலியாக செயற்பட ஆரம்பித்தது நரி.


**இருப்பதைக் கொண்டு திருப்தியுடன் வாழ வேண்டும்.**
**அதிக ஆசைப்பட்டால் அமைதியே போய் விடும்**



# ஒரு மொழிக்கு தொடர் மொழி

1. நிருபர் - செய்திகளைத் திரட்டித் தருபவர்.
2. அகழி - கோட்டையைச் சுற்றியுள்ள ஆழமான நீர் நிலை
3. ஆச்சிரமம் - முனிவர்கள் வசிக்கும் இடம்.
4. அகராதி - அகர வரிசைப்படி சொற்களுக்குப் பொருள் கூறும் நூல்.
5. அநாதை - தாய் தந்தையரை இழந்த பிள்ளை.
6. வேட்பாளர் - தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவர்.
7. அணிந்துரை - நூல் பற்றியோ நூலாசிரியர் பற்றியோ மற்றொருவர் எழுதும் உரை.
8. தீர்க்க தரிசி - எதிர்கால நிகழ்வுகளை முன் கூட்டியே அறியும் ஆற்றல் படைத்தவர்.
9. அந்தப் புரம் - அரண்மனையில் பெண்கள் வசிக்கும் இடம்
10. வாதி - வழக்கைத் தாக்கல் செய்பவர்.
11. பிரதிவாதி - வழக்கில் குற்றம் சாட்டப்படுபவர்.
12. விகடகவி - நகைச்சுவையும் பரிகாசமும் பொருந்தக் கவி புனையும் ஆற்றல் படைத்தவர்.
13. சுணை - வரண்ட பிரதேசங்களில் தண்ணீர் கிடைக்கக் கூடிய இடம்.
14. உடன்பாடு - இரு பகுதியினரிடையே ஒரு விடயம் பற்றி ஏற்படும் இணக்கம்.
15. தபுதாரன் - மனைவியை இழந்த ஆண்மகன்.

# எழுத்துக்களுக்குரிய வர்ணங்களைத் தீட்டி அழகு செய்வோம்



O - மண்ணிறம் X - மஞ்சள் T - நீலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் உற்பத்தித்திறன் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி யோ. கிருசாந்தினி** அவர்களின் அன்புத்தந்தை

### வேலுப்பிள்ளை மகேஸ்வரன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிசங்கம்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் பஸ்தரிப்பிட திறப்பு விழாவும்

அன்னை மடியில் 31 . 03 . 1934



ஆண்டவன் மடியில் 09 . 07 . 2016

### அமரர் மரியானந்தம்-அல்லேலூயா

**(ஓய்வு பெற்ற புகையிரத நிலைய உத்தியோகத்தர்)**

முதலாம் ஆண்டு நினைவை முன்னிட்டு மிருசிவில் பழையவாய்க்கால் A9 வீதியில் பஸ்தரிப்பிடம் திறப்பு விழா இன்று (08.07.2017) சனிக்கிழமை பி.ப 4.00 மணியளவில் நடைபெற்று புனித வேளாங்கண்ணி ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். நாளை (09.07.2017) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லமாகிய ஈச்சமோட்டையில் வழிபாடும் அதனைத்தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் மதியபோசனமும் நடைபெறும். அனை வரையும் அன்புடன் அழைக்கின்றோம். இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி :
101/ 2 ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்கள்

### பூலோகசிங்கம் கொன்ஸ்ரன்ரையின்

கொய்யாத்தோட்டத்தை பிறப்பிடமாகவும் மணியந்தோட்டத்தை வசிப்பிட மாகவும் கொண்ட பூலோகசிங்கம் கொன்ஸ்ரன்ரையின் (S.P.ராஜன்) 06.07.2017 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூலோகசிங்கம் சத்தியவதி தம்பதியரின் அன்பு மூத்தமகனும் காலஞ்சென்ற வெள்ளையன் மற்றும் மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும் சமத்துவமங்கையின் அன்புக் கணவரும் சத்திய வாணி(சமுர்த்தி வங்கி மனேஜர் பத்தர முல்ல, கொழும்பு), தேவிகா, ராதிகா, சுபாசினி (ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பக ஊழியர்), வலன்ரையின் விஜே ஆகியோரின் அன்புத் தந்தையும் டானியல்(கொழும்பு), றெக்ஸன், கனிஸ்ரன், றெமுண், ஜெயந்தி ஆகியோரின் மாமனாரும் எக்கியூஸ், எலாரியஸ் (கொழும்பு), அனுசியன், ஹனிஸ்கா, தேனுஷன், ஜெனிபர், நிவேதா, சியான், பிரவின், பிரதீஷ், பிரனீத், விதுசிகா, ஜெதுசிகா ஆகியோரின் பேரனும் வரதன்(கொழும்பு), ஜிப்றி(கனடா), குயின்மேரி (திருகோணமலை), ஜெய்சி பற்றிமா (கனடா) ஆகியோரின் சகோதரனும் அமரநாதன் (கொழும்பு) சாந்தினி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.07.2017) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு யாழ். மரியன்னை பேராலயத்தில் 3.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுத்து நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 03, ஹதிற்றல் லேன், மடத்தடி, யாழ்ப்பாணம்.**

**தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## திருமதி கமலாதேவி அருந்தவநாதன்



தோற்றம் . 15 . 01 . 1948
மறைவு . 05 . 07 . 2017

அல்வாயைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி அருந்தவநாதன் கடந்த (05.07.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அருந்தவநாதனின் அன்பு மனைவியும் சசிக்குமார், சசிகலா, சசிகரன், சசிகாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ராதா, குமரன், தனுஷா ஆகியோரின் அன்பு மாமியாரும் உமாரதி, ஸ்ரீரதி, கஸ்வினி, பரணிதரன், கிருஸ்சாந், லக்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.07.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் (வட்டுக்கோட்டையில்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வட்டுக்கோட்டை தெற்கு, வட்டுக்கோட்டை.**

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 134 6417 - குமரன்**

## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினபூபதி ஆறுமுகம்பிள்ளை



அராலியைப் பிறப்பிடமாகவும், கலைநகர் வட்டு வடக்கு, சித்தன் கேணியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினபூபதி (தேர்மணி) ஆறுமுகம்பிள்ளை கடந்த வியாழக் கிழமை (06.07.2017) காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - மகாலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்துரை ஆறுமுகம்பிள்ளை அவர்களின் அன்புமனைவியும் தியாகேஸ்வரன் (ஜேர்மனி), ரசீலா, செவ்வேஸ்வரன் (லண்டன்), சுசீலா (லண்டன்) ஆகியோரின் தாயாரும் மனோன்மணி காலஞ்சென்ற சறோஜாதேவி மற்றும் மகேஸ்வரி, சிவயோகமலர், இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் சிவமலர் (ஜேர்மனி), Dr.சிறீஜீவகன் (சிவலிங்கம் வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), தயாளினி (லண்டன்), சந்திரகுமார் (லண்டன்) ஆகியோரின் மாமியும் காலஞ்சென்றவர்களான கணேசபிள்ளை (வீராப்பம்மான்), பரமேஸ்வரி, மகாலட்சுமி மற்றும் நாகபூசணி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் அக்ஷயா (ஜேர்மனி), சாத்வீகன் (SLIIT Campus), கீர்த்திகன் (யாழ். பரியோவான் கல்லூரி உயர்தர மாணவன்), லண்டனில் வசிக்கும் கிஷோ, நர்மதா, திவாகரன், சௌமியன், சௌமியா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.07.2017) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொற்கைத்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கலை நகர், வட்டு வடக்கு, சித்தன்கேணி.**

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### திரு. இராசரத்தினம் சிவகுமாரன் (சோமுஅண்ணா)

முன்னாள் வர்த்தகர் - யாழ் ஆஸ்பத்திரி வீதி
தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய முன்னாள் முகாமையாளர்.

**மலர்வு : 22.05.1929 ✱ உதிர்வு : 01.07.2017**

தொண்டைமானாற்றை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமாகிய திரு. இராசரத்தினம் சிவகுமாரன் அவர்கள் 01.07.2017 சனிக்கிழமை அன்று Toronto வில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்திப்பிள்ளை வள்ளியம்மாள் தம்பதிகளின் பேரனும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் லெட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் ஆசை மகனும், காலஞ்சென்றவர்களான குழந்தைவேல் சிவஞானவதி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும், ஸ்ரீரங்கராஜன், ஸ்ரீரஞ்சிதராணி, ஸ்ரீரங்ககுமார், ஸ்ரீராகவன் ஆகியோரின் அன்புத்தந்தையும், Dr.ரமணி, மனோகரன், விஜயேந்திராதேவி, ஸ்ரீவித்யா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் Dr.தனஞ்ஜெயன், Dr.சசிகலா, Dr.அஸ்வின் , மதுமதி, தாட்சாயினி , வர்சினி, தேனுஜா, ஹரண்யா ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி, திருஞானசம்பந்தர், சந்திரசேகரம், சிவதாஸ், சண்முகலிங்கம், சிவசுப்ரம்மணியம், பாலேந்திரா மற்றும் சடாச்சரதேவி (குந்தவை) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 08.07.2017 சனிக்கிழமை மாலை 5.00மணி முதல் 9.00மணி வரையும் 09.07.2017 ஞாயிறுக்கிழமை காலை 08.30மணி முதல் 09.30 மணி வரையும் 8911 Woodbine Aveneue, Markham, Ontario L3R 5G1 இல் பார்வைக்கு வைக்கப்பட்டு, 09.30மணி முதல் இறுதிக்கிரியை நடைபெற்று, அதனைத் தொடர்ந்து Highland Hills Crematorium, 12492 Woodbine Ave, Gormley, Ontario L0H 1G0 எனும் முகவரியில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் : குடும்பத்தினர்.**
**தொடர்புகளுக்கு :**
**ராஜன் (மகன்) - கனடா + 1 416 839 2142**
**ரங்குட்டி (குமார்- மகன்) - கனடா +1 647 295 2493**
**ராகவன் (ராஜி- மகன்) - கனடா +1 647 201 7514 / + 1 416 391 3405 (H)**
**ரஞ்சிதா (மகள்) - அவுஸ்ரேலியா +61 412 261 727**

## இன்று நிறைவு

மட்டுவில் கிழக்கு ஆனைக்கார வைரவர் ஆலய அலங்காரத் திருவிழா சங்காபிசேகத்துடன் இன்று நிறைவு பெறும்.
திருவிழாக் கிரியைகள் சிவஸ்ரீ பொன்.லட்ச நாமதாசக் குருக்கள் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

(4-9)

**A/L 2017 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தின் (ICT) பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு**

**ICT SEMINAR**
**(10.07.2017 - Monday)**
**Database, Programming & Networking**
ஆகிய பிரிவுகள் அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் பரீட்சைக்கு ஏற்றமுறையில் வழிகாட்டப்படும்.
**( Limited to First 50 Students)**
**No.61, 3rd Floor, Palaly Road, Jaffna.**
**076 850 8894, 021 722 3444**



## நல்லூர்க் கந்தன் திருமண சேவை

எல்லா மதம், எல்லா இனம், வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் செய்து கொடுக்கப்படும்.

**இல.303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**வி.ஜெயந்தி**
T.P: 077 9733 183
021 227 1468

## தவறிவிட்டது

**மாவிட்டபுரம் கீரிமலை றோட் - துண்டில் சேச் இடையில் HU-3871 மோட்டார் சைக்கிள் இலக்கம் தவறிவிட்டது. இதனை கண்டெடுத்தவர்கள் கண்ணன் ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி சந்தி எனும் முகவரியில் ஒப்படைக்கவும்**

**தொடர்பு -**
**021 222 2865, 077 2784 004**

## தேவை

**எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு அனுபவம் வாய்ந்த வர்ண பூச்சாளர் (பெயின்ரர்) தேவை.**

**தொடர்பு -**
**077 361 4638, 076 316 5730**

## மரண அறிவித்தல்



பிறப்பு:13.10.1937 இறப்பு:06.07.2017

### சின்னையா சண்முகலிங்கம்

**(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், யாழ்.போதனா வைத்தியசாலை)**

தையிட்டியைப்பிறப்பிடமாகவும் உடுப்பிட்டி, கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட சின்னையா சண்முகலிங்கம் 06.07.2017 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சின்னையாவின் மூத்த மகனும் அருந்ததி தேவியின் பாசமிகு கணவரும் கணநாதன், சுபாங்கனி, மதிரூபன், விநோதினி, ஜெயரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சயிந்தா, சுகுமார், சுவீன்றிலி, கிரிதரன்(LankaRealOwner), பிறீத்தா ஆகியோரின் அன்பு மாமனும், லக்ஷிதா, அபினா, வைஷ்ணவி, விதுஜன், நலினா, சைகீதன், சையீஷா, சன்யுக்தா, ரம்சே, தீமகி, நிமேஷ், ஆருஷி ஆகியோரின் அன்புப் பேரனும் சோதிலிங்கம், சுந்தரலிங்கம், சாந்தலிங்கம், சாந்தலக்ஷ்மி ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.07.2017) ஞாயிற்றுக் கிழமை மு.ப.09 மணிக்கு மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு மு.ப.11.30 மணிக்கு கிரியைகள் நடைபெற்று கல்கிசை பொதுமயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**JEYAROOPAN - 077 369 3946**
**11, 5/5, INITIUM ROAD, DEHIWALA.**
**தகவல்: குடும்பத்தினர்**
**-077 455 3576, 077 744 4672**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டக்ளஸின்...

குப் பொதுத் திகதியொன்றை ஒதுக்குதல் குறித்து ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா கொண்டுவரப்பட்ட தனிநபர் பிரேரணையை வழிமொழிவதற்குச் சபையில் எவரும் முன்வரவில்லை. இதனால் அதை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டது.

நாடாளுமன்றம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குச் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. தினப்பணிகள் முடிவடைந்த பின்னர் தனிநபர் பிரேரணைகள் மீதான விவாதம் ஆரம்பமானது.

தனிநபர் பிரேரணைகளில் டக்ளஸின் மேற்படி பிரேரணையும் உள்ளடங்கியிருந்தது. அதை முன்வைத்து அவர் உரையாற்றினார். டக்ளஸின் உரை முடிவடைந்ததும், அதை வழிமொழியுமாறு சபாநாயகர் கோரிக்கை விடுத்தார். எனினும், வழிமொழிவதற்காக ஏற்பாடு செய்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் திலகராஜ் அந்த வேளையில் சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை.

அவரின் உரை முடிந்ததும், பிரேரணையை வழிமொழிவதற்கு அவையில் இருந்த உறுப்பினர்கள் முன்வரவில்லை. அவையில் இருந்த ஏனைய உறுப்பினர்களும் அது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை. இதனால் அது விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

தனிநபர் பிரேரணையொன்றைச் சம்பந்தப்பட்ட உறுப்பினர் முன்வைத்து உரையாற்றிய பின்னர் அதை மற்றுமொரு உறுப்பினர் வழிமொழிவார். சம்பந்தப்பட்ட அமைச்சரோ அல்லது பிரதி அமைச்சரோ பதிலளிப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்றத்தில் நேற்று கேள்வி பதில் நேரம் 13 நிமிடங்களுக்குள்ளேயே முடிவடைந்துவிட்டது. இதனால்தான் வழிமொழிவதாகக் கூறியிருந்த நாடாளுமன்ற உறுப்பினரின் வருகையில் தாமதம் ஏற்பட்டது எனக் கூறப்படுகின்றது. (த)

## தமிழ்...

வுப் பிரிவினரால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

'வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் உப பொலிஸ் பரிசோதகராகக் கடமையாற்றி வரும் சிறிகஜன் என்பவர் இந்தியாவுக்குச் செல்ல முயன்ற போது குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மறித்து திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். விடுமுறையில் இருக்கும்போதே இந்தியாவுக்குச் செல்ல அவர் முயன்றுள்ளார். அத்துடன், வித்தியா கொலை வழக்குடன் தொடர்புடையவர் என்பதால் அவர் திருப்பி அனுப்பப்பட்டார்' என்று பொலிஸ் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்தது.

திருட்டு நகைகளை கொள்வனவு செய்பவர்களிடமிருந்து யாழ்ப்பாணப் பொலிஸார் சிலர் தரகுப் பணம் பெறுவதாக குற்றச்சாட்டு எழுந்திருந்தது. இதன் பின்னர், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன், வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றப்பட்டார். இது வழமையான இடமாற்றம் என்று பொலிஸ் தரப்பினர் தெரிவித்திருந்தனர்.

வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய சிறிகஜன், வெளிநாடு செல்வதற்குரிய அனுமதியைப் பெற்றிருக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, வித்தியா கொலை வழக்கு தொடர்பான தீர்ப்பாயத்தின் முன்னிலையில் சாட்சியமளித்திருந்த சட்டத்தரணி வி.ரி.தமிழ்மாறன், உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் கேட்டுக் கொண்டதற்கு அமைவாகவே சந்தேகநபரான சுவிஸ்குமாரை தனது வாகனத்தில் ஏற்றிக் கொண்டு வந்து யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்ததாகச் சாட்சியமளித்திருந்தார். (வ-5-26)

## 300 பொருத்து...

ளரினால், யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்குக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பொருத்து வீடு அமைக்கவேண்டாம் என்று வடக்கு மக்களும், அரசியல் கட்சிகளும் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் விவாதம் கூட நடைபெற்றிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொருத்து வீடு அமைக்கவேண்டாம் என்று வலியுறுத்தியிருந்தது. இந்த விவாதத்தில் கருத்துத் தெரிவித்திருந்த அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், கூட்டமைப்பினர் எப்படிக் கூச்சல் போட்டாலும் பொருத்து வீடு நிர்மாணிக்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில், 300 பொருத்து வீடுகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும், அதற்குரிய பயனாளிகள் பெயர்ப் பட்டியலை அனுப்பி வைக்குமாறும், மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் கோரியுள்ளார்.

வீட்டுத் திட்டம் பெறுவதற்குத் தகுதியுள்ள, பொருத்து வீட்டை விரும்புவர்களது பெயர்களைத் தெரிவு செய்து அனுப்புவதற்கு யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகத் தெரியவருகின்றது. (த-5-101)

## கோத்தாவை...

எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டது.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் கைதிகள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இதுவரை கூட்டரசு நீதியைப் பெற்றுத் தரவில்லை என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் நடந்த இந்தப் படுகொலைகளுக்கு நீதியை பெற்றுத் தருவோம் என்று வாக்குறுதி வழங்கிய தற்போதைய அரசு இதுவரை நீதியை பெற்றுக்கொடுக்காது பாராமுகமாக செயற்படுகின்றது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறையில் 27 கைதிகள் படுகொலை செய்யப்பட்டனர். (ற)

## பணியை...

யாழ்ப்பாணம் மாநகர சபை அலுவலகத்தின் கட்டட அனுமதி வழங்கல் பகுதியில் பணியாற்றிய பெண் அலுவலர் ஒருவர் 23 லட்சம் ரூபா மோசடி செய்தார் என்று கடந்த ஆண்டு கண்டறியப்பட்டது. மோசடிக் குற்றச்சாட்டில் அவர் கடந்த ஓகஸ்ட் மாதம் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டார். அவருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கையை யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் முன்னெடுத் தார். அத்துடன், அவருக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த விசாரணைகள் இடம்பெறும் காலப்பகுதியில் அந்தப் பெண் அலுவலரால் ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா மட்டுமே மீளச் செலுத்தப்பட்டது. மேலும் 21 லட்சத்து 20 ஆயிரம் ரூபா நிலுவைப் பணம் உள்ளது . அதனைச் செலுத்துவதற்கான வழிவகை இல்லாத காரணத்தால் தனது பணியை மீளவும் வழங்கும் பட்சத்தில் மாதாந்தச் சம்பளத்திலிருந்து தவணையடிப்படையில் வழங்குவதாக யாழ்ப்பாண மாநகர ஆணையாளரிடம் அவர் எழுத்துமூலம் கேட்டுள்ளார். (வ- 101)

## வடக்கு...

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சருடன் எப்போது நேரடிச் சந்திப்பு இடம்பெறும் என்பது தொடர்பில், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபை விவகாரம் தொடர்பில், முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மின்னஞ்சல் ஊடாக எனக்கு விடயங்களை அறியத் தந்துள்ளார். அந்த மின்னஞ்சலில் நேரடிச் சந்திப்புத் தொடர்பிலும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விரைவில் இந்தச் சந்திப்பு நடைபெறும். ஆனால் எப்போது என்று இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

வடக்கு மாகாண சபை விவகாரத்தை ஊதிப் பெருப்பிக்கக் கூடாது. இதற்கு விரைவில் முடிவு கட்டப்பட வேண்டும் - என்றார். (த-5)

## மயிலிட்டித்துறை...

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், யாழ்ப்பாண மாவட்டச் செயலரிடம் விளக்கம் கோரிக் கடிதம் அனுப்பியுள்ளார்.

காணி விவகாரம் தனக்குரியது எனவும், இதனால் மயிலிட்டிக் காணி விடுவிப்பு நிகழ்வுக்குத் தன்னை ஏன் அழைக்கவில்லை என்றும், இதற்குரிய விளக்கத்தை வழங்குமாறும் தனது கடிதத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கோ[illegible] ளார்.

இதேவேளை, இந்த நிகழ்வு இராணுவத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அரசியல்வாதிகள் எவருக்கும், இராணுவத்தினரோ அல்லது மாவட்டச் செயலகத்தினரோ அழைப்பு விடுத்திருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில், கடந்த ஞாயிற்றுக்கிழமை முஸ்லிம் மக்களின் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடலும் நடைபெற்றிருந்தது. இந்தக் கலந்துரையாடலுக்கும் தனக்கு ஏன் அழைப்பு விடுக்கப்படவில்லை என்று, முதலமைச்சர் மாவட்டச் செயலரிடம் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## குடும்பத் தலைவர்...

சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று அதிகாலை சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை கடந்த முதலாம் திகதியில் இருந்து நேற்று வரையான காலப்பகுதியில் வவுனியாவில் 25 பேர் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. வெளிமாவட்டங்களுக்குச் சென்று வருவோரே அதிகம் டெங்குத் தொற்றுக்குள்ளாகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறானவர்களுக்குக் காய்ச்சல் அறிகுறி தென்பட்டால் உடனடியாக மருத்துவமனையை நாட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நேற்று உயிரிழந்தவர் காலம் தாழ்த்திச் சிகிச்சை பெறச் சென்றதாலேயே உயிரிழப்பு ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

## 10 ஆண்டு...

ஜெயராம் இராமநாதன் 2007ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இரகசியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அன்றிலிருந்து அவர் தடுத்துவைக்கப்பட்டிருந்தார்.

கொழும்புலிருந்து கட்டுநாயக்க செல்லும் தொடருந்துப் பாதையை வெடிகுண்டு வைத்து தகர்க்கச் சதித் திட்டம் தீட்டியமை இராணுவத்தின் உயர் அதிகாரியின் நடவடிக்கைகளை வேவு பார்த்து விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமைக்குத் தகவல் வழங்கியமை, கடும்சேதம் விளைவிக்க கூடிய வெடிகுண்டுகளை உடைமையில் வைத்திருந்தமை ஆகிய 3 குற்றச்சாட்டுக்களை முன்வைத்து ஜெயராம் இராமநாதனுக்கு எதிராக தனித்தனியே குற்றப்பத்திரிகைகள் கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்குகளின் முக்கிய சான்றாக எதிரியால் சுயவிருப்பில் பொலிஸாருக்கு வழங்கப்பட்டதாக குற்ற ஒப்புதல் வாக்குமூலம் வழக்குத் தொடுனரால் முன்வைக்கப்பட்டது. அது சுயமாக வழங்கப்பட்டதா? என்பதை உறுதிப்படுத்த நடைபெற்ற உண்மை விளம்பல் விசாரணையில்அரச தரப்பில் சாட்சியமளித்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், மொழி பெயர்ப்பாளர் மற்றும் தட்டெழுத்தாளர் ஆகியோர் வழங்கிய சாட்சியங்களில் பல முரண்பாடுகள் உள்ளமை உள்ளிட்ட விடயங்களைக் குறுக்கு விசாரணையில் எதிரியின் சார்பில் முன்னிலையாகிய மூத்த சட்டத்தரணி கே.வி தவராசா நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

"குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எதிரியிடமிருந்து சுயமாக பெறப்படவில்லை. எதிரிக்கு எதிராக வேறு சான்றுகள் முன்வைக்கப்பட வேண்டும்" என்று கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க கட்டளையிட்டார்.

எதிரிக்கு எதிராக வேறு சான்றுகள் இல்லையென அரச சட்டத்தரணி நீதிமன்றுக்கு அறிவித்ததையடுத்து நீதிபதி, எதிரியை மூன்று வழக்குகளிலிருந்தும் விடுதலை செய்தார். வழக்குத் தொடுனர் தரப்பில் அரச சட்டத்தரணி விராஜ் வீரசூரியவும் எதிரி தரப்பில் சட்டத்தரணிகளான தர்மஜா தம்பிராசா, அனோமா பிரியதர்சினியுடன் மூத்த சட்டத்தரணி கே.வி தவராசா ஆகியோர் முன்னிலையாகினர். (வ-21)

## உறுதியும்...

புதிய அரசமைப்புக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், மகிந்த தலைமையிலான பொது எதிரணியும் கடும் எதிர்ப்பை வெளியிட்டன. இந்த இரு தரப்பினரையும் சமரசப்படுத்திப் பொதுவானதொரு இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்குத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கடும் மு[illegible]ளை மேற்கொண்டு வந்தார். இந்த நிலையில், புதிய அரசமைப்போ அல்லது அரசமைப்பு திருத்தமோ நாட்டுக்கு அவசியமில்லை என மகாநாயக்க தேரர்கள் அரச தலைவரிட்டம் கோரிக்கை விடுத்தனர். இதனால், அரசமைப்பு விவகாரம் சூடுபிடித்துள்ளது.

மகாநாயக்க தேரர்களை நேற்றுமுன்தினம் சந்தித்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, அவர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் அறிவிப்புகளை விடுத்துள்ளார்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ஆளுங்கட்சிக் கூட்டத்தை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசமைப்பின் முக்கியத்துவம் குறித்து மக்களுக்கு விளக்கமளித்தல் உட்பட மேலும் சில முக்கிய முடிவுகள் இதன்போது எடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, புதிய அரசமைப்பு விவகாரத்தை வைத்து அரசுக்கு எதிராகப் பிரசாரம் செய்து, ஆட்சிக் கவிழ்ப்புக்கு அடித்தளமிடும் முயற்சியில் மகிந்த அணியும் இறங்கியுள்ளது. சிவில் அமைப்புகளும் நெருக்கடிகளைக் கொடுத்து வருகின்றன. இதனால் அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. (த)

## எத்தகைய...

தார்.

"புதிய அரசமைப்புக் குறித்து யாருமே அச்சப்படத் தேவையில்லை. இதனை அமைப்பதற்கு மக்கள் அரசுக்கு ஆணை வழங்கியுள்ளதால் இந்த விடயத்தை அரசால் உதாசீனம் செய்ய முடியாது.

புதிய அரசமைப்பு பௌத்த மதத்துக்குக் ச[illegible] தல் முன்னுரிமை அளிக்கப்படுவதுடன் ஏனைய மதங்களுக்கும் உரிய மரியாதை வழங்கப்படும். எனவே நாட்டில் அமைதியான வழிமுறைகளில் நாம் அனைவரும் அரசமைப்பை உருவாக்கத்தில் பங்கு கொள்ளவேண்டும்" என்று தலைமை அமைச்சர் மேலும் தெரிவித்தார். (வ21)

## கொக்குவில்...

மேலும் பாடசாலைக்கு அதிபர் சேவை தரம் 1இல் உள்ள ப.கணேசனை நியமிக்க ஆவன செய்யுமாறு வடக்கு மாகாண முதலமைச்சரிடம் பழைய மாணவர் சங்கம் கோரியுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு நேற்றைய தினம் புதிய அதிபர் நியமிக்கப்பட்டதை பாடசாலையின் பழைய மாணவர்கள் எதிர்ப்பதோடு இதனை ஆட்சேபித்து திங கட் கிழமை பாடசாலையை புறக்கணிப்பதற்கும் ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு நாளைமறுதினம் நடைமுறைக்கு வரும் வகையில் புதிய அதிபர் ஒருவர் வடக்கு மாகாண கல்வி அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான நியமனக் கடிதம் மாகாண கல்விச் செயலாளரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அதிபரின் நியமனத்தை கல்வி அமைச்சு உடனே நிறுத்த வேண்டும் என வலியுறுத்தி நாளைமறுதினம் திங்கட்கிழமை மாணவர்கள் கற்றல் நடவடிக்கையை புறக்கணிக்குமாறு கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் துண்டறிக்கை மூலம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (வ-101)

## நயினை...

ஆலயத்துக்குச்செல்லும்பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் வசதி கருதி யாழ்ப்பாணம் குறிகாட்டுவான் இடையே இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்து சேவைகளும் குறிகாட்டுவான் நயினாதீவு இடையே படகுச் சேவைகளும் தொடர்ச்சியாக இடம் பெறும்.

படகுகளில் பயணிக்கும் அனைவரும் பாதுகாப்பு அங்கிகளை அணிவதும் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளன. படகுகளில் பயணிகளுடன் பொருள்களை ஏற்றுவதும் தற்போது தவிர்க்கப்பட்டுள்ளது. கடற்பாதையில் மட்டுமே பொருள்கள் மற்றும் வாகனங்களை ஏற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

நயினாதீவு இந்து கலாசார அபிவிருத்திச் சபையால் இன்று நடத்தப்படும் 45ஆவது வருட அருள் பிரசாதம் வழங்கும் நிகழ்வும் அம்பாள் தேரில் வீதியுலா வந்தடைந்த பின்னர் இடம்பெறுகிறது. சிறப்பான முறையில் தயாரிக்கப்பட்ட அருள் பிரசாதம் பிளாஸ்ரிக் கிண்ணத்தில் பொதி செய்யப்பட்டு அடியவர்களுக்கு வழங்கப்படும் என்று நயினாதீவு இந்து கலாசார அபிவிருத்திச் சபையினர் தெரிவித்தனர். (வ-4 17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

**ஐக்கியம் வி.க. கபடித் தொடர்**

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் கபடித் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஐக்கியம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வல்வை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் துள்ளுமீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சித்தி விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**சென். அன்ரனிஸின் கால்பந்துத் தொடர்**

இரணைப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வெற்றிலைக்கேணி சென். செபஸ்ரியன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வவுனியா ஈஸ்வரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இரணைமாதாநகர் சென். மேரிஸ் அணி மோதவுள்ளது. மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக மோதவுள்ளது. இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழக மோதவுள்ளது. (ம-23)




# இமையாணன் அ.த.க.பா. தங்கத்தை தனதாக்கியது

யாழ்ப்பாணம், ஜூலை 8

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற 16 வயது ஆண்கள் பிரிவு தட்டெறிதலில் இமையாணன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை தங்கப்பதக்கத்தை தனதாக்கியது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் இமையாணன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த எம்.திவன்சயன் 45.68 மீற்றர் தூரத்துக்கு ஏறித்து தங்கப்பதக்கத்தினை சுவீகரித்துடன் வர்ண விருதினையும் பெற்றார்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த எ.மீஷட் மகிபன் 39. 03 மீற்றர் தூரத்திற்கு ஏறிந்து வெள்ளிப்பதக்கத்தைச் சுவீகரித்துடன் வர்ண வருதினையும் பெற்றார்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த பி.மிதுன் 38.82மீற்றர் தூரத்திற்கு எறிந்து வெண்கலப்பதக்கத்தைச் சுவீகரித்ததுடன் வர்ண விருதினையும் பெற்றார். (ம-23)

# இளைஞர், யங்கம்பன்ஸ் அணிகள் அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

உதயதாரகை விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம், கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்களுக்கு முன்னேறியுள்ளன.

பருத்தித்துறை கால்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா 4 கோல்களைப் பதிவுசெய்தபடியால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் திக்கம் இளைஞர் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா 2 கோல்களைப் பெற்றிருந்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:1 என்ற கோல் கணக்கில் யங்கம்பன்ஸ் அணி வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (ம-108)



# ஆவரங்கால் மத்தி. வென்றது கிண்ணம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

அரியாலை சனசமூக நிலையம் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.

அரியாலை சனசமூக நிலையத்தின் 68 ஆவது ஆண்டுவிழாவை முன்னிட்டு இந்தத் தொடர் நடத்தப்பட்டது. இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதியது.

ஐந்து செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 25:21, 27:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது ஆவரங்கால் மத்தி. மூன்றாவது செற்றை 25:09 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஆவரங்கால் இந்து இளைஞர் தனதாக்கியது. நான்காவது செற 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஆவரங்கால் மத்தியின் வசமாக முடிவில் அந்த அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-23)



# ராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற 18 வயதுப் பிரிவு பெண்களுக்கான நீளம் பாய்தலில் கிளிநொச்சி ராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான இந்தத் தொடர் எதிர்வரும் திங்கட்கிழமை வரை நடைபெறுகிறது.

கிளிநொச்சி ராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த பி.பவித்ரா 5.37 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வர்ண விருதுடன் தங்கப்பதக்கத்தைத் தனதாக்கினர். கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த என்.விதுசனா 5.13 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப்பதக்கத்தை பெற்றதுடன் வர்ண விருதினையும் தனதாக்கினார். உடுப்பிட்டி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஏ.அபினயா 4.88 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தை வென்றார். (ம-23)

# ஈட்டி எறிதல் போட்டி; சோமஸ்கந்தா தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் நேற்றுநடைபெற்ற 20 வயதுபெண்கள் பிரிவு ஈட்டி எறிதலில் புத்தூர் சிறி சோமஸ்கந்தாக் கல்லூரிக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியைச் சேர்ந்த வை.யாழினி 26.46 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வர்ண விருதுடன் தங்கப்பதக்கம் வென்றார்.

வவுனியா தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயத்தை சேர்ந்த எம். சாருசா 25.82 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தைச் சுவீகரித்துடன் வர்ண விருதையும் வென்றார். கிளிநொச்சி வட்டக்கச்சி மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ்.நிதுஜா 25.34 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினர். (ம-23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாஜனக் கல்லூரியின் மிரட்டல் தொடருமா?

யாழ்ப்பாணம், ஜூலை 8
பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்டத் தடகளத் தொடரில் 12 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 50 மீற்றர் அஞ்சலோட்டத்தில் மகாஜனக் கல்லூரியின் சிறப்பான பெறுபேறு இன்றும் தொடருமா என் பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இந்தப் போட்டிகள் நடைபெற்ற வருகின்றன. நேற்று நடைபெற்ற 12 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 50 மீற்றர் தெரிவுப் போட்டியில் சிறப்பான அஞ்சல் கோல் மாற்றத்தால் ஏனைய வீராங்கனைகளை விட சுமார் 15 மீற்றர் முன்னிலையில் தமது பெறுபேற்றைக் காட்டியிருந்தனர். பார்வையாளர்கள் அனைவரையும் கவர்ந்த இந்த ஓட்டத்தின் இறுதிப் போட்டி இன்று நடைபெறவுள்ளதால் அனைவரது எதிர்பார்ப்பும் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி மீது விழுந்துள்ளது.

(ம-422)





# தீவக கல்வி வலயம் தடகளத்தில் சாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 8
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் முன்னேற்றம் காண்கிறது தீவக கல்வி வலய அணி.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இதில் தீவக கல்வி வலயம் நேற்றும் நேற்றுமுன்தினமும் நடைபெற்ற தடகளத்தில் 12 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான உயரம் பாய்தலில் நயினாதீவு சிறிகணேசா கனிஷ்ட வித்தியாலயத்தை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.துயாளினி தங்கப் பதக்கத்தையும் நேற்று நடைபெற்ற 18 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தலில் வேலணை மத்திய கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த பி.சுபீஜன் தங்கப் பதக்கத்தையும், நெடுந்தீவு மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.திருட்சிகா 800 மீற்றர் மற்றும் 200 மீற்றர் என்பவற்றில் வெள்ளிப் பதக்கத்தையும், 12 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு நீளம் பாய்தலில் நயினாதீவு சிறிகணேசா கனிஷ்ட வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எம்.முப்லிகா வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற தடகளத்தில் தீவகம் கல்வி வலயம் இரு பதக்கங்களை மாத்திரம் கைப்பற்றியது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் நடப்பு வருடத்தில் அந்த அணி மிகச் சிறந்த முன்னேற்றத்தைக் கண்டுள்ளது.

(ம-422)

# ஆண்கள் 5,000 மீற்றரில் வவு. தமிழ் மத்தி தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 8
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்கள் பிரிவு 5ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணி தங்கப்பதக்கத்தைத் தனதாக்கியது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இந்தப் போட்டி நடைபெற்றது. வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.கிந்துசன் 16 நிமிடங்கள் 41 செக்கன்கள் 30 மில்லிசெக்கனில் ஒடிமுடித்து தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார். அவருக்கு வர்ண விருதும் கிடைத்தது. ஒட்டிசுட்டான் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பி.ஜனந்தனன் 17 நிமிடங்கள் 15 செக்கன்கள் 40 மில்லிசெக்கன் களில் ஒடிமுடித்து வெள்ளிப் பதக்கத்தையும் நெல்லியடி மத்திய கல்லூரியைச் சேர்ந்த எம்.அனோஜன், 17 நிமிடங்கள் 19 செக்கன்கள் 80 மில்லிசெக்கனில் ஒடிமுடித்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

(ம-23)



# பெண்களுக்கான 5,000: கற்சிலை மடுவுக்கு தங்கப்பதக்கம்



யாழ்ப்பாணம், ஜூலை 8
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் பிரிவு 5ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் கற்சிலைமடு அரசினர் தமிழ்கலவன் பாடசாலைக்கு தங்கப்பதக்கம் கிடைத்தது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இந்தப் போட்டிகள் நடைபெற்றன. பெண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் கற்சிலைமடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த எஸ்.விதுசனா 21 நிமிடங்கள் 31 செக்கன்கள் 4 மில்லி செக்கன்களில் ஒடிமுடித்து தங்கப்பதக்கத்தைச் சுவீகரித்தார். உடையார் கட்டு மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த சுடர்மதி 22 நிமிடங்கள் 24 செக்கன்கள் 40 மில்லி செக்கன்களில் ஒடிமுடித்து வெள்ளிப் பதக்கத்தையும், நெல்லியடி மத்திய கல்லூரியைச் சேர்ந்த பி.லக்சனா 22 நிமிடங்கள் 32 செக்கன்களில் ஒடிமுடித்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-23)

# சுண்டுக்குழிக்கு தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 8
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 10ஆவது தடகளத் தொடர் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற 20 வயது பெண்கள் பிரிவு 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி அணிக்கு தங்கப்பதக்கம் கிடைத்தது. சுண்டுக்குழி அணி 57.10 செக்கனில் ஒடி முடித்து தங்கப்பதக்கத்தையும், வவுனியா சைவபிரகாச மகளிர் கல்லூரி அணி 57.09 செக்கனில் ஒடி முடித்து வெள்ளிப் பதக்கத்தையும், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணி 58.90 செக்கனில் ஒடி முடித்து வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

(ம-23)

## உயரம்பாய்தலில் மடுக்கரை அ.த.க.

யாழ்ப்பாணம், ஜூலை 8
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் 14 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உயரம் பாய்தலில் மன்னார் மடுக்கரை அ.த.க. பாடசாலையைச் சேர்ந்த என்.கோகுலன் தங்கப் பதக்கம் வென்றார்.



யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இந்தப் போட்டிகள் நடைபெற்றது. 14 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உயரம் பாய்தலில் மன்னார் மடுக்கரை அ.த.க. பாடசாலையைச் சேர்ந்த என்.கோகுலன் 1.56 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தைத் தனதாக்கினார். சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியைச் சேர்ந்த ஆர்.கிசான் 1.52 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.அபிமன்யு 1.50 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் தமதாக்கினர்.

(ம-108)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Nivithra

## இலவச அழகுக்கலை பயிற்சி
(நிபந்தனைக்குட்பட்டது)

நிவித்ரா அழகுக்கலை நிலையத்தின் புதிய இலவச அழகுக் கலை பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன. இப்பயிற்சியில் இணைய விரும்புவோர் எமது அறிமுக வகுப்பில் கலந்து கொண்டு பதிவுகளை மேற்கொள்ளவும். உங்கள் விவரங்களை கீழ்வரும் இலக்கத்திற்கு SMS அனுப்பி முற்பதிவுகளை மேற்கொள்ளவும்.

**அறிமுக வகுப்பு விவரம்**

திகதி : 14.07.2017(வெள்ளிக்கிழமை)
நேரம் : 10.00 மணி
இடம் : நிவித்ரா அழகுக்கலை மற்றும் பயிற்சி நிலையம்
இல.340 K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
(இலங்கை புத்தகசாலை மற்றும் விஷ்ணுபவன் உணவகத்திற்கு நடுவில்)

**தொடர்பு : 077 771 2604**

**பயிற்சி நெறி விவரங்கள்**

Basic Certificate Course
Advance in Beauty Threapy & Hair Dressing
Diploma in Beauty Threapy & Hair Dressing
Flower Arrangement Course
Certificate in cake icing
Cookering course

முதல் இணையும் 10 மாணவர்களுக்கு
Cake Icing முற்று முழுதாக இலவசம்.

## மரண அறிவித்தல்

### சபாரத்தினம் இராசரத்தினம் (காந்தி)



பிறப்பு 01.05.1948 இறப்பு 07.07.2017

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் இராசரத்தினம் நேற்று (07.07.2017) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் பஞ்சவர்ணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தளையசிங்கம், சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வ ரஞ்சிதத்தின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் செல்வரத்தினம், யோகரத்தினம், இந்திராணி காலஞ்சென்ற தவமணிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் புவனேஸ்வரி, சுலோசனாதேவி, ஓம்சிவசக்தி, கணேசபாலன், சந்திரகாந்தன், காலஞ்சென்ற நவரத்தினராஜா மற்றும் பீதாம்பரம், அகத்தியர், கபிலராஜா, பூமணி, சிவயோகம், இரத்தினேஸ்வரி, நவநீதம், பவளகேசரி (வினோ சித்தப்பா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுரேன், ஹரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தசின்றாவின் அன்பு மாமனும் கிஷான், சொபியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.07.2017) ஞாயிற்றுக் கிழமை மு.ப.09 மணியளவில் அரசடி அம்மன் வீதி, திருநெல்வேலியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.10.00 மணியளவில் திருநெல்வேலி, பால்ப்பண்ணை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி அம்மன் வீதி, திருநெல்வேலி.

தகவல்: குடும்பத்தினர்
-077 8151798

IIS

22 வருட கால கல்வி அனுபவத்துடன் இணைந்து
எதிர்காலத்தை உங்களுடையதாக்குங்கள்

PEARSON BTEC

HND

CIVIL ENGINEERING
BUSINESS MANAGEMENT
COMPUTING & SYSTEMS DEVELOPMENT



புதிய பிரிவுகள் ஆரம்பம் 7.05.2017

IIS தனித்துவம்......

- மூன்றாம் நிலைக்கல்வி, தொழில்கல்வி ஆணைக்குழுவின் (TVEC) அனுமதி
- PEARSON பிரதிநிதிகளின் நேரடி வருகையும் கண்காணிப்பும்
- உயர்கல்விக்கே உரித்தான வளாகம்
- தொழில்சார் பயிற்சியுடனான கற்கைநெறி
- இலகுதவணை முறையிலான கட்டண வசதி
- வேலைவாய்ப்புக்களை இலகுவாக பெறக்கூடிய சந்தர்ப்பங்கள்

IIS CITY CAMPUS

200, சிவன் பண்ணை வீதி
யாழ்ப்பாணம்
021 222 8080 , 021 4900 900

Hotline 071 777 5666



## விராட் கோக்லி அபார சதம் தொடரை வென்றது இந்தியா

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடரின் இறுதி ஆட்டத்தில் இந்திய அணித் தலைவர் கோக்லி சதம் விளாச அந்த அணி 3:1 என்ற அடிப்படையில் தொடரைக் கைப்பற்றியது.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. முதல் நான்கு ஆட்டங்களின் முடிவில் இந்தியா 2:1 என்று முன்னிலையில் (முதலாவது ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது) இருந்தது. இதனால் குறைந்த பட்சம் தொடரை சமநிலையில் முடிக்க வேண்டுமாயின் இந்த ஆட்டத்தில் வெற்றி பெற வேண்டும் என்ற நெருக்கடி தீவுகளுக்கு இருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் துடுப்பெடுத்தாடியது. இந்திய அணியின் சிறப்பான பந்துவீச்சால் அந்த அணி 205 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தப்பட்டது. ஹோப் பெற்ற 51 ஓட்டங்களே அதிபட்சம். அவரை விட கெய்ல் ஹோப் 46 ஓட்டங்களையும், கோல்டர் 36 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணிக்கு ஆரம்ப வீரர்களான ரகானே 39 ஓட்டங்களுடனும், தவான் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து ஏமாற்றினாலும் கோக்லி சதம் கடந்து அணியின் வெற்றிக்கு வித்திட்டார். அவருக்கு பக்கபலமாக நின்ற டினேஸ் கார்திக் ஆட்டமிழக்காமல் 50 ஓட்டங்களைப் பெற்றார். (ம)

### சிறுநீரகம் உடன் தேவை

**$B^+$ or $B^-$ or $O^+$ or $O^-$ வகைச் சிறுநீரகம் உடன்தேவை.**
**வயதெல்லை - ஆண் 25 இற்கு மேல்**
**பெண் 30 இற்கு மேல்**
**தகுந்த சன்மானம் வழங்கப்படும்.**

**தொடர்பு - 077 087 8973, 076 627 7485**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### விசேட பொதுக்கூட்டம்

**காலம் : 23.07.2017 காலை 9.30 மணி**
**இடம் : கல்லூரி தம்பர் மண்டபம்**

பழைய மாணவ அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

- செயலாளர் -

### வேலைவாய்ப்பு

**யாழ்.நகரில் அமைந்துள்ள (கச்சேரி அருகில்) நிறுவனம் ஒன்றுக்குப் பணியாளர் தெரிவு நடைபெறவுள்ளது.**

1. கணினி வடிவமைப்பாளர் (ஆண், பெண்)
2. கணினி தட்டச்சு செய்பவர் (ஆண், பெண்)
3. வெளிக்கள பணியாளர்
4. அலுவலக உதவியாளர்
5. பாதுகாப்பு உத்தியோகத்தர்

மேற்படி பதவி நிலைகளுக்கான தகைமை உள்ளவர்கள் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**021 450 5645, 077 726 1319**

### WIN Repair

சகல விதமான குளிர்சாதனப் பெட்டிகளும், A/Cகளும் வீடுகளுக்கு வந்து திருத்திக்கொடுக்கப்படும்.
தொடர்பு - 077 9648 942

### வங்கியியற் கற்கைநெறி

**CBF/IABF DBF/DABF**

→ அனைத்துப் பாடங்களும் ஒரே இடத்தில்
→ எமது வழமையான ஆசிரியர் குழாம்.
→ ஆரம்பம் - 08.07.2017 சனிக்கிழமை.

தொடர்புகளுக்கு: K.ஸ்ரீபரன் (கணக்கீட்டு ஆசான்) யாழ்நகர்.

**077 459 8430**

### விவசாய விஞ்ஞானம் கருத்தரங்கு - 2017

**இடம்** - பொருளியற் கல்லூரி யாழ்ப்பாணம்
**திகதி** - 12/7, 13/7, 14/7
**நேரம்** - பி.ப. 2.00 - 5.00
**விடயம்** - பாடரீதியான வரைவிலக்கணங்கள், வரிப்படங்கள், அட்டவணைகள் மற்றும் சமன்பாட்டு விளக்கங்கள்.

ஆசிரியர் - S.சஜீவன்
பொருளியற் கல்லூரி யாழ்ப்பாணம்.
தொடர்பு - 077 220 9651

உ
சிவமயம்

## அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 08.06.2017 அன்று இறைபதமடைந்த எமது தாயார்

அமரர் **இரத்தினாம்பிகை சோமசுந்தரம்**

அவர்களின்

அந்தியேட்டிக் கிரியைகள் 08.07.2017 இன்று (சனிக்கிழமை) காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் தொடர்ந்து வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. 10.07.2017 (திங்கட்கிழமை) அன்று 12.00 மணியளவில் சொர்ணாம்பிகை மண்டபத்தில் (TCT Multi Trade Center,Nallur) அன்னாரது ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திதி.: பூர்வபட்ச சதுர்த்தசி

மண்ணில் மலர்ந்தது 02.05.1934
விண்ணில் கலந்தது 08.06.2017

இதனை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்

80,அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org